Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර
பக்கம் 24 ரூபா 30.00
ஜனவரி 16 - 22, 2014

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1049

# ஜெனீவாத் தீர்மானங்கள் கடினமானதாக அமையுமா?





# ஆயுத வல்லரசாகும் ஜப்பான்

## மகாவலியும் நடக்கும் மர்மங்களும்



## 'ஆவா' கொடுத்த அதிர்ச்சி!



## அடையாளத்தை பேணவேண்டிய மலையக மக்கள்!

## தைப்பூசம்

தைப்பூசம் என்பது முருகப்பெருமானுக்கு கொண்டாடப்படும் விழாவாகும். தைப்பூசம் பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிவரும் நன்நாளில் முருகனுக்கு எடுக்கப்படும் விழாவாகும். நட்சத்திர வரிசையில் பூசம் எட்டாவது நட்சத்திரமாகும். இவ்விழா முழு நிலவு பூச நட்சத்திரத்திற்கு வரும் நேரம் நடத்தப்படுகிறது. தைப்பூசத்தன்றுதான் உலகம் தோன்றியதாக ஐதீகம் உண்டு. இப்படி இன்னும் பல ஐதீகக் கதைகள் உண்டு.

தைப்பூசத்தன்று அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு, திருநீறு, உருத்திராட்சம் அணிந்து சிவபெருமானை வழிபடுவர். தேவாரம், திருவா-சகம் போன்றவற்றைப் பாராயணம் செய்வர். உணவு உண்ணாமல் மூன்றுவேளைகளிலும் பால், பழம் சாப்பிடலாம். மாலையில் கோயிலுக்குச் சென்று சிவபூஜையில் பங்கேற்று சிவனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்வர்.

தைப்பூசம் ஒவ்வொரு நாடுகளிலும் வெவ்வேறு விதமாகக் கொண்டாடப் படுகிறது. அந்தவகையில் எமது நாட்டில் புதிர் எடுப்பர். நெற்கதிர்களைக் கொண்டு வந்து அதனைக் குடும்பத்தலைவி பெற்று சுவாமி அறையில் வைப்பார். அதில் இருந்து சில நெல்மணிகளை எடுத்து உமியை நீக்கி அந்த அரிசியைப் பசும்பாலுடன் கலந்து வாழைப்பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி அதில் இட்டு குடும்பத்தினருக்குப் பரிமாறுவர். அந்த அரிசியுடன் வீட்டிலுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு சமைக்கப்படும்.

## அருள் வரும்வரை காத்திருப்போம்

ஆன்மீகம்

'உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன?' என்று ஒருவர் மற்றவரிடம் கேட்டார். அதற்கு அவர், இவ்வுலகில் நிகழும் அனைத்தும் அவரைச் சார்ந்தது என்று எண்ணி இறை-வனைத் தொழுவேன். நான் மேற்கொள்ளும் அனைத்து வேலைகளும் என்னைச் சார்ந்தவை என்று என்னை நம்புவேன்" என்றார். தங்கள் கடமைகளிலிருந்து தவறாதவர்களை இறைவன் என்றும் கைவிடுவதில்லை என்று நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், நம்மில் எத்தனை பேர் அதைப் பின்பற்றத் தயாராக இருக்கிறோம்?

'கிறிஸ்துவின் இரத்தம், வாழும் கடவுளுக்கு நாம் வழிபாடு செய்யுமாறு, சாவுக்கு அழைத்துச் செல்லும் செயல்களிலிருந்து நம் மனச்சான்றை எத்துணை மிகுதியாய்த் தூய்மைப்படுத்துகிறது! ஏனெ-னில் என்றுமுள்ள தூய ஆவியினால் தம்மைத்தாமே கடவுளுக்கு மாசற்ற பலியாகக் கொடுத்தவர் அவரே. இவ்வாறு அவர் புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராயிருக்கிறார். கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் அவரால் வாக்களிக்கப்பட்ட, என்றும் நிலைக்கும் உரிமைப் பேற்றைப் பெறுவதற்கென்று இந்த உடன்படிக்கை உண்டானது. இது ஒரு சாவின்மூலம் ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சாவு முந்திய உடன்படிக்கையை மீறிச்செய்த குற்றங்களிலிருந்து மீட்பளிக்கிறது.

## நரகத்திலிருந்து நம்மை பாதுகாப்போம்

நாம் செய்யும் எந்த வியாபாரத்திலும் கொள்ளை இலாபம் பெற விரும்பக் கூடாது. வாணிபத்தை ஓர் தூய்மையான தொழிலாக்குவதற்காக அதற்கு சில விதி-முறைகளை விதித்திருக்கிறது இஸ்லாம். இக்கால பொருளியல் நிபுணர்களும் இவ் நிபந்தனைகளைக் கண்டு வியக்கின்றனர்.

விலைவாசி ஏறியபின் விற்கலாமென்று உணவுப் பொருட்களை வாங்கி யாராவது ஒருவர் பதுக்கி வைத்திருந்தால் அவ் உணவுப் பொருட்கள் முழுவதையும் அவர் தர்மம்செய்தாலும் அவர்செய்த அப்பாவத்திற்கு அது ஈடாகாது என இறைதூதர் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

பொருளைச் சேகரித்து பயன்படுத்தாது வைத்திருப்பவனையும் நரக நெருப்பு அழைத்துக் கொள்ளும்.

அல்குர் ஆன் 70 : 17–18

ஆகவே நாம் இவ்வனைத்து விடயங்களையும் அகத்தில் பதித்து நரகநெருப்பிலிருந்து நம்மைப் பாதுகாப்போம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி 1046



### ஒரு உதாரணம்

பா ரா ட் டு க் கு ரி ய து

மதம் பிடிக்காதவர்கள்
மனிதர்களாகவே
இருப்பார்கள்!
மதம் பிடித்தவர்கள்
ஆளையாள்
அடித்தே கொன்றிருப்பார்கள்!
இறைவனின்
படைப்பில்
இரக்கம் அன்பு
இப்படித்தான்
இருக்கும் என்பதற்கு
இப்படமும் ஒரு உதாரணம்.


பாண்டியூர்
– பொன்.நவநீதன்

### மிருக நேயம்

இந்த ஐந்தறிவுச் ஜீவன்களிடம்
பரிணமிக்கும் மிருக நேயம் கூட
நம் ஆறறிவு படைத்த மனித
இனத்திடம் காண்பது
இப்போதெல்லாம் அரிதாகி
அரிதாகி வருகிறதே!

அ.சந்தியாகோ,
கண்டி.

## கவிதைப் போட்டி இல 1049



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல்,
தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29. 01. 2014

கவிதைப் போட்டி இல. 1049
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### பாசப் பிணைப்பு

இருவேறுபட்ட பறவைகள்
ஓரினமாய்... உண(ர்)வூட்டி
ஒற்றுமையாய் வாழுகையில்
மானிடர்கள் மட்டும்...
பிரிவினைவாதச் சேற்றில் பிரிந்து
அழிவது கண்டு... விழிகள்
வெடித்துச் சிதறுகின்றன
சுமாத்திராவின்
சுனாமியலைச் சீற்றமாக.

K.M.A.அஸீஸ், சாய்ந்தமருது-11.

### சுதந்திரக் கோரிக்கை

நமதுரிமைகள்
மனிதன் அறியான்
நம்மைக் கண்டால்
மாமிசத்தை புசித்து விடுவான்
இல்லையேல்
கூண்டில் போட்டு
கைதியாய் மாற்றிவிடுவான்
நான்கு கால் தோழனே...
நான் பறக்கப் போகிறேன்
நீ மறைந்து கொள்
அடுத்த சந்திப்பை மட்டும்
அவசரமாய் கூறு...
கவிஞர்கள் மொழி பெயர்க்கட்டும்
அதன் பின் சுதந்திரம்
கிடைத்தால் பார்ப்போம்
சுதந்திரமாய் பேசலாம்!

A. பாரிஸ், மிகிந்தலை.

### மாமனிதர்க்கு அர்ப்பணம்

நீயும் நானும் உறவு கொண்டாடத்தானோ?
மனிதாபிமான போராட்டமாடினாரே
மண்ணின் மைந்தர் மண்டேலா!
கறுப்பும் வெள்ளையுமாய்
கை கோர்த்துப் பேசும் நாமே
மாமனிதர்க்கு அர்ப்பணம்.

கஜைசாந்தி, தம்பிலுவில்-02.

### கிடைக்குமா?

பல நாள் பட்டினியும்
இரை தேடிய களைப்பும்
உடலோடு உயிரையும்
வாட்டி வருத்துகின்றது
நீ உண்ணும் உணவின்
மிச்சமாவது கிடைக்குமா?
போகும் எனது
உயிரைக் காப்பாற்ற...

யோ.சரோ, காரைவாய் மேற்கு.

### பங்கு

**எல்லாம் ஒன்றுசேர்ந்து**
**உண்ணவே கற்றுக் கொண்ட**
**காகங்கள் - தம் இனத்தவர்களை**
**தொலைத்துவிட்டதால்**
**அணில் பிள்ளைக்கும் தன் உணவை**
**கொடுத்து உண்கிறது போலும்!!!**

கே.அஸ்மிதா, யாழ்ப்பாணம்.

## உங்கள் பக்கம்

### தனியார் வங்கியின் அவசியம்

இறுதிக்கட்ட யுத்தத்தில் அழிவின் உச்சத்தைத் தொட்ட பிரதேசங்களுள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பும் ஒன்றாகும். குறித்த யுத்தத்தில் அனைத்தையும் இழந்து உடுத்த உடுப்புடன் சிதறி ஓடிய புதுக்குடியிருப்பு மக்கள் இப்பொழுது மீள்குடியமர்த்தப்பட்டு இருக்கின்றனர். தமது பூர்வீக இடங்களில் மீண்டும் தமது வாழ்வை கட்டியெழுப்புவதற்காக ஒவ்வொருவரும் தங்களது வலுவுக்கேற்ற வகையில் முயற்சித்துக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இந்நிலையில் அரச, தனியார் நிறுவனங்கள் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் தமது செயற்பாடுகளை மீள ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று அரச வங்கிகளும் தமது செயற்பாடுகளைச் சிறப்பாக ஆரம்பித்திருக்கின்றன.

இருந்தபோதிலும் கவர்ச்சியான சலுகைகளினால் மக்களின் ஆர்வத்தை இழுத்து வைத்திருக்கின்ற தனியார் வங்கிகள் இன்னும் புதுக்குடியிருப்பு பக்கம் தமது கவனத்தைத் திருப்பாமல் இருப்பது அப்பிரதேச மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதாகக் குற்றச்சாட்டுக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இதுதொடர்பில் குறித்த வங்கியின் உயரதிகாரிகள் கவனத்தைச் செலுத்தவேண்டும், என்பதே புதுக்குடியிருப்பு மக்களின் சார்பில் எனது வேண்டுகோளாகும்.

எஸ்.நவரட்ணம்,
புதுக்குடியிருப்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## வாசகர் சாலை



### பேரவா!

அரசியல் யதார்த்தங்களை சிறப்பாக எடுத்துக்கூறுகின்றாய். வேணுகிருஷ்ணா சிறப்பாக வெளிநாட்டுக் கட்டுரை வரைகிறார்.

இக்கட்டுரை இரண்டு பக்கங்கள் ஒதுக்கியுள்ளாய். இதுதான் சிறந்தது. இந்தக் கட்டுரையில் முழுஅம்சமும் அடங்கியுள்ள அதேநேரம் விரிவாக இக்கட்டுரைகள் அமைந்துவருகின்றன. இக்கட்டுரையாளரின் தீவிரவாசகி நான். நீ தரும் எல்லாமே அருமையாக உள்ளது. முரசு இன்னும் வளர்ச்சிகாண வேண்டுமென்பதே எனது அவா.

அ.சாமினி, பரந்தன்.

### ஏங்கித் தவிக்குது...

அன்புடன் பேனா எடுத்து ஆசையுடன் தாள் விரித்து பாசத்துடன் முரசுக்கு எழுதும் முதல் மடல்.

அன்பின் முரசுக்கு வணக்கம்! உனைநேசிக்கும் வாசகர்களின் நானும் ஒருத்தி! நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் சூப்பர். முரசில் வெளிவரும் அனைத்தும் என் மனதை கவர்ந்தவை. மலர்களிடம் மணம் மாறுவதில்லை. அதேபோல உனை படிப்பதற்கு நான் தவறுவது கிடையாது. உன் பத்திரிகையை ஒவ்வொரு தினமும் பார்ப்பதற்கு ஏங்கி தவிக்குது என் வழிகள்.

க.வினோதா, உடுப்பிட்டி.

### மீண்டும் வராதா?

முரசுக்கு வணக்கம்! பல்சுவை அம்சங்களை வழங்கிவருகிறாய். பாராட்டுக்கள். பாப்பா முரசு தகவல்கள், 24ஆம் பக்கம், தேன்கிண்ணம், குறுக்கெழுத்து, மருத்துவக் குறிப்புகள் ஆகியவை சூப்பர். குறுக்கெழுத்து அருமையாக உள்ளது.

'க்ரைம்' தொடர் அண்மைக்காலமாக காணவில்லை. மீண்டும் வராதா? மலையகம் தொடர்பான கட்டுரைகள் வருகின்றன. அதற்கு பாராட்டுக்கள். மலையக மக்களின் அவலங்களை இவ்வாறு எடுத்துக்கூறுவதே நன்மையானது. அது நடைமுறையில் மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியதாக இருக்கும்.

கே.தர்சன், மட்டக்களப்பு.

### மாற்றம் தேவை


தினமுரசின் நீண்டநாள் வாசகி நான். முரசில் சில வருடங்களாக திருப்திகொள்ளும் நிலையில் முரசு இல்லை. அரசியல் கட்டுரைகளுக்கு மட்டும் முரசு முக்கியத்துவம் கொடுத்தால் போதாது. பல்வேறு வகையான சுவையான அம்சங்களைச் சேர்த்துக்கொள்ளலாம். முரசு கட்டுரைமயமாகத்தான் காட்சியளிக்கிறது. இது மட்டும் போதாது. தினமுரசு இதில் அதிக கவனம் எடுக்கவேண்டும்.

எம்.அனிதா,
கண்டி.

# அமைச்சர் டக்ளஸின் வழிகாட்டலில் தொழில்துறையில் பாரிய முன்னேற்றம்!

## பனை அபிவிருத்தி சபை தலைவர் தெரிவிப்பு

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது ஆலோசனை மற்றும் வழி காட்டலுக்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்ட பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக பனைசார்ந்த தொழிற்துறை நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் பாரிய முன்னேற்றம் கண்டு வருகின்றது என பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.**



பனை அபிவிருத்திசபை விருந்தினர் விடுதியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தபோது.

கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் பனை அபிவிருத்தி சபையின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் நிறுவனத்தின் கீழான ஆராய்ச்சிகள் தொடர்பிலான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாரம்பரிய பனைசார்ந்த தொழிற்துறையை மேம்படுத்தும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிகாட்டலுக்கு அமைவாக பனை அபிவிருத்தி சபையின் கீழான பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் எமது சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில் பனைசார்ந்த உணவு, உணவல்லாத மற்றும் அழகுசாதன பொருட்கள் போன்ற உற்பத்திகள் தற்போது நவீனமுறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் 11 மில்லியன் பனை மரங்கள் உள்ள போதிலும் அவற்றில் இரண்டு வீதங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வரும் நிலையே காணப்படுகிறது. பனை வளத்தை முழுமையாக பயன்படுத்தும் பட்சத்தில் அந்நிய செலவாணியையும் நாம் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன், மட்டக்களப்பு, யாழ்ப்பாண மாவட்டங்களில் பனை மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இவ்வருடம் மேலும் 6 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

முக்கியமாக பனைசார்ந்த உணவு மற்றும் உணவல்லாத அழகுசாதனப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பினை தென்னிலங்கையிலும் பெற்றுக் கொள்ளும் வகையில் பூட்சிட்டி ஊடாக விற்பனை செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதே வேளை, வெளிநாடுகளுக்கும் இவற்றை கொண்டு செல்வதற்கும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

## மாகாண சபை உறுப்பினர் ஆவணப்படம் தயாரிக்கிறாரா?

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக பேசப்படும் நிலையில் குறித்த மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகனால் ஆவணப்படம் தயாரிக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து அவரிடமிருந்து வீடியோக் கசெற் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் மாகாணசபை உறுப்பினர் மருந்துவர் சிவமோகனின் தரப்புக்களில் இருந்து வெளியான தகவல்களின்படி, அழிந்துபோகின்ற கலைகளைக் கட்டிக் காக்கும் வகையில் முள்ளியவளை 01 ஆம் வட்டாரத்தில் கலை நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டதாகவும் இதில் சிறுவர்களும் புனர்வாழ்வு பெற்றவர்களும் பங்குபற்றியதாகவும், புனர்வாழ்வு பெற்றவர்களில் இரண்டு கண்களை இழந்த ஒருவரும், இரண்டு கால்களை இழந்த ஒருவரும் நிகழ்ச்சிகளை அரங்கேற்றியிருந்தனர். குறித்த கலைநிகழ்ச்சி சம்பந்தப்பட்ட ஒளிப்பதிவு நாடா பொலிஸாரால் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும், அவை மீண்டும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### சவூதி அரேபியாவில்

## இலங்கை பணிப்பெண்களுக்கு அதிகரிக்கும் சிக்கல்கள்

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணியாளர்களாக தொழில் புரிந்து வருவோரால் சவூதியில் உள்ள அவர்களின் அனுசரணையாளர்களுக்கு எதிராக தினமும் மூன்று முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டு வருவதாக இலங்கை தூதரகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அரேபிய நியூஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தொழில் விவகாரங்களுக்கான இலங்கைத் தூதரக பிரதிநிதி எம்.பி. எம். ஸாருக் தெரிவித்துள்ளதாவது, தங்களுக்குக் கிடைத்துவரும் முறைப்பாடுகளுள் அநேகமானவை சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படாமை, வீட்டுப் பணியாளர்களின் சம்மதமின்றி அவர்களின் சேவை ஒப்பந்தங்களை புதுப்பித்தல் மற்றும் அடி, உதைகள் உள்ளிட்ட சரீர சம்பந்தமான துஷ்பிரயோகங்கள் அடங்குவதாகவும் கடந்த வருடத்தில் இலங்கையைச் சேர்ந்த 50வீட்டுப்பணியாளர்கள் பணியிடங்களிலிருந்து தப்பித்துச் செல்ல முற்பட்டதாகவும் பெண் தொழிலாளர்கள் மத்தியில் இடம் பெற்றுவரும் பாலியல் தொந்தரவுகள் குறித்த தகவல் மிகவும் அரிதாகவே வெளி வருவதாகவும் 1000 தொழிலாளர்களிலும் ஒருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ‘ஆவா’ கொடுத்த அதிர்ச்சி!



**வேட்டோசைகளுக்கும** கிளைமோர்ச் சத்தங்களுக்கும் விமானங்களின் இரைச்சல்களுக்கும் முடிவு கட்டப்பட்டுவிட்டதாக மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த நேரத்திலேயே உள்ளூர்ச் சண்டியர்களும் கட்டப்பஞ்சாயத்து நடத்துபவர்களும் கட்டுப்பாடின்றி முளைக்கின்ற சூழல் திரைமறைவுகளில் ஆரம்பமாகத் தொடங்கியது.

அதன் பரிணாம வளர்ச்சியாகவே தற்போது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற ‘ஆவா குறூப்’ இன் வளர்ச்சியும் செயற்பாடுகளும் பார்க்கப்படுகின்றன. அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தின் அச்சுவேலி, கோண்டாவில், இணுவில், சுன்னாகம், கோப்பாய் போன்ற பிரதேசங்களில் பல்வேறு சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் இந்தக் குழு கைது செய்யப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டளவில் இந்தக் குழு ஆரம்பிக்கப்பட்டதாக பொலிஸ் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இக்குழுவின் செயற்பாடுகளை ஆரம்பத்திலிருந்து அவதானித்து வந்த பிரதேசவாசிகள் சிலரின் கருத்துப்படி, போர் முடிவைத் தொடர்ந்து இணுவில் மற்றும் அண்டிய கிராமங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவங்களை கட்டுப்படுத்தும் பொருட்டு அப்பிரதேச இளைஞர்கள் சிலரால் இணைந்து இக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், இக்குழுவினர் ஆரம்பத்தில் தமது கிராமத்தில் இரவு நேரங்களில் நடைபெறுகின்ற கொள்ளை முயற்சிகளின் போது அந்த இடத்தில் ஒன்று கூடி அந்தக் கொள்ளையர்களை விரட்டும் செயற் பாடுகளில் ஈடுபட்டதாகவும் பின்னர் சமூக விரோத செயல்களில் ஈடுபடு வோர்கள் மீது தமது கவனத்தைத் திருப்பியிருந்ததாகவும், நாளடைவில் இந்தக் குழுவினுள் ஊடுருவிய தவறானவர்களினால் திசை திருப்பப் பட்டு பணத்திற்காக சமூகவிரோத செயல்களில் ஈடுபடுகின்ற குழுவாக மாற்றமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்குக் காவல்துறையினருக்கு உதவும் பொருட்டு, இளைஞர்கள் கண்காணிப்புக் குழுக்களையும், விழிப்புக் குழுக்களையும் உருவாக்கி காவல்துறையினரின் ஒத்துழைப்புடன் செயற்படுத்துவது பாராட்டத்தக்கதே.

ஆனால், இவர்கள் சமூக விரோதிகளுக்குத் தண்டனை வழங்கும் செயற்பாட்டை தங்களின் கரங்களில் எடுத்துச் செயற்பட்டதை நியாயப்படுத்த முடியாது. அந்த சட்ட முரணாண செயற்பாடுகளே இந்தக் குழுவினர் சமூக விரோதச்செயல்களில் ஈடுபடுவதற்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றது. தவறான சிந்தனைகள், பணத்தின் மீது ஏற்பட்ட மோகம், அண்மைக் காலமாக வெளிவருகின்ற தமிழ் சினிமாக்களில் வில்லத்தனங்களும், பாதாள உலக செயற்பாடுகளும் கதாநாயகர்களின் ‘ஹீரோஜிசமாக’ காட்டப்படுகின்ற நிலையில் ஏற்பட்ட மாயை போன்றவை இவர்களுக்கும் அசட்டுத் தைரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

பணத்திற்காக வாள்வெட்டு, வீடுடைப்பு, தீ வைப்பு, அச்சுறுத்தல், கொலை, கொள்ளை என அனைத்துவிதமான கீழ்த்தரமான செயல்களிலும் ஈடுபட்டு தாம் சார்ந்த பிரதேசத்தில் தம்மை ஒரு ஹீரோக்களாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர். இது தொடர்பில் பொதுமக்கள் பலரும் மனம் குமுறிய போதிலும் யாருக்கும் பொலிஸில் முறைப்பாடு செய்யும் தைரியம் ஏற்படவில்லை.

இது தொடர்பான தகவல்கள் பொலிசாருக்குக் கிடைத்த போதிலும் இவர்களைக் கைது செய்வதற்கான போதிய ஆதாரங்களின்றி பொலிஸ் தரப்பு நீண்ட நாள் மௌனம் காத்ததாகத் தெரிகிறது.

இந்நிலையிலேயே வடமாகாணத்தின் புதிய சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவும், யாழ்.மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸ் ஆகியோர் இவ்விடயத்தில் தமது முழுக் கவனத்தைத் திருப்பியிருக்கின்றனர். இதனால், 25 பேர் கொண்ட ஐந்து சிறப்புப் பொலிஸ் பிரிவுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையிலேயே கடந்த மாதம் சுன்னாகம் பொலிஸார் கைது செய்த சந்தேக நபரொருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவருக்கும் ‘ஆவா’க் குழுவினருக்குமிடையிலான தொடர்பும் ‘ஆவா’ பற்றிய விபரங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(21 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# நம்பிக்கையை சிதைக்காதீர்

இறுதி யுத்தத்தில் போர்க்குற்றங்கள் நடந்தன, மனித உரிமைகள் மீறப்பட்டன, கொத்துக்குண்டுகளும், இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன, பாது காப்பு வலயத்துக்குள் அரச படைகள் செல்வீச்சுத் தாக்குதல்களை நடத்தின இப்படியெல்லாம் மன்னார் மற்றும் யாழ். மாவட்ட ஆயர்கள் அமெரிக்கப்பிரதி நிதியிடம் கூறியிருப்பது தென் இலங்கை யிலுள்ள கடும்போக்கு வாதிகளை ஆத்திர மடையச் செய்துள்ளது.

அந்த ஆயர்களை கைது செய்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தவேண்டும், அவர்கள் மதத்தின் போர்வைக்குள் ஒழிந்து கொண்டு பயங்கரவாதத்துக்கு ஆதரவாகவும், இலங்கையின் இறை மைக்கு எதிராகவும், தேசிய பாதுகாப்புக்கு எதிராகவும், நாட்டைக் காட்டிக் கொடுப்ப வர்களாகவும் செயற்படுகின்றார்கள்.

பூசைகளிலும், பிரார்த்தனைகளிலும் பழிவாங்கும் அரசியல் பரப்புரைகளை செய்கின்றார்கள், தேர்தல் பிரசாரங்களைச் செய்கின்றார்கள், பௌத்த மக்களையும், ஏனையவர்களையும் சலுகைகளைக் காட்டி மதமாற்றத்தைச் செய்கின்றார்கள். என்பன போன்ற பலவிதமான குற்றச் சாட்டுக்களை ஆயர்கள் மீது அடுக்கிக் கொண்டே போகின்றார்கள்.

இரு பக்கத்து குற்றச்சாட்டுக்களிலும் எவ்வளவு உண்மை, எவ்வளவு பொய் உள்ளது என்பதை ஆர்வமுள்ளவர்கள் ஆராந்து பார்க்கலாம், ஆனால் இந்த இரு நிலைப்பாடுகளும் மதமெனும் கவசத் துக்குள் இருந்து கொண்டு அரசியல் பற்றியும் வன்முறைகள் பற்றியும் கருத் துக் களை முன்வைக்கும் மத போதகர்கள் குறித்ததாகும்.

இது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கு ஆரோக்கியமானதல்ல. ஆயர்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்று கோரிக் கைகள் தென் இலங்கையிலிருந்து எழுந்தபோது, "ஆயர்களை விசாரிக்கக் கூடாது, அவர்கள் கேள்விப்பட்டதையும், கேள்விப்பட இருந்ததையும் தான் கூறினார்கள்" இன்னொரு ஆயர்கள் குழாம் கூறியிருந்தது.

கேள்விப்பட்டதை எல்லாம் குற்றச் சாட்டுக்களாக கூறமுடியுமாக இருப்பது ஆயர்களுக்கு மட்டும்தான். இவ்வாறான முரண்பாட்டுச் செய்திகள் ஊடகங்களுக்கு தித்திப்பாக இருக்கலாம், மக்களுக்கு நிச்சயமாக தித்திப்பாக இருக்காது. மாறாக மத குருக்கள் மீதான நம்பிக்கையே மெல்ல தகர்ந்து போகும்.

போராட்டம் மீதான நம்பிக்கை இழந்து விட்டது. அரசியல் மீதான நம்பிக்கை மெல்ல இழக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றது. நாளை மத வழிகாட்டிகள் மீதான நம்பிக்கையும் இழக்கப்படும் அபாயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.


ஐக்கியம், சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுப்பு, சகோதர சக வாழ்வு பற்றி போதிக்க வேண்டிய புனிதமான பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் இன்று குரோத அரசியலுக்குள்ளும், பழிவாங்கும் வன் முறைக்குள்ளும் தம்மை உள் நுழைத் திருப்பது வரவேற்புக்குரியதல்ல.

அவரவர் அவரவரின் பணியை சரி யாகச் செய்யும்போதே அதற்குரிய மரியாதை யும், கௌரவமும் கிடைக்கின்றது. அதுவே படைத்தவனின் பெயரால் பணிக்கப்பட்ட கடமையுமாகும். குரோதம் நெஞ்சில் வளர்த்து உதடுகளால் போதனை செய்வது நம்புகின்றவர்களுக்குச் செய்யும் துரோகம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஜெனீவாத் தீர்மானங்கள் கடினமானதாக அமையுமா?



**சர்வதேச** அழுத்தங்களுக்கு மட்டுமே இலங்கை அரசாங்கம் அடிபணிந்து போகும். உள்நாட்டில் யாரையும் கணக்கில் எடுக்க அரசு தயாராக இல்லை. இப்படி எதிர்க்கட்சிகள் கூறுவது சிந்திக் கத்தக்கது.

, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வெளிநாட்டு இராஜதந்திரிகளின் வருகையை மிகவும் உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றது. வருகின்றவர்கள் தலைநகரை விடவும், தெற்கு, மேற்கு, கிழக்கு என்பதைவிடவும் வடக்கு மாகாணத் துக்கு செல்வதற்கே வருகின்றார் கள்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சனையானது வடக்கு கிழக்கு "மாகாண மக்க ளுக்கானதாக இருந்த நிலைமை தற்போது உள்ளூர் அரசியல் வாதிகளிடமும், சர்வதேசத்த வர்களிடமும் மறக்கப்பட்டுவிட்டது.

மனித உரிமைகள் மீறப் பட்டது தொடர்பாகவும், தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும், தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டது தொடர்பாகவும், தமிழர்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட் டிருப்பது தொடர்பாகவும் இன்று தேடுதல் செய்கின்றவர்கள் வடக்கு நோக்கி ஓடுகின்றார்கள். அது அவர்களின் அறியாமை அல்ல. எங்கே இருந்து கூறி- னால் இலங்கை அரசு கூர்ந்து கவனிக்கும் என்று அவர்களுக்குத் தெரியும்.

மீண்டும் ஒரு வன்முறையை, மீண்டுமொரு பகைமையை தூண்டி விடுவதற்கு ஆரம்பப் புள்ளியிடு வதற்கு இன்னும் தோதான பூமியாக பலரும் வடக்கைத்தான் நம்புகின்றார்கள். இவ்வாறான உள்ளோக்கச் சிந்தனைகளுக்கு உரம் சேர்ப்போர் வடக்கை தெரிவு செய்துகொள்வதால்தான் இலங்கை அரசாங்கத்துக்கு வடக்கின் பாதுகாப்புக் குறித்தும், அதிகமான கண்காணிப்புக் குறித்தும் கூடுதல் கரிசனையை அதிகரிக்கச் செய்கின்றது.

இந்த விளையாட்டில் களம் இறங்கி இருப்பவர்கள் தத்தமது நலனிலும், தமது பலம், பலவீனத்தில் இருந்து கொண்டு விளையாடுகின்றார்கள். இவர்களின் இலக்கு இலங்கை தமிழ்பேசும் மக்களின் அரசி யல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யுமா? சம உரிமையை பெற் றுத்தருமா? ஏதிர்பார்க்கும் சமூக பாதுகாப்பைப் பெற்றுத்தருமா? என்பதற்கு எவரும் உத்தரவாதம் தருவதற்கு தயாராக இல்லை.

தமிழ் மக்களுக்கு தனியான அரசியல் தீர்வு வேண்டும். தமிழ் மக்கள் தம்மைத் தாமே பாது காத்துக் கொள்ளும் அதிகாரம் தேவை. தமிழ் மக்கள் இறைமை, தேசிய கட்டமைப்புகளுக்கு கட்டுப்படாமல் சர்வதேசத்துடன் கொடுக்கல் வாங்கல்களை செய்து கொள்வதற்கு உலகம் தனது தடைகளை தமிழர்களுக்கு அக லத் திறந்து கொள்ள வேண்டும்.

இப்படி ஒரு கோரிக்கையை முன்னிறுத்திக் கொண்டு எவரும் இன்று இலங்கைக்கோ, வடக் கிற்கோ வருவதில்லை. ஐக்கிய நாடுகள் சபை எனும் சர்வதேச அரங்கில் தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளுக்காக சர்வதேச சமூகம் குரல் கொடுக்கவில்லை. குரல் கொடுக்கப்போவதுமில்லை.

இந்த நிலையில் மார்ச் மாதம் ஐ.நா. சபையில் நடைபெறவுள்ள மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வரப்போகின்றது, பிரித்தானியா கடுமையான தீர்மானத்தைக் கொண்டுவரப் போகின்றது. இம்முறை இலங்கை அரசுக்கு ஜெனிவாவில் தூக்குக் கயிறு நிச்சயம் என்றெல்லாம் கூறுவதை பெறுமதிமிக்க அரசியல் கருத்தாக கூறுகின்றனர்.

அப்படிக் கூறினால்தான் தமிழ் மக்களின் காவலனாகவும், இலங்கை அரசை பழிவாங்கப் புறப்பட்டிருக்கும் போர் வாள் களின் வீரத்தளபதி என்று தமிழ் உலகம் போற்றும் என்பது இன்று போட்டா போட்டியாகி யிருக்கின்றது.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் நடை பெற்ற யுத்த வன்முறைகளின் போது பல படுகொலைகளும், உரிமை மீறல்களும் நடந்தேயுள் ளது. ஆனால் இறுதி யுத்தத்தில் நடைபெற்றதாக கூறுவதிலேயே இன்று சர்வதேச அக்கறை அதிகரித்துள்ளது.

இறுதியுத்தத்தில் நடந்ததாக கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற சர்வதேச அழுத் தம் இலங்கை அரசுக்கு எதிராக வலுப்பெற்றுள்ளது என்பதை மறுக்க முடியாது. சர்வதேசத்தின். இந்த நிலைப்பாட்டுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

ஏற்கெனவே ஐ.நா மனித உரிமைப் பேரவையின் ஆணை யாளர் நவநீதம்பிள்ளை இலங் கையின் மனித உரிமைகள் தொடர்பில் தொடர்ந்து அதிருப் திகளைத் தெரிவித்து வருகின்றார். மனித உரிமைகள் விடயத்தில் பாராட்டக்கூடிய வகையில் மேம்பாட்டை இலங்கை அரசு ஏற்படுத்தவில்லை என்பதே அவ ரின் குற்றச்சாட்டாக இருந்து வருகின்றது.

இதற்கிடையே சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இலங்கை அரசு மீது மனித உரி மைகள் விடயத்தில் கடுமையான சர்வதேச அழுத்தம் தேவை என்று வலியுறுத்தி வருகின்றன.

அமெரிக்கா இறுதியாக நடை பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானத்தை நிறை வேற்றியுள்ளது. அதில் மனித உரிமைகள் மேம்பாட்டுக்கான செயல்வடிவத்தை நிலைநாட்டு வதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையுடன் இணைந்து இலங்கை செயற்படுவது அவசி யம் என்றும், இறுதி யுத்தத்தின் போது நடைபெற்றதாக நம்பப் படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர் பில் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் வகையிலான சுயாதீன விசாரணை செய்யப்பட வேண்டும் என்று அழுத்தம் திருத் தமாக குறிப்பிட்டிருந்தது.

அமெரிக்காவின் தீர்மானத்தை இலங்கை அரசு மனித உரிமைப் பேரவையில் எதிர்த்தது. அதையும் தாண்டி தீர்மானம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதால் இராஜதந்திர ரீதியாக அதை பரிசீலிக்க நீண்ட காலம் தேவையாக இருக்கும் என்பதையும் சர்வதேச சமூகத் துக்கு தெளிவுபடுத்தியது.

அதிலிருந்தே இலங்கை அரசு சர்வதேசத்தின் வற்புத்தலையும், குற்றச்சாட்டையும் ஏற்றுக் கொள்ள வில்லை என்பது தெளிவானது. இருந்தபோதும் முன்வைக்கப் பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தமக்கே உரித்தான பொறிமுறை ஊடாக சில பரி காரங்களைக் காண முற்பட்டது.

இலங்கை அரசின் சுயமான பொறிமுறையானது சர்வதேசத்தை திருப்திப்படுத்தாது என்று கூறிய நாடுகள் ஆசிய பிராந்தியத்தில் தமது வர்த்தக மற்றும் பலப்பிர யோக திட்டங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்கு தேவை யான சாதகமான அமைவிடமாக இலங்கையை தெரிவு செய்து கொண்டன.

அரபு நாடுகளை விடவும், அந்நாடுகளின் அமைவிடங்களை விடவும் இலங்கை நாடு பல சிறப்புக்களை கொண்டிருப்பதால் வலிமை நிறைந்த அத்தனை நாடுகளுக்கும் இலங்கை மீது ஒரு தலைக்காதல் உண்டு. அதற்கு இணங்காமல் இலங்கை மாற்றுப் பாதையில் தனது புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளதானது இன்று சர்வதேச சமூகமாக கூறிக் கொள்ளும் நாடுகளுக்கு எரிச்சலைக் கொடுத்துள்ளது. அவர்களுக்கு உடனடித் தேவை இலங்கை அரசை தமது வழிக்கு கொண்டுவரும் மூக்கணாங்கயிற்றை இலங்கை அரசின் கழுத்தில் மாட்டிவிடுவதுதான்.

நாளைக்கே அமெரிக்காவுடனும், பிரித்தானியாவுடனும் இலங்கை அரசு நெருக்கமாகி, கைகுலுக்கிக் கொள்ளுமாக இருந்தால், இலங் கையில் அவர்கள் விரும்பும் நோக்கங்களுக்கு ஏற்ப செயற்பட இணங்கிவிட்டால், இலங்கை அரசு மீது அந்த நாடுகள் பூசியிருக்கும் குற்றச்சாட்டுகள் எனும் சேறு கழுவப்பட்டுவிடும். போர்க் குற்றங்கள், பயங்கரவாதத்தின் போது தவிர்க்கமுடியாத போர் தந்திரோபாயமாகிவிடும். இலங்கை மனித உரிமை விடயத்தில் உலகிலுள்ள பல நாடுகளைவிடவும் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்று அறிக்கைகள் ஊடகங்களை ஆக்கிரமித்துவிடும்.

இதுதான் காலம் காலமாக உலக நாடுகளின் இராஜதந்திரம், இரு நாடுகளின் உறவுகளின் தர்மம் என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம். இங்கே தமிழ் மக்களுக்காக என்று எந்த விடயமும் இருக்கப் போவதில்லை. இலங்கையுடனான தமது உற வுக்கும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சனைக்கும் பிரதான- மான எந்தச் சம்மந்தமும் இல்லை.

இந்தியாவுக்கும் சரி, எமது உறவுகள் புலம் பெயர்ந்து வாழும் உலக நாடுகளுக்கும் சரி இலங்கை தமிழ் மக்களின் நலனுக்காக இலங்கை அரசுடன் முரண்பட்டுக் கொள்ளும் எந்த அவசியமும் இருந்ததில்லை. இனி இருக்கப்போவதுமில்லை.

ஆனால் இலங்கை அரசு அவ்வளவு விரைவில் தற்போதைய தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளமுடியாது. ஏன் எனில் இங்கே நாளைய இலங்கையின் எதிர்காலம் பற்றிய ஆக்கபூர்வமான சிந்தனைகளைவிடவும், இன் றைய அரசியல் இருப்பின் அத்தி வாரங்களை பாதுகாப்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தின் மீதே ஒவ்வொருவருடைய நாட்காலிகளும் இறுக்கிப் பூட்டப்பட்டுள்ளது.

இலங்கையை காட்டிக் கொடுக்க மாட்டோம், இலங்கைக்காக உயிரை யும் கொடுப்போம் எனும் கோஷங்க ளுக்கு விசிலடிக்கும் வாக்காளர் களை திருப்திப் படுத்தவேண்டி யுள்ளது. இன முரண்பாடுகளால் ஆரம்பிக்கப்பட்ட வன்முறைகள் யுத்தத்துக்குப்பின்னர் மதத்தின் பெயரால் பூதாகரமாக வளர்ந்து நிற்கின்றது. அதற்கு ஈடுகொடுத்து அதிகாரங்களை தக்கவைப்ப தற்காக இங்கே போராட வேண்டியுள்ளது.

இந்த நெருக்கடிகள் காரணமாக வகுக்கப்படும் வெளியுறவுக் கொள்கை மற்றும் இராஜிய தந்திரோபாயங்கள் ஆபத்துக்குள் தள்ளிவிட்டுள்ளது. இதன் விளை வாக இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேசத்தின் கோரப்பற்கள் கூர்மை யடைந்துள்ளது. அது இலங்கை மீது பொருளாதார தடையையும், இலங்கையை தனிமைப்படுத்தும் கைங்கரியத்தையும், வர்த்தக நெருக்கடியையும் பரிசலிப்பதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருக் கின்றது.

தாம் நிறைவேற்றிய தீர மானத்தை இலங்கை அரசு திரும்பியும் பார்க்கவில்லை என்ற கோபத்தில் இருக்கும் அமெரிக்கா எதிர்வரும் மார்ச் மாதம் மனித உரிமைப் பேரவையில் இரண்டா வது தீர்மானத்தையும் கொண்டு வரும் என்றும் அந்தத் தீர்மானம் மிகக் கடினமானதாக இருக்கும் என்றும் எதிர்வு கூறப்படுபடுகின்றது.

அந்தக் கடுமையான தீர்மான மானது இலங்கைக்கு காலக்கெடு வழங்குவதாகவோ, ஆலோசனை வழங்குவதாகவோ இருக்கப்போவ தில்லை. மாறாக இலங்கை மீது சர்வதேச சமூகம் சுமத்தும் குற்றச் சாட்டுக்களைக் கையாளு வதற்கு ஐக்கிய நாடுகள் சபை யின் சிறப்பு தூதுவர் ஒருவரை நியமிப்பதாக அல்லது சர்வதேச விசாரணை ஆணையம் ஒன்றை உருவாக்குவதாக அது இருக்க லாம் என்று கூறப்படுகின்றது.

அது தவிரவும் அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற எதிர்ப்பு நிலைப்பாட்டையுடைய நாடுகள் தமது நாடுகளில் இலங்கைக்கு எதிரான வர்த்தகத் தடைகளை அறிவிக்கலாம். இலங்கையின் நிலைமை பலவீனமாகும்போது பங்குச் சந்தை வீழ்ச்சி காணலாம் என்பன போன்ற ஊகங்களும் தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறானதொரு கடுமை யான அனுகுமுறைகளும், நெருக் கடிகளும் இலங்கைக்குள்ளே இன சமூக முரண்பாடுகளையும் தோற்று விக்கக்கூடிய ஆபத்துக்களையும் மறுப்பதற்கில்லை என்ற கவலை களும் இருக்கவே செய்கின்றன.

அத்தகையதொரு சூழல்தான் இலங்கை அரசை பழிவாங்குவதாக அமையும் என்று இன்று கூறுவோர் ஒரு பழிவாங்களுக்கான விளைவு- கள் குறித்து கவலைப்படுவதாக இல்லை. சர்வதேச சமூகம் தமது நோக்கம் நிறைவேறி சமரசம் அடைந்துவிடும்போது சர்வதேசம் குறித்து இன்று தமிழ் மக்களி டையே உருவாக்கப்பட்டிருக்கும் மாயையான நம்பிக்கை தகர்ந்து விடும் அப்போது மீண்டும் ஒரு முள்ளிவாய்க்கால் ஏமாற் றங்களுடன் தமிழ் மக்கள் நிற்க வேண்டியிருக்கும்.

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தொடரும் மொற்றங்கள்



**உலகின்** எல்லா வகையான சந்தோசங்களையும் தானும் அனுபவிக்க விரும்பிய நந்தனியின் கனவுகளை நசுக்கிய வீட்டுச்சூழல் அவளது பதின்ம வயதுச் சந்தோசங்களையெல்லாம் பறித்துப்போயிருந்தது.

அழகிய அவளது கூந்தல் இரட்டைப் பின்னலுக்குள் முடக்கப்பட்டது. அவள் விரும்பிய அழகிய ஆடைகளை அவளால் அணிய முடியாது போனது. அம்மாவால் நந்தனி பெண் என்ற வரையறைக்குள் இறுக்கமாய் அடைக்கப்பட்டாள். அவளை அடைத்த அந்தச் சுவர்களை இடித்துக் கொண்டு வெளியில் பறக்க எண்ணிய தருணங்களில் அப்பாவின் அடியால் நந்தனியின் இறக்கைகள் ஒடிக்கப்பட்டன.

கண்ணீரால் அவளது கனவுகள் கரைக்கப்பட்டு பெண்ணாய் அவள் வனையப்பட்டாள். கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவள் ஓ.எல் தாண்டி ஏ.எல் வகுப்பில் காலடிவைத்த நேரம் அவளது மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கல்வியின் உயர்ச்சி தனது கனவுகளையெல்லாம் நனவாக்க முடியுமென்று நம்பினாள். அந்தக் கனவையும் களவாடிச் சென்ற அம்மாவின் குரலுக்கு வலுவாய் அப்பாவின் கண்டனம் அதுவும் போயிற்று. வீடுதான் நந்தனியின் பரந்த உலகத்தைத் தன் கட்டுக்குள் நிறுத்தியது.

நந்தனி அழகான பூக் கன்றுகளை வளர்த்தாள். 5ஆட்டுக்குட்டிகளையும், 2பூனைக்குட்டிகளையும் இரண்டு கிளிகளையும் வளர்த்தாள். அவளது கதைகளைக் கேட்க அவள் வளர்த்த மரங்களும் கால்நடைகளுமே துணையாயிருந்தன. அவளது உலகின் நீளம் வீட்டுப்படலை வரையுமே மாறிப்போனது.

சமாதான ஒப்பந்தம் எழுதப்பட்ட 2002 பெப்ரவரி. இலங்கை அரசியலில் மாற்றங்கள் ஏற்படும் என எழுதப்பட்ட ஒப்பந்தம். விடுதலைப்புலிகளும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உலவும் நிலைமையும் அரசியல்பணி செய்யும் நிலமையும் உருவாகியது. ஆரவாரமாய் மக்கள் புலிகளை வரவேற்று வவுனியா யாழ்ப்பாணம் என பெருவிழாவாய் கொண்டாடினர். ஒருநாட்டின் சுதந்திர தின விழாப்போல அவர்களை வரவேற்றுத் தோழில் சுமந்து இனிப்புகள் வழங்கி மூடப்பட்ட பாதைகள் திறந்து அந்த நாட்களின் சந்தோசங்கள் இனிமையானவை.

மக்களுக்குள் இறங்கிய புலிகளின் அரசியல் வேலைகள் மக்கள் மயப்படுத்தப்பட்டு மாணவர்களையும் அரசியல் பணிகளில் இணைத்துக் கொண்டு இயங்கிய காலம் அது.

அரசியல் வேலைக்கென அயல்வீட்டிற்குக் குடிவந்த அவர்கள் பற்றி அம்மா அதிகம் அலட்டத் தொடங்கினாள். அது ஒரு போராளிகளின் முகாமாகியது. அவர்களது நடமாட்டம் அவர்களது செயற்பாடுகளையெல்லாம் அம்மாவும் அப்பாவும் அறியாமல் நந்தனி கவனிக்கத்தொடங்கினாள்.

அங்கே அவள் வயதையொத்த பெண்கள் வந்துபோகத் தொடங்கினார்கள். அவளுக்கு விரும்பிய காற்சட்டைகளையும் கைமடிக்கப்பட்ட சேட்களையும் அணிந்திருந்தார்கள். நீண்ட தலைமுடியை கட்டையாய் அழகாய் சிலர் வெட்டியிருந்தார்கள். சிலர் நந்தனியைப்போல் இரட்டைப்பின்னலிட்டு அதனை ஒரு வகையாய் கட்டியிருந்தார்கள். நெற்றியில் இவளைப்போல் பொட்டு வைக்காமலிருந்தார்கள். காதுகளில் தோடுகளே இருக்கவில்லை. ஆனால் அவர்கள் மிடுக்கோடு திரிந்தார்கள். வாகனங்களை ஓட்டி வந்தார்கள். ஆயுதங்களை இலகுவாய் சுமந்து வந்தார்கள். அவர்களது நடையில் செயலில் பல்வகையான அர்த்தங்களைக் தனக்குள் எழுதிக் கொண்டாள் நந்தனி.

அவர்களைப் பற்றிய செய்திகள் கவிதைகள் கதைகள் என வானொலியில் பத்திரிகைகளில் எல்லாம் அவர்கள் பற்றி அவர்களது வீரம்பற்றியெல்லாம் வாசித்திருந்தவளுக்கு அவர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பாக அது இருந்தது. அவள் ஆச்சரியத்தால் அசந்துபோனாள். அங்கே வந்து போகின்றவர்களில் ஒருத்தி நந்தனிக்கு நட்பாகினாள்.

அம்மா, அப்பா அறியாமல் வேலிக்கால் அவர்களுடன் பேசிக்கொண்டாள். அவர்கள் அவளுக்காகப் புத்தகங்களைப் பரிசளித்தார்கள். அப்புத்தகங்கள் ஊடாகத் தங்களது வரலாற்றினைப் பரிசளித்தார்கள்.

அவர்களாய் தானும் மாறி தனக்குள் ஒளிந்திருக்கும் வீராங்கனையைக் காணத்துடித்தாள் நந்தனி. கனவுகளில் அவர்கள் அணிந்த ஆடைகளை இவள் அணிந்துகொண்டு மிடுக்கோடு உலவினாள். அவர்கள் கொடுத்த புத்தகங்களில் வாழ்ந்த வீராங்கனைகள் போல் இவள் புத்தகங்களில் தானும் எழுதப்பட வேண்டுமென்று கனவுகண்டாள். ஆனால் ஒவ்வொரு முறையும் விழுகிற அப்பாவின் அடி அவளது வீராங்கனைக் கனவை நசித்துப்போட்டது.

அங்கே நடு இரவுவரை எரியும் மின்னொளி அதிகாலைக்குப்பின்னர் அங்கிருந்து கேட்கும் பாடல்கள் எல்லாம் அவளுக்கான புதிய உலகத்தின் கனவுகளை வண்ணங்களால் நிரப்பிக் கொண்டிருந்தது. அவளுக்கான சந்தோசங்களையும் கனவுகளையும் அந்த வீட்டுக்குள் வாழ்ந்துகொண்டிருந்தவர்கள் வாயிலாக அனுபவிக்கத் தொடங்கினாள்.

சற்றுக் காலங்களில் அந்த வீடு ஆண் போராளிகளுக்கானதாகியது. பழையவர்கள் எங்கோ போய்விட புதிய முகங்கள் வந்து சேர்ந்தார்கள். எட்டிப்பார்க்கும் உயரத்தில் இருந்த வேலியை அப்பா ஒரடி உயர்த்தி அடைத்தார். அங்கே வந்திருப்பவர்களை அவள் பார்க்கக்கூடாதென்ற எண்ணமே அது.

அந்த வீட்டிற்கு அவளைவிட உயரமான அவளது உலகின் புதிய வாசலாக ஒருத்தன் அங்கே வந்துசேர்ந்தான். உயர்ந்த அவனது தோற்றம் எப்போதுமே தனிவர்ணத்தில் அவன் அணிந்துகொள்ளும் ஆடைகள் அவனை அங்குள்ளவர்களுக்குள் வித்தியாசப்படுத்தி இருந்தது. எங்கோ, எப்போதோ பார்த்துப் பேசிய உணர்வை அவனைக்காணும் தருணங்களிளெல்லாம் உணர்ந்துகொண்டாள் நந்தனி.

வண்ணங்களால் நிறைந்த அவளது கனவுகளில் அதிகபட்ச உரையாடல் நந்தனிக்கும் அவனுக்குமானது சில நிமிடப்பார்வைகள் மட்டும்தான். நாட்கள் செல்ல அவன் அவளது அம்மாவின் இதயத்தில் இடம்பிடித்தான். அப்பாவின் மாலைநேர மதுபோதையில் அப்பாவின் அந்தநாள் கதைகளைக் கேட்க அப்பாவின் துணையாகினான்.

அதுவே அவர்களது பார்வைகளின் பரிமாற்றத்தை வார்த்தைகளின் பரிமாற்றமாக்கியது. உயர்த்தி அடைக்கப்பட்ட வேலிகளுக்கால் யாரும் அறியாமல் அவனைத் தரிசித்தவளுக்கு அவனை அருகாய் சந்திக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுத்தது காலம்.'

(மொற்றங்கள் தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

## வதை 96 மணியம்

**தேசியம்** என்பதே அடிப்படையில் முதலாளித்துவக் கோரிக்கைதான். அது எழும் வரலாற்றுச் சூழல். அது யாருக்கு எதிராகப் போராடுகின்றது என்பதைப் பொறுத்து சில கால கட்டங்களில் கம்யூனிஸ்ட்டுகள் அதை ஆதரிப்பது வழமை. இது வரலாறு முழுவதும் பல நாடுகளில் நடந்துள்ளது. தேசிய இனப்பிரச்சினையில் கம்யூனிஸ்ட்டுகளின் நிலைப்பாடு என்ன என்பதை மாமேதை லெனின் தனது பல கட்டுரைகளில் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். லெனினின் சீடர் ஸ்டாலின் தனது On the Opposition என்ற நூலில் இதுபற்றி விளக்கும்போது. ஒரு தேசிய இனப் போராட்டம் ஒடுக்கப்பட்ட இனத்தின் போராட்டமாக இருந்தாலும். அது ஏகாதிபத்தியத்துக்குச் சார்பாக இருக்குமாக இருந்தால் அதைக் கம்யூனிஸ்ட்டுகள் ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள் எனத் தெளிவுபடுத்தியுள்ளார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கம்யூனிஸ்ட்டுகள் நிலையும் ஏறத்தாழ அதுதான்.

சிதம்பரநாதன் புலிகளையே நேரடியாக ஆதரித்ததும் இந்த அடிப்படையில்தான் என்று நினைக்கிறேன். வால்களைப் பிடிப்பதைவிட. தலையையே பிடிப்போம் என்று அவர் கருதி இருக்கலாம். ஏனெனில் இன்று வால்கள் எல்லாம் அவர் பல வருடங்களுக்கு முன்னர்போன பாதையிலேயே போகத் தொடங்கியுள்ளன.

'மண் சுமந்த மேனியர்' நாடகத்தை சிதம்பரநாதன் முன்னின்று தயாரித்தபோது. பல்கலைக்கழக கலாசாரக் குழுவில் அங்கம் வகித்த பல்வேறு இயக்கங்களையும் சேர்ந்தவர்கள் அதில் உற்சாகமாகப் பங்குபற்றினர். அதற்குக் காரணம் சிங்களப் பேரினவாதம் என்ற பொது எதிரிக்கு அது எதிரானது என்ற கருத்தின் அடிப்படையால் ஆகும். புலிகளும் அதை ஆதரித்தார்கள். புலிகளைப் பொறுத்தவரை. பல்வேறு இயக்கத்தவர்கள் அதை ஆதரித்தாலும் கூட. இறுதியில் அந்த நாடகத்தின் அறுவடை.தம்மைத்தான் வந்துசேரும் என்று புலிகள் உறுதியாக நம்பினர். அதுதான் உண்மையிலும் நடந்தது.

இந்த நாடகத்துக்கான கருவும் தற்செயலாக உருவாக்கப்பட்டது தான். அந்த நாட்களில் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள கலட்டி என்ற இடத்தில் சீவல் தொழில் செய்து வந்த உடையார் என்ற பெயருடைய ஒருவருடைய வீட்டுக்கு பனம் கள் அருந்துவதற்காக நாம் இடையிடையே செல்வதுண்டு. அப்படிச் செல்பவர்களில் சிதம்பரநாதன் நிச்சயம் இருப்பார். அப்படி ஒருமுறை சென்றிருந்த போதுதான். 'மண் சுமந்த மேனியர்' நாடகத்துக்கான கரு பற்றிக் கலந்துரையாடப்பட்டது. சிதம்பரநாதன்தான் கருவின் மூலத்தை முன்வைத்தவர் என்று நினைக்கிறேன். அன்று சென்றவர்களில் சிதம்பரநாதன். சிவரஞ்சித். சர்வேந்திரா (அவர் அந்தக்காலத்தில் மது அருந்துவதில்லை). மோகன். யோகர். அ.ரவி. நான் ஆகியோர் அடங்கியிருந்தோம் என நினைக்கிறேன்.

கரு உருவானதும் நாடகத் தயாரிப்பு முயற்சிகள் தீவிரமாக நடந்தன. சிதம்பரநாதனையும் என்னையும் தவிர. நாடகக் கரு உருவாக்கத்தில் பங்குபற்றிய அனைவரும். இன்னும் பலரும் நாடகத்தில் நடித்தனர். நாடகம் வடக்கின் மூலைமுடுக்கெல்லாம் அரங்கேற்றப்பட்டு மக்களின் அமோக ஆதரவைப் பெற்றது. அதற்குக்காரணம். அன்றைய சூழ்நிலையில் ஐ.தே.க அரசாங்கம் தமிழ் மக்களின் மேல் அவிழ்த்துவிட்ட கொடூரமான யுத்தம்தான். பின்னர் மண் சுமந்த மேனியர் இரண்டாம் பாகம் அரங்கேற்றப்பட்டதாயினும். அது பெருமளவுக்கு மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

மண்சுமந்த மேனியர் நாடகம் புலிகள் எதிர்பார்த்தது போல. புலிகளுக்கு நல்ல அறுவடையை ஈட்டிக்கொடுத்தது. அதைத் தொடர்ந்து அதன் நெறியாளர் என்றவகையில் சிதம்பரநாதனை புலிகள் படகுமூலம் தமிழகத்துக்கு அழைத்துச் சென்றனர். அப்பொழுது அங்கு தங்கியிருந்த பிரபாகரனை சிதம்பரநாதன் சந்திப்பதற்கு புலிகள் ஏற்பாடு செய்தனர். மண்சுமந்த மேனியர் நாடகத்தைத் தயாரித்து மக்கள் மத்தியில் மேடையேற்றி. தமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உரமூட்டியதிற்காக பிரபாகரன் சிதம்பரநாதனை வெகுவாகப் பாராட்டினார். இந்தச் சந்திப்பு சிதம்பரநாதனின் போக்கில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணி விட்டிருந்தது என்பதை. அவர் நாடு திரும்பியபின்னர் நடந்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டின.

யாழ்.பல்கலைக்கழக கலாசாரக் குழுவைப் பொறுத்தவரை அதை ஒரு பக்கச்சார்பற்ற அமைப்பாக இயக்க வைக்கவேண்டும் என்பதே. அதில் அங்கம்வகித்த எல்லோரினதும் விருப்பமாக இருந்தது. அதற்குக் காரணம். அந்தக் குழுவில் அன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் செயற்பட்டுக்கொண்டிருந்த எல்லாப் பிரதான இயக்கங்களையும் சேர்ந்தவர்கள் அங்கம் வகித்ததுடன். அவர்கள் எல்லோரினதும் பொது இலட்சியம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழ் மக்கள்மேல் கட்டவிழ்த்துவிட்ட பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதுமாக இருந்தது.

எமது இலங்கை மார்க்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தும் அதுவாகவே இருந்தது. எமது கருத்தின்படி. இலங்கையை சுமார் 250 வருடங்கள் ஆட்சி செய்த பிரித்தானிய ஏகாதிபத்தியமே இலங்கையில் தமிழர்களையும் சிங்களவர்களையும் பிரித்தாண்டு இனப்பிரச்சினையை உருவாக்கியது. அந்த ஏகாதிபத்திய சக்திகளின் பிரதிநிதியாகவே ஐக்கிய தேசியக் கட்சி இருந்துவந்தது. (இன்றும் இருக்கின்றது) அப்படியான ஒரு கட்சி இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக. தமிழ் மக்கள்மேல் இன ஒடுக்குமுறையைத்தான் பிரயோகிக்கும் என்பது எமது கணிப்பீடாக எப்போதும் இருந்து வந்தது.

அந்த உண்மையை ஒருவர் அரசியல்ரீதியாகப் புரிந்து கொள்ளாவிட்டாலும். ஐ.தே.க 1957ல் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக செய்துகொள்ளப்பட்ட பண்டாரநாயக்க செல்வநாயகம் உடன்படிக்கையை எதிர்த்ததிலிருந்தும். 1958. 1977. 1981 ஆகிய ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட இனவன்செயல்களின்போது அது பின்னணியில் இருந்து செயற்பட்டு வந்ததில் இருந்தும் புரிந்துகொள்ளலாம்.

எனவே. எமது கட்சி தமிழ் இளைஞர் இயக்கங்களின் தமிழ் ஈழம் என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும். அன்றைய அரசாங்கத்தின் பேரினவாத ஒடுக்குமுறைக் கெதிராகப் போராடுவதை ஆதரித்தது. இந்த நிலைப்பாட்டை நாம் ஐ.தே.க அரசாங்கம் என்பதற்காக மட்டும் எடுக்கவில்லை. 1970ம் ஆண்டு திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் அமைந்த சிறீலங்கா – சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டரசாங்கம் பின்பற்றிய சில கொள்கைகளின்போதே எடுத்திருந்தோம்.

அதன்காரணமாகவே. அவ்வாட்சிக் காலத்தின்போதே - அதாவது 1975ம் ஆண்டிலேயே தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுவதற்காக சகல தமிழ் கட்சிகளினதும். இடதுசாரிக் கட்சிகளினதும் ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்க முயன்றோம். அது கைகூடாமல் போகவே நேரடியாகவே மக்களைத் திரட்டும் நோக்குடன். 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற வெகுஜன அமைப்பை உருவாக்கினோம். இதை நாம் செய்த காலகட்டம் ஆயுதப் போராட்டச் சூழல் எழாத காலகட்டம். (தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

**85**

பா.ராகவன்

**இத்தாலியில்** உள்ள ஸான் ரெமோ (san remo) என்கிற இடத்தில் நடைபெற்ற லீக் ஒ∴ப் நேஷன்ஸ் மாநாட்டில் எடுத்த முடிவின்படி இன்றைய இஸ்ரேலின் அத்தனை பகுதிகள் தவிர, காஸா மேற்குக் கரை, கோலன் குன்றுப் பகுதிகளின் ஒரு பாகம், முழு ஜோர்டன் நிலப்பரப்பு ஆகியவை அன்றைக்கு பிரிட்டனுக்கு வழங்கப் பட்டிருந்தன. தோராயமாக அன்றைக்கு இந்தப் பகுதியில் வசித்துவந்த மக்கள் தொகை சுமார் ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் பேர். இதில் பதினொரு சதவீதம் பேர் யூதர் கள். மற்ற அத்தனைபேரும் அரேபிய முஸ்லிம்கள்.

தேசத்தில் எங்கு திரும்பினாலும் முஸ்லிம்கள்தான். காதில் விழும் அத்தனை குரலுமே அரபிதான் பேசின. குழுவாக வாழும் வழக்க முள்ள யூதக்குடியிருப்புப் பகுதி களிலாவது ஹீப்ரு சத்தம் கேட்கிறதா என்றால் கிடையாது. அவர்கள் அத்தனைபேரும் பல தலைமுறைகளாக ஐரோப்பிய தேசங்களில் வாழ்ந்தவர்கள். ஹீப்ருவின் சிதைந்த வடிவமான இட்டிஸ் என்கிற மொழிதான் ஐரோப்பிய யூதர்களுக்குத் தெரியும். அவர்கள் அதைத்தான் பேசினார்கள்.

ஜூன் 1922 ஆம் ஆண்டு தேசங்களின் கூட்டமைப்பு பாலஸ்தீன் ஆட்சியதிகாரம் தொடர்பான தனது இறுதித் திட்டவரைவை வெளியிட்டது. பிரிட்டனின் நீண்டநாள் கோரிக்கை யான "பாலஸ்தீனுக்குள் ஒரு யூத தேசத்தை நிறுவுவது மற்றும் எஞ்சிய மக்களின் சிவில், மத உரிமைகளைப் பாதுகாப்பது" என்கிற திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியது.

இந்தத் திட்டவரைவின் பல பின்னிணைப்புகள், பாலஸ்தீனுக்கு சாரிசாரியாக வந்துகொண்டிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த யூதர்களின் குடியுரிமைக்கு மிக ஜாக்கிரதையாக உத்தரவாதம் வழங்கும் பணியை கவனமாகச் செய்தன. விசா பிரச்சினை தொடங்கி விசாரணைப் பிரச்சினைகள் வரை, இருப்பிடப் பிரச்சினைகள் தொடங்கி, உத்தியோகப் பிரச்சினை கள் வரை ஒன்றுவிடாமல் பட்டிய லிட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒரு மாற்றுவழியை மறைமுகமாக சிபாரிசு செய்தன.

எல்லாமே கண்கட்டு விளை யாட்டுங்கள், பிரிட்டன் ஒரு முடிவு செய்துவிட்டது என்றால் மற்றவர் கள் அப்போது என்ன செய்துவிட முடியும்? சட்டபூர்வமான யாருக்கும் புரியாத மொழியில் தனது சம்மதத்தைத் தெரிவிப்பது தவிர யாருக்கும் வேறு எந்த வழியும் இல்லை என்பதே உண்மை. அவர்களது நோக்கம்மிகத் தெளிவாக இருந்தது. எக்காரணம் கொண்டும், பாலஸ்தீனுக்கு வரும் யூதர்கள் தடுத்து நிறுத்தப்படக்கூடாது, அவர்கள் பாலஸ்தீன் குடியுரிமை பெறுவதிலோ, அங்கு வாழ்வதிலோ எந்தக் குறுக்கீடும் தவறிக்கூட வந்துவிடக் கூடாது. அவ்வளவு தான்.

பெரிய பெரிய தொழிற்சாலைகளின் வாசல்களில் காலை நேரங்களில் நின்று கொஞ்சநேரம் வேடிக்கை பாருங்கள். தினசரிக் கூலிவேலை களுக்காக வாசலில் நூற்றுக்கணக்கானவர் கள் காத்திருப்பார்கள். திடீரென்று ஒரு மணியடிக்கும். கதவைத் திறப்பார்கள். காத்திருப்பவர்கள், கடினவேலைகள் செய்யக்கூடியவர்கள்தானா அவர்களால் அந்தப் பணிகளைச் செய்யமுடியுமா, முடியாதா என் றெல்லாம் பார்க்கமாட்டார்கள். காத்திருக்கும் அத்தனைபேரையும் உள்ளேவிட்டுக் கதவை மூடிவிடுவார் கள். குழுவாகச் சேர்ந்தாவது செய்து முடித்துவிடுவார்கள் என்கிற கணக்கு.

கிட்டத்தட்ட அப்படித்தான் அன்றைக்கு பாலஸ்தீனுக்குள் யூதர்களை அனுமதித்துக் கொண்டி ருந்தார்கள்.

லீக் ஒ∴ப் நேஷன்ஸின் திட்ட வரைவில் ஒரேயொரு விஷயத்தை மட்டும் உத்தரவாக அல்லாமல் ஒரு கோரிக்கையாக பிரிட்டனிடம் கேட்டிருந்தார்கள். அது பிரிட்டனின் ஆட்சியதிகாரத்துக்கு உட்பட்ட பாலஸ்



> கிழக்கு ஜோர்தான், மேற்கு ஜோர்தான் என்று ஒரு சௌகரியத்துக்கு அப்போது சொல்லிக் கொண்டார்கள். இரண்டு பக்கங்களிலும் இருந்தவர்கள் என்னவோ அரேபிய முஸ்லிம்கள் தான். ஆனால் அந்தப் பக்கம் மன்னராட்சி. இந்தப் பக்கம் பிரிட்டிஷ் காலனிய ஆட்சி.
>
> உண்மையில் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே அராபியர்களுக்கு முதலில் புரியவில்லை. அவர்களிடம் சரியான தலைவர்கள் அப்போது இல்லை. ஓர் அமைப்பாகத் திரண்டுபேசவோ, தமது குரலை வெளி யிடவோ அவர்களுக்குத் தெரியவில்லை.

தீனிய நிலப்பிரப்பில் –ஜோர்டன் நதியின் கிழக்குப் பகுதி களில் மட்டும் யூதக் குடியிருப்புக்கள் நிறுவுவதைக் கொஞ்சம் நிறுத்திவைக்க வேண்டுமென்பது.

ஜோர்டன் நதியின் மேற்குக் கரை நமக்குத் தெரியும். வெஸ்ட் பேங்க் என்றே குறிப்பிடப்படும் பாலஸ்தீனியப் பகுதி. கிழக்குக் கரை என்பது நதிக்கு அந்தப் பக்கம். இன்றைய ஜோர்டன் அன்றைக்கு அதற்கு டிரான்ஸ் ஜோர்டன் என்று பெயர். மன்னராட்சி நடந்துகொண்டிருந்த நாடு அது. உலகப்பேரில் மன்னர்களெல்லாம் காணாமல்போய்விட, இராணுவம் ஒன்றே ராஜாவாகிவிட, ஜோர்டனும் பிரிட்டனின் அதிகார எல்லைக்குள் வந்துவிட்டிருந்தது.

ஆனால் நடுவில் சில அரசியல் காரணங்களை முன்னிட்டு ஜோர்தானைத் தனித்து இயங்கச்செய்யலாம் என்று முடிவுசெய்ய, பிரிட்டனும் அதற்கு மௌனமாக சம்மதித்திருந்தது. அப்துல்லா என்கிற ஜோர்தானிய மன்னர் மீண்டும் தன் தலைக்குத் தானே முடிசூடிக்கொண்டு அங்கே ஆட்சியில் உட்கார்ந்தார். ஜோர்தானின் கிழக்குப் பகுதியில்தான் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள வில்லை என்று பிரிட்டன் உத்தர வாதம் அளித்து மேற்குக் கரை தன்னுடையதுதான் என்பதையும் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி அதே ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி ஒரு சுற்றறிக்கை அனுப்பியது.

கிழக்கு ஜோர்தான், மேற்கு ஜோர்தான் என்று ஒரு சௌகரியத்துக்கு அப்போது சொல்லிக்கொண்டார்கள். இரண்டு பக்கங்களிலும் இருந்தவர் கள் என்னவோ அரேபிய முஸ்லிம் கள்தான். ஆனால் அந்தப் பக்கம் மன்னராட்சி. இந்தப் பக்கம் பிரிட்டிஷ் காலனிய ஆட்சி.

உண்மையில் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே அராபியர்களுக்கு முதலில் புரிய வில்லை. அவர்களிடம் சரியான தலைவர்கள் அப்போது இல்லை. ஓர் அமைப்பாகத் திரண்டுபேசவோ, தமது குரலை வெளியிடவோ அவர்களுக்குத் தெரியவில்லை.

யோசித்துப் பார்த்தால் இத்தனை அறியாமையிலா ஒரு மக்கள் கூட்டம் இருந்திருக்கும் என்று வியக்காமல் இருக்கமுடியாது. அந்தளவுக்கு சரித்திரம் முழுவதும் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். பாலஸ்தீனிய அராபியர்கள்.

நிலம் அவர்களுடையது. பாத்தியதை அவர்களுடையது. மண்ணின் மைந்தர்கள் என்கின்ற பெயரும் அவர்களுடையது. மன்னர் கள் காலத்திலிருந்து பாலஸ்தீனைக் காப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அத்தனை யுத்தங்களிலும் அவர்கள் தான் பங்கேற்றிருக்கிறார்கள்.

ஆனால் தங்கள் கண்ணெதி ரேயே, தங்களைக் கேட்காமலேயே தேசத்தின் இரண்டாந் தரப் பிரஜையாகத் தம்மை யாரோ அறிவிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்!

எந்த யூதர்கள் அங்கே மைனாரிடி களாக இருக்கிறார்களோ, அதே யூதர் களின் தேசமாக பாலஸ்தீன்மாறி, மெஜாரிடிகளான அராபியர்கள் அவர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடந்தாக வேண்டிய சூழல்!

உலகில் வேறெந்த தேசமும் இப்படியொரு வினோத நெருக்கடிக்கு உள்ளானதில்லை. இப்படியொரு நெருக்கடி உருவானபோதும் செய்வதற்கு என்ன இருக்கிறது என்பதுகூடத் தெரியாமல் யாரும் திண்டாடித் தெருவில் நின்றதில்லை!

(தொடரும்...)

# சொர்க்கம் உன் கையில்...

அன்பினால் பிணைக்கப்பட்ட அணைப்புக்கு நிகரான இன்ப உலகம் இவ்வுலகில் வேறொன்றும் இல்லை. அமைதி-யோடு கூடிய வாழ்க்கை வாழவேண்டும். இதற்கு ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆங்கிலச் சிறுகதையொன்று என்னைக் கவர்ந்தது. அது சிறுகதையேயாயினும் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அருங்கதையாகும். ஓர் ஊரில் ஒரு கணவனும் மனைவியும் இன்பகரமாக இல்வாழ்க்கை நடாத்திவந்தனர்.

அவர்களுடைய வருவாய் அவர்கள் உயிர்வாழ்வதற்கே போதுமானதாக இருந்தபோதிலும் அவர்களை ஓர் இனம் தெரியாத பற்றும் பாசமும் ஒன்றாகப் பிணைத்திருந்தது. அவர்கள், ஒருவர் மற்றவருக்காகவே வாழ்வதாக உணர்ந்தனர். அதன்காரணமாக அவர்கள் ஒருவர் மற்றவருக்காக எத்தகைய தியாகமும் செய்யத் தயங்கவே இல்லை.

கிறிஸ்மஸ் விழா நெருங்கிக்கொண்டு இருந்தது. தன் மனைவிக்கு தகுந்த கிறிஸ்மஸ் அன்பளிப்புச் செய்ய வேண்டும் என்று கணவன் விரும்பினான். தன் கணவனுக்கு உயரிய கிறிஸ்மஸ் அன்பளிப்புச் செய்யவேண்டும் என்று மனைவி விரும்பினாள். ஆனால் அந்த அன்பளிப்புக்களை வாங்குவதற்கு இருவர் கையிலும் பணம் இல்லை. எனவே இந்த நிலையில் என்னசெய்வதென்று இருவரும் தம் மனதிற்குள்ளே சிந்தித்தார்கள்; சிந்தித்தார்கள்; பெரிதும் சிந்தித்தார்கள்.

இறுதியாக கிறிஸ்மஸூம் வந்து சேர்ந்தது. வெளியில் சென்ற கணவன் பெரிதும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான். வீட்டில் நுழைந்ததும் நுழையாததுமாகத் தன்னுடைய மனைவியை அழைத்து, "இதோ உனக்கு கிறிஸ்மஸ் அன்பளிப்பு வாங்கி வந்துள்ளேன்" என்று ஒரு பொட்டலத்தைக் கொடுத்தான். அதைப் பிரித்துப்பார்த்ததும் அதிலே ஓர் அழகிய பிளாட்டினச் சீப்பு இருந்தது. அதைக்கண்டதும் "என்னிடம் கூந்தல் இல்லையே" என்றால் மனைவி. "எங்கே உன்னுடைய அழகிய கூந்தல்?" என்றான் கணவன், ஏக்கத்துடன் "அதை வெட்டி விற்று நான் தங்களுக்கு உயரிய அன்பளிப்பு வாங்கி வந்துள்ளேன்; இதோ அது. இதனை என்னுடைய அன்புப் பரிசாக ஏற்றுக்கொள்ளுங்கள்!" என்று அவளும் பொட்டலம் கொடுத்தாள். அதனை பிரித்ததும் தங்கத்தால் செய்யப்பட்ட ஒரு கடிகாரச்சங்கிலி இருந்துகொண்டு அவனைப் பார்த்து நகைத்தது. அவன் தன் மனைவியின் முகத்தைப் பார்த்து விழித்தான். "என்னிடம் கடிகாரம் இல்லையே என்று அவனுடைய வாய் முணுமுணுத்தது" "எங்கே உங்களுடைய கடிகாரம்?" என்று ஏக்கத்துடன் வினாவினாள் அவள்; அதற்கு கணவன் உனக்கு ஓர் உரிய கிறிஸ்மஸ் அன்பளிப்பு தரவேண்டும் என்று நான் பெரிதும் விரும்பினேன்.

எனினும் "என்னுடைய பணப்பை அதற்கு இடம்தரவில்லை. அதுபற்றி பல நாட்கள் சிந்தித்தேன். இறுதியாக இன்று காலையில்தான் என்னுடைய கடிகாரத்தை விற்று உனக்கு பிளாட்டினத்தாலான சீப்பு வாங்கி வந்தேன்" அப்பொழுது இருவரும் அடைந்த ஏமாற்றத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை!

இவ்வாறு ஒருவன் மற்றவரைத் தன்னைவிட அதிகமாக நேசித்து அன்பு செலுத்தும்போது மற்றவரும் அவ்வாறே செய்கின்றார். அதனால் அவர்கள் தங்களின் சுயநலங்களை மறந்து ஒருவர் மற்றவருக்காகச் சிறுசிறு தியாகங்களைச் செய்துவருகின்றனர். அந்தத் தியாகங்களே அவர்களை அன்பால் பிணைக்கும் இன்பக்கயிறாக ஆகிவிடுகின்றன.



சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

(தொடரும்...)




# அடையாளத்தை பேணவேண்டிய மலையக மக்கள்!

**இலங்கையில்** இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின் பிரகாரம் இந்திய வம்சாவளித் தமிழர்களின் எண்ணிக்கை பாரிய அளவு வீழ்ச்சி அடைந்துள்ளமை தெரியவந்துள்ளது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன.

கடந்த நான்கு தசாப்தங்களாக மலையக பெருந்தோட்டப் புறங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென மேற்கொள்ளப்பட்டுவரும் கருத்தடை முறை, கடந்த பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீட்டில் ஏற்பட்ட தவறுகள், கல்விகற்ற ஒரு சாராரிடையே காணப்படுகின்ற நாம் இலங்கைத் தமிழர் என்ற மனப்பான்மை. இந்திய தமிழர் என்று தம்மை அடையாளப் படுத்திக் கொள்வதை தரக்குறைவாக கருதுகின்றமை, மலையக சமூகத்திடையே தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் தெளிவின்மை மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களை ஒதுக்குவதால் தமது பாதுகாப்பு கருதி வேறு குழுவிற்குள் இவர்கள் தம்மைப் பதிவுசெய்து கொள்கின்றனர்.

இவ்வாறான பல்வேறு காரணங்களினாலேயே இந்திய வம்சாவளியினரின் சனத்தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரின் சனத்தொகையானது படிப்படியாகக் குறைவடைந்து வருவதானது இன விகிதாசார ரீதியாகவும் இந்தச் சமூகத்திற்கு பின்னடைவை ஏற்படுத்துகிறது.

இந்திய தமிழர்கள் உத்தியோக பூர்வமாக இந்திய தமிழர் என்ற பெயரில் அரச கணிப்பீட்டில் உள்வாங்கப்பட்டது 1911 ஆம் ஆண்டில் ஆகும். இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை கணிப்பீட்டில் இந்திய தமிழர் எண்ணிக்கை 530,983 ஆக காணப்பட்டதுடன் இலங்கையின் சிறுபான்மையினர்களில் முதன்மை இடத்தில் இச்சமூகம் இருந்துள்ளது. 2012 ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டின்படி இந்திய தமிழர்கள் நான்காவது இடத்தில் இருக்கின்றனர். அத்துடன் கடந்தசில தசாப்தங்களாக இச்சமூகம் விகிதாசார ரீதியாகப் பின்னடைவினையும் சந்தித்து வருகின்றன. இந்த நிலைமைக்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன. உண்மையில் இவர்களில் ஒரு பகுதியினருக்கு தங்களை எவ்வாறு அடையாளப்படுத்துவது என்ற தெளிவில்லை. ஒரு சமூகத்தின் பூர்வீகம் என்பது வேறு, குடியுரிமை என்பது வேறு. நாம் இலங்கையின் குடியுரிமையைப் பெற்றவர்கள். ஆதலால் நாம் இலங்கை பிரஜைகள் என நினைக்கின்றோம். ஆனால் எமது பூர்வீகம் இந்தியா ஆகும்.

அதனால், நாம் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்பதே சரியானதாகும். சிங்கப்பூர், மலேசியா, பிஜீ தீவுகளில் உள்ள இந்திய தமிழர்கள் தங்களை இந்திய தமிழர்கள் என்றே அடையாளப் படுத்துகின்றனர். இலங்கையின் போர் சூழல் காரணமாக வெளிநாடுகளிற்கு இடம்பெயர்ந்த தமிழர்கள் அந்த நாடுகளில் குடியுரிமையினைப் பெற்ற பின்னரும் புலம்பெயர் இலங்கைத் தமிழர்களாகவே தங்களை அடையாளப்படுத்துகின்றனர். ஒரு சமூகம் தமது பூர்வீகத்தின் அடிப்படையில் தம்மை அடையாளப்படுத்துவது தவறான விடயமல்ல.

இந்திய தமிழர்களை ஆங்கிலேயர்கள்தான் இந்திய தமிழர்கள் என அடையாளப்படுத்தி உள்ளனர். இதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கின்றன. 1911 ஆம் ஆண்டு சனத்தொகை கணிப்பீட்டில் இந்திய தமிழர்கள் என்று குறிப்பிட்டதற்கு ஆங்கிலேயரின் பிரித்தாளுகின்ற தந்திரமும், இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்கள் அவர்களது இனப்பிரிவில் இந்திய தமிழர்களை உள்வாங்குவதனை விரும்பாமையும் காரணமாகும்.

1961 ஆம் ஆண்டில் 949,684 ஆக இருந்த இந்திய தமிழர்களின் எண்ணிக்கை 1981 இல் 818,656 ஆகவும், 2011 இல் 855, 025 ஆகவும் கடைசியாக 2012 இல் நடந்த கணிப்பீட்டில் 842, 323 ஆகவும் குறைவடைந்துள்ளது. மறுபுறமாக நாட்டின் சனத்தொகையில் இந்திய தமிழர்களின் வீதம் என்று பார்க்கின்ற போது 1981 இல் 5.5 ஆக இருந்த இந்திய தமிழர்கள் 2012 இல் 4.2 ஆக அதாவது 30 வருடங்களிற்குள் 1.3 வீதத்தினால் குறைவடைந்துள்ளனர்.

1981 இல் சிங்களவர்கள் நாட்டில் சனத்தொகையின் 74 வீதமாகவும் தற்போது 74.9 ஆகவும் பதிவாகியுள்ளன. முஸ்லிம்கள் 7 வீதத்திலிருந்து 9.2 வீதமாக 2.2 வீதத்தினால் அதிகரிப்பினைக் காட்டுகின்றன. ஆனால் இந்திய தமிழர்கள் 5.5 வீதத்திலிருந்து 4.2 வீதமாக குறைவடைந்துள்ளனர். இது குறுகிய காலத்தில் ஒரு இனத்தில் ஏற்பட்ட பாரிய பின்னடைவாகும்.

இலங்கையின் சராசரி சனத்தொகை வளர்ச்சி வேகம் 1.00 ஆகும் இந்த மட்டத்தினை சிங்களவர்களும் முஸ்லிம்களும் அடைந்துள்ளனர். இலங்கைத் தமிழர்களின் சனத்தொகையின் வளர்ச்சி வேகம் 0.6 ஆக பதிவாகியுள்ளது. இதற்கு பல காரணிகள் இருக்கின்றன. ஆனால் இந்திய தமிழர்கள் கடந்த 3 தசாப்தங்களாக பாரியளவில் நாட்டை விட்டு வெளியேறவில்லை. யுத்த பாதிப்புக்களோ, இயற்கை அனர்த்தங்களோ பாரிய உயிரிழப்புகளை ஏற்படுத்தவில்லை. இப்படியான ஒரு சூழலில் நமது மக்களின் அதிகரிப்பு வேகம் 0.09 ஆக காணப்படுகின்றது. இது ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகின்றபோது பாரதூரமான பின்னடைவாகும்.

கடந்த தசாப்தங்களில் இடம்பெற்ற சனத்தொகை கணக்கெடுப்புகளில் மலையத்தில்வாழ்கின்ற இந்திய தமிழர்களில் ஒரு பகுதியினர் தங்களை இலங்கைத் தமிழர்களாக அடையாளப்படுத்தியுள்ளனர். அத்துடன் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் கிராமங்களை அண்டிவாழ்கின்ற இந்திய தமிழர்கள் படிப்படியாக தங்களை சிங்களவர்களாக அடையாளப்படுத்தி வருகின்றனர்.

உதாரணமாக கண்டி மாவட்டத்தில் 2001 இல் 52.052 ஆக இருக்க இலங்கை தமிழர் சனத்தொகை 2012இல் 71,640 ஆக, 20ஆயிரத்தால் உயர்வடைந்துள்ளது. அதேவேளை இந்தியத் தமிழர்கள் 2001 இல் 103,622 ஆக இருந்தது 83,734 ஆக அண்ணளவாக 20 ஆயிரத்தால் குறைவடைந்துள்ளது. இதே நிலை தான் இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங்களிலும் இடம்பெற்றுள்ளது.

மறுபுறமாக மொனறாகலை, மாத்தளை, காலி, களுத்துறை போன்ற மாவட்டங்களிலும் படிப்படியாக சிங்களவர்களின் சனத்தொகைக்குள் தங்களை உள்வாங்கிக் கொள்கின்ற போக்குக் காணப்படுகின்றது. மொனறாகலையில் 1981 இல் 3.2 வீதமாக இருந்த இந்திய வம்சாவழி தமிழர்கள் 2012இல் 1 வீதமாகக் குறைவடைந்துள்ளனர்.

இலங்கை பல்லின சமூகங்களைக் கொண்ட நாடாகும். இந்த ஒவ்வொரு சமூகமும் தங்களது தனித்துவத்தினைப் பேணுகின்ற அதேவேளையில் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் செயற்படவேண்டிய தேவை உள்ளது.

இந்தச்சந்தர்ப்பத்தில் ஏனைய சமூகங்களின் வளர்ச்சி வேகத்திற்கு ஒத்தவேகத்தினை இந்தியத் தமிழர் சமூகமும் பின்பற்றாவிட்டால் இன்னும் அரை நூற்றாண்டுக்குள் நாட்டின் சனத்தொகையில் 1 வீதம் என்ற நிலைக்கு வந்துவிடும். இந்த நிலை உருவாகுமாயின் கல்வி, பொருளாதாரம், அரசியல் என்று எல்லாவிதமான பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்புண்டு.

இவ்வாறானதொரு பாதிப்பு ஏற்பட்டுவருகின்றது என்பதை இந்தியத் தமிழர்களும் அவர்களை வழிநடத்துகின்ற அரசியல் மற்றும் சமூக தலைமைகளும் புரிந்து கொண்டுள்ளனவா என்று எண்ணத் தோன்றுகின்றது. இச்சமூகத்தின் பல்வேறு தரப்பினர்களினதும் அசமந்தப்போக்கே இன்றைய நிலைக்குக் காரணமாகும்.

அரசியல் தலைமைத்துவங்கள். சமூகநிறுவனங்கள், கல்வியியலாளர்கள், தொழிற்சங்கங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினரும் இந்த நிலைக்குக் காரணகர்த்தாக்கள் ஆகும். நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்புகளாக திகழும் இந்திய வம்சாவளியினரின் சனத்தொகையானது வீழ்ச்சி அடைந்து வருவது அந்த சமூகத்தின் முன்னேற்றத்துக்கு பாரிய தடையாக இருக்கும்.

இவ்வாறான விடயங்களை கருத்திற்கொண்டு இந்தியத் தமிழர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அத்தோடு மலையக அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் இந்த சமூகத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதின் அவசியத்தை எடுத்துக்கூறவேண்டும்.

# அடிப்படை தேவைகளுக்காக தவிக்கும் றம்பொட மக்கள்!

**நுவரெலிய** மாவட்டத்துக்குட்பட்ட றம்பொடை டிவிசனில் அமைந்துள்ள ஆறு தோட்டங்களை உள்ளடக்கிய புரட்டொப் குறூப் (பெரட்டாசி தோட்டம்) என்ற தோட்டப்பகுதியில் வாழும் மக்கள் பலவருடங்களாக அடிப்படை வசதிகள்கூட இன்றி கடும் சிரமத்துக்கு மத்தியில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். கல்வி, சுகாதார, போக்குவரத்து, தபால், தொடர்பாடல் போன்ற வசதிகள் இல்லாததால் இப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு தொடர்ந்தும் கொத்தடிமைகளாகவே வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. புரட்டொப் குறூப்பில் அமைந்துள்ள பூச்சிக்கொடை, அயரி, மேரியல், ரஸ்புருக், பெரட்டாசி, மேமலை ஆகிய தோட்டங்களில் தமிழ் மக்களே முழுமையாக வாழ்கின்றனர்.

இவர்கள் வாழும் பகுதிகளில் மொத்த வியாபார நிலையங்கள், பாடசாலை உபகரணங்களை விற்பனை செய்யும் நிலையங்கள், ஆடை விற்பனை நிலையங்கள், சிகை அலங்கார நிலையங்கள், பாமசி, தொடர்பாடல் நிலையங்கள் எனத்தேவையான எதுவுமேயில்லை. இருக்கும் சில்லறை வியாபார நிலையங்களிலும் உச்ச விலை என பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ரஸ்புருக்கிலிருந்து புசல்லாவைக்கு 1 மணித்தியாலயத்தில் செல்லக் கூடியதாக இருந்தாலும், பெரட்டாசி - புஸல்லாவை வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் இரண்டு மணித்தியாலயத்துக்கும் மேலாக கடும் சிரமத்துக்கு மத்தியில் பயணம் செய்ய வேண்டியுள்ளது.கட்டிக்குத் தலை, காச்சாமலை, வீடன் ஆகிய தோட்டத்து மக்களும் இந்த வீதியையே போக்குவரத்துக்காகப் பயன்படுத்துவர்.

அதுவும் உரிய நேரத்துக்கு போக்குவரத்து வசதிகள் இல்லாததால் தோட்டத்தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் விடுமுறை எடுத்துவிட்டே நகருக்கு வரவேண்டியுள்ளது. காலையில் சென்றால் பொருட்களை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வருவதற்கு மாலையாகிவிடும்.

எனவே, எங்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என தோட்டப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அயரி என்ற தோட்டத்தில் அமைக்கப்பட்ட வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டு கிசிச்சைப் பெறுவதற்கான வசதி அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அத்துடன், அவசர சிகிச்சைப் பிரிவோ அல்லது சத்திரசிகிச்சைப் பிரிவோ, கதிரியக்கப் பிரிவோ அதில் அமைக்கப்படவில்லை.

இதனால், திடீர்விபத்துகளால் பாதிக்கப்படுவோரைக்கூட புசல்லாவைக்கு அல்லது கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல வேண்டிய துன்பநிலை காணப்படுகின்றது.

அம்புலன்ஸ் வசதிகள் இல்லாததால் கொழுந்து ஏற்றும் லொறியிலேயே நோயாளர்கள் கொண்டுச் செல்லப் படுவார்கள். வீதி சீர்கேடு காரணமாக நோயாளி இடைநடுவே இறந்துவிடுகின்றனர். கர்ப்பினி தாய்மார்களுக்கும் வழியிலேயே பிரசவம் ஏற்பட்டுவிடுகின்றது.

நாய்க்கடி, பாம்புக்கடி, குளவிகொட்டு போன்றவற்றுக்கு உரிய மருத்துவ வசதிகள் இல்லாததால் நகரத்துக்கு வருவதற்கு சிரமப்பட்டு பலர் நாட்டு வைத்தியத்தை அணுகுவதால் அதனாலும் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இதற்கு புறம்பாக, முறையாக மின் விநியோகம் வழங்கப்படாததால் லயன் அறைகள் அடிக்கடி தீப்பற்றி எறிதல், சுகாதார ஆலோசனைகள் இன்மை, சிறுவர் துஷ்பிரயோகங்கள், முகவர் நிலையங்களால் வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்கள் ஏமாற்றப்படுகின்றமை, சுயதொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு கடன் உதவி இன்மை, ஆசிரியர்கள் பற்றாக்குறை, கல்வி வீழ்ச்சி உட்பட மேலும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

எனவே, ஊடகங்களும் குறிப்பாக தமிழ் ஊடகங்களும் மலையக சிவில் அமைப்புகளும் எமது பிரச்சினைக்கு விடிவைத் தேடிதரவேண்டும் என புரட்டொப் தோட்டத்தில் வாழும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# ஆயுத வல்லரசாகும் ஜப்பான்

**தொகுப்பு: வேணு கிருஷ்ணா**

### ஜப்பானின் வரலாற்றுப் பின்னணி

ஜப்பான், உலகமே வியந்து பார்க்கும் ஒரு நாடு. 'மேட் இன் ஜப்பான்' (Made in Japan) என்பதே தரமான பொருளுக்கான சான்று என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விஷயம். இந்தியா, சீனா போன்ற நாடுகள் காலனிய ஆட்சியாலும் வறுமையாலும் சீர்கெட்டு பின்தங்கியிருந்தபோது, நூறு வருடங்களுக்கு முன்பே ஜப்பான் மட்டும் பொருளாதார வலிமைமிக்க, தொழில்வளர்ச்சி அடைந்த, முன்னேற்றமடைந்த நாடாக மாறியது எப்போதும் வியப்புக்குரிய விஷயமாகவே பேசப்படுகிறது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜப்பானில் ஏற்பட்ட அரசியல் மாற்றமே இந்த சாதனைகளுக்கெல்லாம் காரணமாக அமைந்தது. அந்த மாற்றத்துக்கு வரலாறு இட்டப் பெயர் மெய்ஜி புரட்சி அல்லது மெய்ஜி மீட்சி என்பதாகும். இந்த மெய்ஜி மீட்சி ஜப்பானின் உள்நாட்டு அரசியலில் மட்டுமல்ல, உலக நாடுகளுடனான ஜப்பானின் உறவுகளிலும் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது.

நான்கு பெரிய தீவுகளையும் ஆயிரக் கணக்கான சிறிய தீவுகளையும் கொண்ட ஜப்பான் நாடு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. பண்டை காலம் முதலே ஜப்பானின் பல்வேறு பகுதிகள் பல்வேறு வம்சங்களால் ஆளப்பட்டுவந்துள்ளது. 17ஆம் நூற்றாண்டில் 'டொகுகவா ஷோகன்கள்' ஜப்பானில் செல்வாக்குப்பெற்று அந்நாட்டின் பெரும் பகுதியை ஆளத்தொடங்கினர். (ஷோகன் என்றால் படைத்தலைவர் என்று பொருள்) 1860களில் யோஷின்பு என்ற ஷோகன் ஜப்பானை ஆண்டுகொண்டிருந்தார். தொழில் வளர்ச்சியோ நவீனமயமோ இல்லாத அன்றைய ஜப்பான் நிலப்பிரபுத்துவ அமைப்பில் கட்டுண்டு இருந்தது. பெரும்பாலான நிலங்கள் ஒரு சில நிலப்பிரபுக்களுக்கு சொந்தமாக இருந்தன. 'சமுராய்' என்றழைக்கப்பட்ட வகுப்பினர் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்று சிறப்பு சலுகைகளோடு வாழ்ந்தனர். சாதாரண மக்களின் வாழ்க்கை மிக மோசமான நிலையில் இருந்தது.

1850களில் வியாபாரம் செய்வதற்காக ஜப்பானில் நுழைந்தனர். ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் இந்தியாவைப்போல ஜப்பானை தங்களது காலனி நாடாக மாற்ற அவர்களால் முடியாவிட்டாலும் அநீதியான வியாபார ஒப்பந்தங்களால் ஜப்பானுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தினர். ஐரோப்பிய, அமெரிக்கர்களை ஜப்பானிய ஷோகன் எதிர்த்தாலும் மேற்கத்தியர்களிடம் இருந்த நவீன ஆயுதங்களும் தொழில்நுட்பமும் ஜப்பானுக்கு அச்சுறுத்தலாகவே இருந்தது. தமது படைகளை பலப்படுத்த ஷோகனும் மற்ற பிரபுக்களும் நவீன ஆயுதங்களையும் தொழில்நுட்பத்தையும் இறக்குமதி செய்ய ஆரம்பித்தனர். எனினும் மேற்கத்திய நாடுகளை எதிர்ப்பதில் ஷோகனின் இயலாமை மக்களிடையே பெரும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் தோற்று வித்தது.

"வளமான நாடு, வலிமையான இராணுவம்" என்னும் கோஷத்துடம் இளம் சமுராய்கள் தலைமையில் ஷோகன் எதிர்ப்பாளர்கள் ஆட்சி மாற்றத்துக்கு போராடினர். முடிவில், எதிர்ப்பாளர்களின் கோரிக்கைக்குப் பணிந்த ஷோகன் யோஷின்பு ஜனவரி 3, 1868ல் ஆட்சியை மெய்ஜி மன்னர் 'மட்சுஹிடோ'விடம் ஒப்படைத்தார். அன்று தொடங்கியதுதான் மெய்ஜி மீட்சி எனப்படும் சீர்த்திருத்த காலம். நன்கு கற்றறிந்த, மக்கள் செல்வாக்குப்பெற்ற குழுவினரின் ஆலோசனைப்படி 'இடோ'வை (இன்றைய டோக்கியோ) தலைநகராகக் கொண்டு மெய்ஜி மன்னர் ஆட்சிபுரிய ஆரம்பித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. பல நூறு பகுதிகளாக நிலப்பிரபுக்களால் ஆளப்பட்டுவந்த பகுதிகள், பல ஒன்று சேர்க்கப்பட்டு 75 பகுதிகளாக குறைக்கப்பட்டன. ஜப்பான் முழுமையாக ஒரே மத்திய அரசின் கீழ் வந்தது.. அனைவரும் சமம் என்று அறிவிக்கப்பட்டது. மக்களுக்கிடையே இருந்த வகுப்பு பிரிவினைகள் சட்டப்படி ஒழிக்கப்பட்டன. சமுராய்கள் மற்றும் இதர மேற்குடி மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகள் ரத்து செய்யப்பட்டன. ஷோகனின் படைகள் கலைக்கப்பட்டது. தேசிய ராணுவம் உருவாக்கப்பட்டு மேற்கத்திய பாணியில் நவீனப்படுத்தப்பட்டது. 21 வயது நிரம்பிய ஆண்களுக்கு மூன்று வருட இராணுவ சேவை கட்டாயம் ஆக்கப்பட்டது. குறைந்தபட்சம் ஆறுவருட பள்ளிக்கல்வி அனைவருக்கும் உறுதிசெய்யப்பட்டது. நிலச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. வரிவிதிப்பு முறைகள், சட்ட - நீதிமன்ற அமைப்புகள், கல்விமுறை மேற்கத்திய முறையில் மாற்றப்பட்டன.

புத்தமதத்தின் செல்வாக்கு குறைக்கப்பட்டு ஜப்பானியரின் ஆதிமதமான 'ஷிண்டோ' மதம் அரசினால் முன்னிலைப்படுத்தப்பட்டது. மதம், ஆட்சி இரண்டுக்கும் மன்னரே தலை வராக இருந்தார். அவ்வப்போது தலைதூக்கிய ஷோகன் ஆதரவாளர்கள் முழுமையாக அடக்கப்பட்டனர். அமெரிக்கா போன்ற நாடுகளை முன்மாதிரியாகக் கொண்டு முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு உருவாக்கப்பட்டது. தனியாருடன் இணைந்து அரசு தொழிற்துறையை வளர்க்க பெரும் முயற்சியில் இறங்கியது. நவீன மேற்கத்திய தொழிநுட்பம் ஜப்பானுக்கு கொண்டுவரப்பட்டது. புதிய ரயில் பாதைகள், தபால் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள், கப்பல் கட்டும் துறைகள், சுரங்கங்கள், ஆயுதத் தொழிற்சாலைகள், சீனி, சீமெந்து, வேதிப்பொருட்கள், கண்ணாடி என எண்ணற்ற பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அடுத்த இருபது ஆண்டுகளில் தொடங்கப்பட்டன. பல பெரிய தொழில் குழுமங்களும் உருவாகின.

அரசியல் சட்டப்படி 1889ஆம் ஆண்டில் 'டயட்' எனப்படும் பாரளுமன்றம் ஏற்படுத்தப்பட்டு செயற்படத் தொடங்கியது. இதர ஆசிய நாடுகள் காலனி ஆட்சியாளர்களால் சுரண்டப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் நான்கு கால் பாய்ச்சலில் வேகமாக முன்னேறியது ஜப்பான். பொருளாதார வலிமையிலும் வாழ்க்கை தரத்திலும் மேற்கத்திய நாடுகளுக்கு இணையாக வளர்ந்தது ஜப்பான். அதன் இராணுவ வலிமையும் பலமடங்கு பெருகியது. தந்து பக்கத்து நாடான கொரியாவின் மீது உரிமை கொண்டாடுவதில் ஜப்பானுக்கும் சீனாவுக்கும் ஏற்பட்ட மோதலால் 1894 போர் வெடித்தது. ஜப்பான் போரில் வென்று மேற்கத்திய நாடுகளை திரும்பிப் பார்க்க வைத்தது. அதன் பிறகு ரஷ்யாவுடன் ஏற்பட்ட போட்டியின் காரணமாக 1905ல் நடைபெற்ற போரிலும் ரஷ்யாவை வென்றுதான் ஒரு வல்லரசாக உருவாகி வருவதை உலகுக்கு காட்டியது. இந்த வெற்றிகள் ஜப்பானிய மக்களிடையே தேசிய உணர்வை அதிகரித்தன. பெருமிதம் கொள்ள வைத்தன.

1912இல் மெய்ஜி மன்னர் இறந்துவிட அவரது மகனான யோஷிஹிடோ மன்னரானார். இவரது ஆட்சிக்காலத்தில் மெய்ஜி புரட்சியின் பலன்களை மக்கள் முழுமையாக அனுபவிக்கத் தொடங்கினர். பொருளாதாரம் வளர்ந்ததால் மக்கள் செல்வச்செழிப்புடன் இருந்தனர். வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. மேற்கத்திய கல்விமுறையும், தொழிநுட்பமும் மக்களின் சிந்தனை போக்கில் பெரும் மாற்றத்தை உண்டாக்கின. இதனால் மக்கள் அதிகப்படியான அரசியல் சுதந்திரத்தை கோரினர். அரசியல் கட்சிகள் உருவாகி வலுப்பெற்றன. பழமையான கருத்துகள் மதிப்பிழந்தன. அனைவருக்கும் ஓட்டுரிமை வேண்டும் எனக்கோரப்பட்டது. 1925இல் வயது வந்த அனைத்து ஆண்களுக்கும் ஓட்டுரிமை அளிக்கப்பட்டது. 1912-1930 காலகட்டத்தில் அமெரிக்க மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கு இணையாக இருந்தது ஜப்பானியரின் வாழ்க்கை.

1930களில் ஜப்பானில் மீண்டும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட உலகலாவிய பொருளாதார பெருமந்தம் ஜப்பானை கடுமையாக பாதித்தது. அதனால் மூலப்பொருட்களுக்கு ஏற்பட்ட தேவையை நிறைவுசெய்ய மேற்கத்திய நாடுகளைப் போலவே காலனிகளை உருவாக்கும் முயற்சிகளில் ஜப்பான் இறங்கியது. இந்தச் சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட இராணுவம் ஜப்பானிய ஆட்சியின் தலைமையை கைப்பற்றிக்கொண்டது. பின்னர் இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வியடைந்தது. போரினால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட ஜப்பானின் பொருளாதாரம் மீண்டுவரும் என்று யாரும் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். ஆனால் அடுத்த முப்பது ஆண்டுகளிலேயே ஜப்பான் உலகின் முன்னேற்றமடைந்த நாடாக மீண்டு உருப்பெற்றது. இந்த அதிசயத்துக்கு காரணம் மெய்ஜி புரட்சி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல், நிர்வாகம் மற்றும் கல்வி சீர்திருத்தங்களும், அடிப்படை கட்டமைப்புகளும்தான் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை.

### ஜப்பானின் அரசியல் சாசனத்தில் 2020ஆம் ஆண்டுக்குள் மாற்றம்

ஜப்பானின் அரசியல் சாசனத்தில் 2020-ஆம் ஆண்டுக்குள் மாற்றம் கொண்டு வரப்படலாம் என அந்நாட்டின் பிரதமர் ஷின்ஸா அபே தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், ஜப்பானின் முப்படைகளும் அந்நாட்டின் சுயபாதுகாப்புக்காக மட்டுமே என்ற வரையறை மாற்றப்பட்டு, பிற நாடுகள் மீது ஜப்பான் தாக்குதல் நடத்த அந்நாட்டு அரசியல் சாசனம் வழிவகை செய்யக்கூடும் என்று கூறப்படுகிறது.

இரண்டாம் உலகப் போரின்போது சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள்மீது படையெடுத்து ஜப்பான் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து அமெரிக்கா வீசிய அணுகுண்டுகளால் பேரழிவை சந்தித்த ஜப்பான், தனது படைகள் பிறநாடுகள்மீது தாக்குதல் நடத்துவதை அரசியல் சாசனம் மூலம் தடை செய்தது.

அதன்படி முப்படைகளும் சுயபாதுகாப்புக்காக மட்டுமே என வரையறை செய்யப்பட்டது.

இந்நிலையில், சீனக் கடலில் சர்ச்சைக்குரிய தீவுகள் விவகாரத்தில் சீனா எடுத்துவரும் அதிரடி இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, தனது நிலையை மாற்றிக்கொள்ள ஜப்பான் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜப்பான் பிரதமர் ஷின்-ஸா அபே அளித்துள்ள பேட்டியில், "2020ஆம் ஆண்டுக்குள் ஜப்பானின் அரசியல் சாசனத்தில் மாற்றம் வரலாம்.

சுயபாதுகாப்புக்காக மட்டுமே இராணுவம் என்றநிலை மாறுகையில், இந்த பிராந்தியத்தில் குலைந்துள்ள அமைதியும், ஸ்திரத்தன்மையும் மீண்டும் நிலைநிறுத்தப்படும்" என்று கூறினார்.

மேலும் தனது புத்தாண்டு உரையில், நம் நாட்டின் அரசியல் சாசனம் இயற்றப்பட்டு 68 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இந்நிலையில், மாறிவரும் சூழலுக்கு ஏற்ப அதில் மாற்றம் கொண்டுவருவது குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, இரண்டாம் உலகப்போரில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இராணுவ அதிகாரிகள் புனிதப்படுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய யாசுகுனி போர் நினைவகத்துக்கு சில நாள்களுக்கு முன்பு பிரதமர் ஷின்ஸா அபே சென்றுவந்தார்.

அந்தப் போரில் ஜப்பான் படையினரால் பெரிதும் பாதிக்கப்பட்ட சீனா மற்றும் தென்கொரியா நாடுகள் இதற்கு கண்டனம் தெரிவித்தன. அமெரிக்காவும் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது.

ஜப்பானின் அமைதிவாத நிலையில் மாற்றம் ஏற்படுவதன் அடையாளம்தான் இது என்று கூறப்படுகிறது.

### அமெரிக்க, ரஷ்ய மேல்நிலை வல்லரசுகளின் வலிமை

அமெரிக்க மூலதனக் குவிப்புக்கள் மாறத் தொடங்கின. 17,500 கோடி ரூபாய்களுக்கு மேல் வர்த்தகம் செய்த 12 தொழில் கழகங்கள் அமெரிக்காவிலுள்ள 500 பெரிய தொழில் கழகங்களின் மொத்த சொத்துக்களின் மதிப்பில் 27 வீதத்தையும், வர்த்தகத்தில் சுமார் 29 வீதத்தையும் 1970ஆம் ஆண்டே பிடித்து வைத்திருந்தன. நாட்டிலுள்ள 50 பெரும் வர்த்தக வங்கிகளின் சொத்து, மற்றும் வைப்புத் தொகையில் 61 வீதத்தை பத்து மிகப்பெரிய வங்கிகள் கைப்பற்றின.

வெளிநாடுகளில் அமெரிக்காவின் நேரடி மூலதனம் இடல் 1950 களில் 20,550 கோடி

# புத்தாண்டுப் பலன்கள் 2014

## இப்படி இருக்கிறது

## பொதுப்பலன்

எப்போதும் ஆங்கிலப் புதுவருடம் ஜனவரி 1ஆம் திகதி கன்னியா லக்கினத்தில் உதயமாகும். நட்சத்திரம், கிழமை, கிரக நிலைகள் மட்டும் மாறுபடும். 2014ஆம ஆண்டின் கூட்டு எண்- 7. இது கேதுவின் எண்- மூல நட்சத்திரத்தில் பிறப்பதால், அதுவும் கேதுவின் நட்சத்திரம்- வருடம் பிறப்பது கேது திசை இருப்பில். எல்லாம் கேதுமயம் என்பதால், இந்த 2014 விநாயகரின் அருள்கடாட்சத்தோடு பிறக்கிறது. அசுவினி, மகம், மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் ஜாதகரீதியாக நடப்பு கேது திசை, கேது புத்தி நடப்பவர்களுக்கும் 2014 புதுவருடம் இதமான வருடமாக இனிய வருடமாகத் திகழும்.

1-1-2014 என திகதி, மாதம், வருடம் எல்லாவற்றையும் கூட்டினால் 9 வரும். இது செவ்வாயின் எண். புதுவருடம் கன்னியா லக்கினத்தில் பிறக்கிறது. லக்கினத்தில் செவ்வாய் இருக்கிறார். செவ்வாயின் ராசியான மேஷத்தில் தசாநாதன் கேது வருட எண் நாயகன் இருக்கிறார். அந்தக் கேதுவையும் செவ்வாய் 8ஆம் பார்வை பார்க்கிறார்.

2014 தனுசு ராசியில் பிறக்கிறது. அதன் அதிபதி குரு ராசிக்கு 7இல் லக்கினத்துக்கு 10இல் இருக்கிறார். ராசியையும் பார்க்கிறார் லக்கினாதிபதி புதனையும் பார்க்கிறார்.

ஆகவே, மிதுன ராசி- மிதுன லக்கினம், கன்னி ராசி- கன்னி லக்கினம், தனுசு ராசி- தனுசு லக்கினம் ஆகியவற்றில் பிறந்தோருக்கெல்லாம் 2014 மிகச் சிறந்த வருடமாகவும் யோகமான வருடமாகவும் அமையும். அவரவர் ஜாதகத்தில் என்ன தசாபுத்திகள் நடந்தாலும் சரி - எந்த ராசி, லக்கினத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் சரி- மேலே குறிப்பிட்ட நட்சத்திரத்திலும் ராசி- லக்கினத்திலும் பிறந்தவர்களுக்கு 2014 அற்புதமான வருடமாகவும் அதிரஷ்டம் நிறைந்த வருடமாகவும் அமையும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

### தனுசு

**மறப்போம் மன்னிப்போம் என்கிற கொள்கையை உடையவர்களே!** இந்தப் புத்தாண்டு பிறக்கும்போது சுக்கிரன் உங்கள் ராசிக்கு 2ம் வீட்டில் நிற்பதால் தடைப்பட்டிருந்த வேலைகளெல்லாம் மடமடவென்று முடியும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிரிந்திருந்த தம்பதி ஒன்றுசேருவீர்கள். தள்ளிப்போன திருமணம் தடல்புடலாக நடக்கும். அயல் நாட்டிலிருக்கும் உறவினர்கள், நண்பர்களால் ஆதாயமுண்டு.

வருடப் பிறப்பின்போது செவ்வாய் 10ம் வீட்டில் நிற்பதால் இதுவரை எதிர்பார்த்துக் காத்திருந்த வேலை கிடைக்கும். அநாவசியமாகப் பேசி நண்பர்களை இழந்தீர்களே இனி, நிதானமாகப் பேசுவீர்கள். சகோதர, சகோதரிகளால் உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள். வெகு நாட்களாக தடைப்பட்டிருந்த சகோதரியின் திருமணத்தை சிறப்புமாக முடிப்பீர்கள்.

12.6.2014 வரை உங்கள் ராசிநாதன் குருபகவான் 7ம் வீட்டில் அமர்ந்து உங்களைப் பார்ப்பதால் இதுவரையிலும் உங்களுக்குள் இருந்த திறமைகள் தாமாக வெளிப்படும். அழகோடு கம்பீரமும் கூடியிருக்கும். ஆனால், 13.6.2014 முதல் வருடம் முடியும் வரை குரு 8ம் வீட்டில் மறைவதால் உங்களைப் பற்றிய அவதூறுகளைப் பரப்புவார்கள். ஆனால், நீங்கள் எதையுமே பொருட்படுத்தவேண்டாம்.

தாயாரோடு வீண் விவாதங்களில் ஈடுபடாதீர்கள். அவருக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகளும் வந்துநீங்கும். தாய்வழி சொத்தை பெறுவதில் சிக்கல்கள் வந்துசெல்லும். உங்களின் திறமைமீது உங்களுக்கே அவ்வப்போது சந்தேகம் வரும். ஆழ்ந்த உறக்கம் இல்லாமல் அடிக்கடி மனஅழுத்தம் உண்டாகும். ஊர் பொதுக்காரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும்.

20.6.2014 வரை உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் கேது நிற்பதால் பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வந்துபோகும். சுற்றிய நண்பர்களை கொஞ்சம் கண்காணித்து வையுங்கள். பிள்ளைகளிடம் உங்களின் எண்ணங்களை திணிக்க வேண்டாம். கர்ப்பிணிப் பெண்கள் அதிக எடையுள்ள சுமைகளை தூக்கவேண்டாம்.

21.6.2014 முதல் வருடம் முடியும்வரை கேது 4ம் வீட்டிலும், ராகு 10ம் வீட்டிலும் அமர்வதால் சிலருடைய நிழல் வாழ்க்கையும் தெரியவரும். எதிர்காலம் என்னாகுமோ என்கிற கவலை அடிமனதில் இருந்துகொண்டே இருக்கும்.

இந்தாண்டு முழுக்க சனி 11ம் வீட்டான இலாப வீட்டில் தொடர்வதால் வசதி, வாய்ப்புகள் பெருகும். வருமானம் உயரும்.

வருடத்தின் இறுதியில் 18.12.2014 முதல் சனி 12ல் மறைந்து ஏழரைச் சனியின் தொடக்கமான விரையச் சனி தொடங்குவதால் தூக்கமில்லாமல் போகும். பழைய கசப்பான சம்பவங்களை மறப்பது நல்லது. உங்கள் பலம், பலவீனமறிந்து செயற்படப்பாருங்கள். மற்றவர்களை நம்பி பெரிய முயற்சிகளில் ஈடுபடாதீர்கள்.

**வியாபாரிகளே!** வியாபாரத்தில் கடந்த ஓராண்டு காலமாக ஏற்பட்ட நஷ்டங்களை சரிசெய்வீர்கள். போட்டிகளையும் தாண்டி இலாபம் சம்பாதிப்பீர்கள்.

**உத்தியோகத்தர்களே!** ஜூன் 12ஆம் திகதி வரை அலுவலகத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சுமுகமாக இருக்கும். ஆனால், 13ஆம் திகதி முதல் பணிச் சுமைகூடும். மேலதிகாரியின் கோபத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும். ஆனால், வருடத்தில் இறுதியில் உங்களின் உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும்.

**கன்னிப் பெண்களே!** நல்ல கணவர் வந்தமைவார். சிலருக்கு வேறு இடங்களில் வேலை கிடைக்கக்கூடும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும்.

**மாணவர்களே!** படிப்பில் ஈடுபாடு அதிகரிக்கும். வகுப்பறையில் சகமாணவர்களின் மத்தியில் பாராட்டப்படுவீர்கள். உயர்கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெற்று எதிர்பார்த்த கல்விப்பிரிவில் சேருவீர்கள்.

**அரசியல்வாதிகளே!** கட்சியின் தலைமையிடம் உங்களைப் பற்றி நல்லவிதமான அபிப்ராயத்தை சொல்வார்கள்.

**கலைத்துறையினரே!** மாறுபட்ட சிந்தனை பிறக்கும். உங்களின் புது முயற்சிகள் வெற்றிபெறும். இந்தப் புத்தாண்டு கடந்த ஆண்டைவிட சமூகத்தில் அந்தஸ்தையும் வீடு, மனை, வாகன யோகத்தையும் அள்ளித்தரும்.

### மகரம்

**பல கிழக்கும் மேற்கும் அலைந்தாலும் கிடைப்பதுதான் கிடைக்கும் என்பதை நன்கு அறிந்தவர்களே!** உங்கள் ராசிக்குள்ளேயே பிரபல யோகாதிபதியான சுக்கிரன் அமர்ந்திருக்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் வசதி வாய்ப்புகளில் பலபடி உயரும். தோற்றப் பொலிவுகூடும். உங்களுக்கு வரவேண்டிய பணம்வராமல் போனதால் நீங்கள் வாங்கியிருந்த இடத்தில் திருப்பித்தர முடியாமல் திண்டாடினீர்களே! அந்த நிலையெல்லாம் மாறும்.

இந்தப் புத்தாண்டு உங்கள் ராசிக்கு 12ம் வீட்டில் பிறப்பதால் பழைய கனவுகளெல்லாம் நிறைவேறும். குலதெய்வக் கோவிலைப் புதுப்பிக்க உதவுவீர்கள். பட்டுப்போன மரம் துளிர்ப்பதுபோல இனி எதிலும் வெற்றிபெறுவீர்கள். பழைய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். 12.6.2014 வரை குரு உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் நிற்பதால் அலுவலகச் சூழலே கொஞ்சம் பதற்றமாகத்தான் இருக்கும். பணிச்சுமை கூடுதலாக இருப்பதால் அவ்வப்போது மேலதிகாரியிடம் புலம்பவும் செய்வீர்கள்.

13.6.2014 முதல் வருடம் முடியும்வரை குரு 7ம் வீட்டில் அமர்ந்து உங்களைப் பார்க்க இருப்பதால் உங்களின் முழுத் திறனையும் பயன்படுத்தும் வகையில் நிறைய வாய்ப்புகள் வரும். வீட்டில் நடக்கவிருந்த சுபநிகழ்ச்சிகள் இனி விமர்சையோடு நடக்கும். கணவன் -மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். இந்த வருடத்தில் மழலை பாக்கியம் கிட்டும். விலை உயர்ந்த தங்க ஆபரணம் வாங்குவீர்கள்.

20.6.2014 வரை உங்கள் ராசிக்கு 4ம் வீட்டில் கேது பகவானும், ராசிக்கு 10ம் வீட்டில் ராகுவும் நிற்பதால் சிலர் உங்களின் பெயரை தவறாகப் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது.

21.6.2014 முதல் வருடம் முடியும்வரை கேது 3ம் வீட்டில் அமர்வதால் புதிய முயற்சிகள் பலிதமாகும். உங்களுக்குள் ஒரு சுயகட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இளைய சகோதரவகையில் ஆதாயமடைவீர்கள். ஆனால் ராகு 9ம் வீட்டில் நிற்பதால் அநாவசியச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கும். இந்தாண்டு முழுக்க உங்கள் ராசிநாதன் சனிபகவான் 10ம் வீட்டிலேயே நீடிப்பதால் சவாலான பணிகளை சர்வசாதாரணமாக செய்வீர்கள்.

ஆனாலும், அலுவலகத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்குமாக உங்களை மாற்றிக்கொண்டே இருப்பார்கள். நெருக்கமானவர்களிடம்கூட குடும்ப அந்தரங்க விஷயங்களை பகிர்ந்து கொள்ளவேண்டாம். ஆனால், வருடத்தின் இறுதியில் 18.12.2014 முதல் சனி 11-ம் வீடான லாப வீட்டில் நுழைவதால் திடீர் யோகம், பணவரவு உண்டாகும். கௌரவப் பதவிகள் தேடிவரும்.

**வியாபாரிகளே!** ஜூன் மாதம் முதல் வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகள் ஏமாற்றங்கள் போன்றவற்றிலிருந்து மீள்வீர்கள். பங்குதாரர்களோடு வெளிப்படையாக இருப்பது நல்லது.

**உத்தியோகத்தர்களே!** நீங்கள் இழந்த பொறுப்புகளை மீண்டும் பெறுவீர்கள். நிர்வாகத்திறனும் அதிகரிக்கும். அலுவலகச் சூழ்நிலை அமைதியாக இருக்கும். இடமாற்றம் சாதகமாக அமையும். ஆனாலும் 10ல் சனி தொடர்வதால் மறைமுக பிரச்சினைகள் இருக்கும். ஜூன் மாதம் முதல் பதவி உயர்வோடு சம்பள உயர்வும் பெறுவீர்கள்.

**கன்னிப் பெண்களே!** புதிய வேலைக்கான நேர்முகத் தேர்வில் வெற்றி பெறுவீர்கள். வேலை கிடைக்கும். நல்ல இடத்தில் நீங்கள் எதிர்பார்த்த மாதிரியே வரன் அமையும். கல்யாணம் விமரிசையாக நடக்கும். காதல் குழப்பங்கள் நீங்கும்.

**மாணவர்களே!** பெற்றோர் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள். விளையாடும்போது காயம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்திப் படியுங்கள்.

**அரசியல்வாதிகளே!** தலைமை உங்களின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வார். மக்களுக்கு நெருக்கமாவீர்கள். எதிர்க்கட்சியினரும் மதிக்கும்படி சில கருத்துக்களை வெளியிடுவீர்கள்.

**கலைத்துறையினரே!** உயிரோட்டமான படைப்புகளைத் தருவீர்கள். பெரிய நிறுவனங்களிலிருந்து புதிய வாய்ப்புகள் வரும். இந்தப் புத்தாண்டு பதுங்கியிருந்த உங்களை பளிச்சென முன்னேறவைக்கும்.

### கும்பம்

**எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வம் அடிக்கும் என்பதை உணர்ந்தவர்களே!** உங்களுக்கு இலாப ராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் தொட்டதெல்லாம் துலங்கும். கடினமான வேலைகளைகூட பரபரவென முடித்துக் காட்டுவீர்கள்.

இந்தப் புத்தாண்டு பிறக்கும்போது சூரியனும், புதனும் இலாப வீட்டிலேயே நிற்பதால் பிரச்சினைகளை எளிதாக சமாளிப்பீர்கள். வருடம் பிறக்கும்போது ராசிக்கு 8ல் செவ்வாய் மறைந்திருப்பதால் வாகனத்தில் செல்லும்போது மெதுவாகச் செல்லவும். சிறுசிறு விபத்துகள் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு.

12.6.2014 வரை குரு உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் நிற்பதால் சான்றோர்களின் நட்பு கிடைக்கும். பிரச்சினைகளெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல மறையும். வெகுநாட்கள் தள்ளிப் போய்க்கொண்டிருந்த சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி, உத்தியோகம் அமையும்.

ஆனால், 13.6.2014 முதல் வருடம் முடியும்வரை குரு 6ம் வீட்டிலேயே மறைவதால் காரியத் தடைகள் வந்து-கொண்டே இருக்கும். பல முயற்சிகளுக்குப் பிறகுதான் காரியங்களை முடிக்கவேண்டியது இருக்கும்.

20.6.2014 வரை உங்கள் ராசிக்கு 3ம் வீட்டில் கேது நிற்பதால் கொஞ்சம் நிம்மதி அடைவீர்கள். திட்டமிட்டபடி காரியங்கள் தானாக நடக்கத் தொடங்கும். ராசிக்கு 9ம் வீட்டில் ராகு நிற்பதால் எவ்வளவு சேமித்தாலும் வீண் செலவுகளுக்காகவே பணம் விரயமகும். தந்தைவழி உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகளும் வரும்.

21.6.2014 முதல் வருடம் முடியும்வரை கேது உங்கள் ராசிக்கு 2ம் வீட்டிலும், ராகு 8ம் வீட்டிலும் அமர்வதால் பதட்டத்தை குறைத்துக்கொள்ளுங்கள். வீணான வாக்குவாதங்களை தவிர்த்துவிடுவது நல்லது. இந்தாண்டு முழுக்க உங்கள் ராசிநாதன் சனிபகவான் 9ம் வீட்டில் நிற்பதால் வெற்றியை நோக்கியே மனம் சென்று கொண்டிருக்கும். அத்தியாவசியமான செலவுகள் குறைக்கமுடியாது. தந்தைவழியில் உதவிகள் உண்டு. வெளிநாடு செல்லும் வாய்ப்புவரும். ஆனால், வருடத்தின் இறுதியில் 18.12.2014 முதல் சனி 10ல் அமர்வதால் என்ன செய்தால் வெற்றி பெறலாம் என்று யோசிப்பீர்கள்.

**வியாபாரிகளே!** இலாபம் சுமாராக இருக்கும். அதனால் சட்டத்திற்குப் புறம்பான வகையில் செல்லவேண்டாம். தொழில் இரகசியங்களையும் சொல்லவேண்டாம்.

**உத்தியோகத்தர்களே!** ஜூன் 12ஆம் திகதி வரை அலுவலகப் பணிகளை வேகமாக மடமடவென்று முடிப்பீர்கள். 13ஆம் திகதி முதல் உங்களையும் அறியாமல் வேலை குறித்த அச்சம்வரும். சக ஊழியர்களைப் பற்றிக் குறைகூற வேண்டாம்.

**கன்னிப் பெண்களே!** உங்களின் எதிர்பார்ப்புப்படி நல்ல வேலையிலுள்ள வரன்வரும். திருமணமும் நல்லபடியாக முடியும்.

**மாணவர்களே!** உங்களின் தனித்திறமையை வெளிப்படுத்தி பரிசையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

**அரசியல்வாதிகளே!** எதிர்க்கட்சிக்காரர்களிடம் உங்கள் கட்சி விஷயங்களை பகிர்ந்துக் கொள்ளாதீர்கள். தலைமையின் கோபம் குறையும்.

**கலைத்துறையினரே!** உங்களின் தனித்திறமைகள் வெளிப்படும். படைப்புகளை போராடி வெளியிட வேண்டி வரும். இந்தப் புத்தாண்டு ஒரு பயத்தையும் கேள்விக்குறியையும் தந்தாலும் அவ்வப்போது அனுசரித்துப் போவதன்மூலம் வெற்றிபெற வைக்கும்.

### மீனம்

**எறும்பைப்போல் எப்போதும் சுறுசுறுப்பாக செயற்படுபவர்களே!** உங்கள் ராசிக்கு 10ம் வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் பழைய கசப்பான அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொண்டிருப்பீர்கள். புதிய அனுபவங்களை சுமந்துகொண்டு இனி பயணிப்பீர்கள். சின்னச் சின்ன சந்தர்ப்பங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். பெரிய நிறுவனம் உங்களை நல்ல சம்பளத்திற்கு ஒப்பந்தம் செய்யும்.

பணவரவு உண்டு. போட்டித் தேர்வுகளில் வெற்றிப் பெற்று புதுவேலையில் சேர்வீர்கள். பேசாமல் இருந்த நண்பர்கள் வலிய வந்துபேசுவார்கள்.

12.6.2014 வரை குரு உங்கள் ராசிக்கு 4ம் வீட்டில் நிற்பதால் அலுவலகச் சூழல் கொஞ்சம் இறுக்கமாகத்தான் இருக்கும். எப்போதும் பதட்டத்துடன் காணப்படுவீர்கள். ஆனால், 13.6.2014 முதல் வருடம் முடியும்வரை குரு 5ம் வீட்டிலேயே அமர்வதால் மனதில் நிம்மதி பிறக்கும். இதுவரை வீட்டில் தடைப்பட்டுக் கொண்டிருந்த சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். புதியதாக வீட்டுமனை வாங்குவீர்கள். வருமானத்தை உயர்த்த பல்வேறு விதங்களில் யோசிப்பீர்கள். மகனுக்கு எதிர்பார்த்த குடும்பத்திலிருந்து நல்ல பெண் அமைவார்.

20.6.2014 வரை உங்கள் ராசிக்கு 2ம் வீட்டில் கேதுவும், 8ல் ராகுவும் அமர்ந்திருப்பதால் மறைமுக எதிரிகள் ஏமாற்றுவதற்கு முயற்சிப்பார்கள். அதனால்

கவனமாக இருந்து கொள்ளுங்கள், உங்களின் தனிப்பட்ட விஷயங்களை எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

21.6.2014 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்குள்ளேயே கேது பகவானும், ராசிக்கு 7ம் வீட்டில் ராகுவும் அமர்வதால் கோயில் விசே'ங்களை முன்னின்று நடத்துவீர்கள். கணவன்- மனைவிக்குள் ஈகோ பிரச்னையால் பிரிவு வரக்கூடும். இந்தாண்டு முழுக்க சனி 8ல் நின்று அ்'டமத்துச் சனியாக வருவதால் உணர்ச்சிவசப்பட்டு பேசி வார்த்தைகளை இறைக்காதீர்கள்.

வருடத்தின் இறுதியில் 18.12.2014 முதல் சனி 9ம் வீட்டில் அமர்வதால் தெளிவாக எல்லா முடிவுகளையும் எடுப்பீர்கள். மற்றவர்களின் மனநிலையைப் புரிந்துப் பேசும் பக்குவம் உண்டாகும். நெருடலான, தர்ம சங்கடமான சூழ்நிலைகளெல்லாம் நீங்கும்.

**வியாபாரிகளே!** அஷ்டமத்துச் சனி தொடர்வதால் கடன்வாங்கி பெரிய முதலீடுகள் செய்து வியாபாரம் தொடங்கவேண்டாம். ஜூன் மாதம் முதல் போட்டிகளில் வியாபாரத்தை எத்தனை போட்டிகள் இருந்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**உத்தியோகத்தர்களே!** ஜூன் 12ஆம் திகதி வரை அலுவலகத்தில் மூத்த அதிகாரிகளால் புறக்கணிக்கப்படுவீர்கள். ஜூன் 13ஆம் திகதி முதல் உங்களின் திறமைகளை புரிந்துகொண்டு ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார்கள். இழந்த சலுகைகளை மீட்பீர்கள்.

**கன்னிப் பெண்களே!** உங்களின் பலருக்கு உயர்கல்விதான் முக்கியம் என்று தடைப்பட்ட கல்வியைத் தொடர்வீர்கள்.மே மாதம் வரையிலும் குழப்பங்கள் இருந்து பிறகு சரியாகும்.

**மாணவர்களே!** படித்தால் மட்டும் போதாது விடைகளை எழுதிப் பாருங்கள். கடினமாக உழைத்து அதிக மதிப்பெண் பெறுவீர்கள்.

**அரசியல்வாதிகளே!** கோஷ்டி பூசல்கள், மறைமுக எதிரிகள் இவர்களிடமிருந்து விடுபட்டு தலைமைக்கு நெருக்கமாவீர்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் உதவுவார்கள்.

**கலைத்துறையினரே!** நல்ல படைப்பு உங்களிடமிருந்து வெளிவரும். பெரும் பாராட்டுகள் கிடைக்கும். வாடிப் போயிருந்த உங்களை இந்தப் புத் தாண்டு வளம்பெற வைக்கும். (முற்றும்)




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

**உலகில்** இருக்கக்கூடிய அத்தனை பழங்களும் ஒருமுறை ஒன்றுசேர்ந்து ஒரு மாநாட்டைக் கூட்டின. தலைமை யேற்றுப் பேசிய பழம், உலகில் உள்ள பழங்களில் எந்தப் பழம் அதிகச் சுவையுடையது சிறப்புடையது? என்ற கேள்வியுடன் தன் தலைமை உரையை முடித்துக் கொண்டது.


பழங்கள் ஒன்றுக்கொன்று அடித் தொண்டையில் குசுகுசுவெனப் பேசின. அப்பிள் பழம், மாம்பழம், அன்னாசிப் பழம், கொய்யாப்பழம், மாதுளம் பழம் எல்லாம் ஒவ்வொன்றும் தானே அதிகச் சுவை உடையது என்று கூறி மார்தட்டின.

ஆனால், திராட்சைப் பழம் மட்டும் எதுவும் பேசாமல் அமைதியுடன் இருந்தது.

எல்லாப் பழங்களும் திராட்சைப் பழத்தை வியப்புடன் பார்த்த வண்ணம் இருந்தன. திராட்சைப் பழம் எதையாவது பேசும் என்று எதிர்பார்த்தன. ஆனால், அதுவோ மௌனம் காட்டியது.

இதனால் மற்ற பழங்கள் திராட்சை பழத்தை பார்த்து இழிவாக சிரித்தன.

# ஏன் மௌனம்?



அப்போது பலாப்பழம் ஒன்று உருண்டு வந்தது. அது திராட்சைப் பழத்தைப் பார்த்து அன்புடன் கேட்டது. "திராட்சையே... நீ ஏன் மௌனமாக நிற்கிறாய்? எனக்குத் தெரியும். உலகில் உள்ள பழங்களிலேயே சிறப்புப் பெற்றவன், நன்மையைச் செய்பவன், நலம் அளிப்ப வன், சுவை நிரம்பியவன் நீதான் என்று!

ஆனால், அதையும் தாண்டிய ஒரு சிறப்புத் தகுதி உன்னிடம் உண்டு. அதை நீயே உன் வாயால் சொல்ல வேண்டும். அப்போது தான் மற்றப் பழங்களும் உன் தகுதி பற்றி அறிந்துகொள்ளும்," என்று கூறியது.

திராட்சைப் பழம் அமைதியாகக் கூறியது. "அண்ணா, நீங்கள் எல்லாருமே, தனித்தனியாகவே வருகிறீர்கள். தனித்தனியாகவே விற்பனை செய்யப்படுகிறீர்கள். ஆனால், நாங்களோ, ஒரு கூட்டமாக, கொத்தாக வளருகிறோம். நாங்கள் ஒருவர் வளர்வதற்கு மற்றவர்களுக்கு இடம் தருகிறோம். விட்டுக்கொடுத்து வாழ்கிறோம். விற்பனைக் குப் போகும்போதும் கொத்தாகவே செல்கிறோம். தனியாக நாங்கள் விலை போவதில்லை.

"எங்களைச் சாறாக்கிக் குடிக்கும்போது கொத்துக் கொத்தாகவே அழிந்துபோகிறோம்.

வாழ்விலும், வளர்ச்சியிலும், மரணத்தி லும் நாங்கள் இணைபிரியாமல் இருக்கி றோம். அதனால்தான் நாங்கள் சிறந்த வர்கள் என்ற அங்கீகாரத்தை மனிதர் களிடமிருந்து அடைந்திருக்கிறோம். வேறு காரணமில்லை!" என்றது.

மற்ற பழங்கள் வெட்கத்தால் தலைகுனிந்தன.

வாரம் ஒரு **திருக்குறள்**

**கள்ளுண்ணாமை**



**உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பர் கள்ளுண் பவர்.**

கள்ளை மறைந்திருந்து குடித்து அறிவு மயங்குபவர், உள்ளூரில் வாழ்கின்றவரால் உள்ளான செய்திகள் ஆராயப்பட்டு எந்நாளும் சிரிக்கப்படுவர்.

குறள்:927

**கி.மு.**4000 த்திலேயே களி மண்ணை பேப்பர் போல் பயன்படுத்தி, அதில் சட்டங்கள், உடன்பாடுகள், அட்டவணைகள் போன்றவை எழுதப்பட்டன. போகப்போக பேசுகிற மொழியை பிரித்து தனிப்படுத்தி ஒவ்வொரு எழுத்துக்கும் குறியீடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

காகிதம் என்ற ஒன்று இல்லாத காரணத்தால் ஈரக்களிமண்ணை பரப்பி அதில் எழுத்தாணியால் எழுதி, அது உலர்ந்தவுடன் ஈரக்களி மண்ணை அதன்மீது வைத்து பேக்கிங் செய்துவிடுவர். அதை கீழே போட்டு உடைத்துவிடாமல் மிக ஜாக்கிரதையாக கொண்டு சேர்க்க வேண்டும். பெற்றுக்கொண்டவர் பார்சலை லேசாக தட்டி உதிர்த்தால் போதும் உள்ளே உள்ள விஷயத்தை படிக்கலாம்.

# களிமண் பழமொழிகள்!

ஆயிரக்கணக்கான குறியீடுகளை வேகமாக களிமண்ணில் எழுத கல்வியறிவு அதிகமாக தேவைப்பட்டதால், பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக் கப்பட்டன. அங்கு சட்டம், மருத்துவம், அரசியல் போன்ற விஷயங்களை எழுதுவதற்கு தனித் தனியாக பயிற்சியும் அளிக்கப்பட்டது.

எழுத்து என்பது இப்படியாக முழுவடிவம் பெற 800 ஆண்டுகள் பிடித்தன. மொழி, மனிதனின் கைவசப்பட்டவுடன் அடுத்த கட்டமாக இலக்கியம் பிறந்தது. கி.மு., 2000-ல் பாபிலோனியர்களால் எழுதப்பட்ட சிறுகதைகள், புராணங்கள், சுற்றுலா தகவல்கள், மன்னர் மேற்கொண்ட வேட்டைகள் போன்றவை தொல்பொருள் ஆராய்ச்சிகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 28.01.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1027**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1025**

**ச.சிந்துஜன், கோப்பாய் மேற்கு, கோப்பாய்.**

பரிசுக்குரியவர்: 1025

01. ரா.உஷாந்தினி, புத்தூர்.
02. யே.கிறிஸ்துராஜா, 6ம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி.
03. ம.சர்மிளா, உடப்பு, புத்தளம்.
04. கு.ஆர்த்திகா, பிரதான வீதி, கண்டி.
05. எம்.அபிஷா, கோவில் வீதி, மன்னார்.
07. ரி.இர்பான், வாகரை, மட்டக்களப்பு.
08. வ.ரிஷான், உயரப்புலம், ஆனைக்கோட்டை.

பாராட்டுக்குரியவர்கள்

# தகவல் களஞ்சியம்

## பாசப் பிணைப்பு!



வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் மகிழ்ந்து கொண்டாடு வோம்! அய்யோ என் செல்லமே!

எஜமானருக்கு நாய் நன்றியுள்ள செல்லப்பிராணி என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இதை நிரூபிக்கும் விதமான ஒரு சம்பவம் ஆர்ஜென்டினா நாட்டில் நடந்துள்ளது. மிகுல் குஸ்மேன் என்பவர், கப்டன் என்ற பெயருடைய ஜெர்மன் ஷெபேர்டு நாயை வளர்த்துவந்தார்.

கடந்த 2006ம் ஆண்டு மார்ச் மாதம் அவர் மரணமடைந்தார். அது முதல் அவர் வளர்த்த செல்லப்பிராணியான நாய் வீட்டிலிருந்து திடீரென்று மாயமாகிவிட்டது. அது எங்கோ காணாமல் போய்விட்டதாக உறவினர்கள் நினைத்தனர். ஆனால், அந்த நாயோ வேறு எங்கும் செல்லவில்லை. தன்னை வளர்த்த எஜமானரின் உடல் புதைக்கப்பட்ட சமாதி அருகிலேயே தவம் கிடந்தது. ஒருநாள், இரு நாட்கள் அல்ல. சுமார் 7 ஆண்டு காலமாக அந்த சமாதியையே இன்றும் சுற்றிக்கொண்டிருக்கிறது.

## தவறான உணவுப் பழக்கத்தால் வந்த விபரீதம்

இந்தியாவில் ராயபுரம், எனும் இடத்தைச் சேர்ந்த நான்கு வயது சிறுமிக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் வலி அதிகரித்து, வீக்கம் உருவாக, அவரது பெற்றோர், மருத்துவமனையில் அனுமதித்தனர். சோதனையில், நான்கு வயது சிறுமியின் சிறுகுடல் வீங்கி இருப்பது தெரிந்தது. இதையடுத்து மருத்துவர்கள், சிறுமிக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். அப்போது, சிறுமியின் சிறுகுடலில், நூற்றுக்கணக்கான புழுக்கள் உயிருடன் ஊர்ந்துகொண்டிருந்தன.

குடல்வால் வழியாகவே, சிறுகுடலில் இருந்த புழுக்களை, மருத்துவர்கள் அகற்றினர். புழுக்கள் மட்டுமே, இரண்டு கிலோ இருக்கும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

தற்போது, பிள்ளைகளின் உணவு பழக்கவழக்கம் மற்றும் சுகாதாரத்தில் பெற்றோர் அக்கறை கொள்வது இல்லை. பிள்ளைகள் சாப்பிடும் முன், கை கழுவ சொல்லவேண்டும். சொக்லெட் மற்றும் ஐஸ்கிரீமை அதிகம் சாப்பிடக் கொடுக்கக்கூடாது.

குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை, பூச்சி மருந்து தருதல் போன்றவற்றை, இன்றைய பெற்றோரில் பலர் கடைப்பிடிப்பதில்லை.

அதனால், குழந்தைகள் வயிற்றுவலி, குடல்வால் அழற்சி, பித்தப்பையில் கல் போன்ற நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். குழந்தைகளின் வயிற்றில், புழுக்களை வளரவிடவே கூடாது. தவறான உணவு பழக்கவழக்கம், சுகாதாரமின்மை மற்றும் மலச்சிக்கல் இருந்தால், கிருமிகள் வளர்ந்து,

புழுக்களாக மாறி, வயிற்றுக்குள்ளேயே முட்டையிட்டு, அவை குடும்பம் நடத்தத் துவங்கிவிடும். அதன்பின், குழந்தைகள் சாப்பிடும் உணவை புழுக்களே சாப்பிடும். என மருத்துவர் ஆலோசனை கூறியுள்ளார்.

## பாசாங்கு தந்திரம்!



போர் வெறியரான அதிபர் ஹிட்லர் ஒரு சமயம் திரைப்படக்கொட்டகையில் மாறுவேடத்தில் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்தார். திரையில் ஹிட்லரின் உருவம் காட்டப்பட்டது. அப்போது மரியாதையை வெளிப்படுத்தும் விதத்தில் அனைவரும் எழுந்து நின்றனர். ஹிட்லர் போட்டிருந்த ஆணைப்படி அந்தப் படத்திற்கு வணக்கம் செலுத்தினர்.

ஆனால், மாறுவேடத்தில் இருந்த ஹிட்லர் மட்டும் உட்கார்ந்துகொண்டிருந்தார். உடனே பக்கத்தில் இருந்தவர் இந்தக் கொடுங்கோலன் ஹிட்லருக்கு எழுந்துநின்று வணக்கம் செய்ய யாருக்குமே விருப்பமில்லை.

ஆனாலும் உட்கார்ந்துகொண்டு அவமரியாதை செய்தால் அதை அறியும் ஹிட்லர் எப்படியும் தொல்லை கொடுப்பான். ஆகவே, நீங்களும் எழுந்துநின்று வணக்கம் செய்வதுபோல் பாவனை செய்வது உங்களுக்கு நல்லது என்றார்.

**இதுவரை**

**தனது எதிரிகளை மன்னிப்பது போன்றும் ஜனநாயகத்தை உருவாக்க பாடுபடுபவன் போன்றும் நாடகமாடத் தொடங்கினான் இடிஅமீன். அவனது திருவிளையாடல்கள் இன்னும் தீவிரமாகின.**

**இனி...**

மலைப்பாம்புகளையும் பிடித்துக் கொடுத்தார்கள்.

அமீன் மிருகக் காட்சிச்சாலை ஒன்றுக்குச் சென்றபோது மலைப்பாம்பு ஒன்றைக் கண்டான். கொழுத்த பாம்பு.

சுட்டுவிரலை நீட்டிச்சொன்னான்: "அது எனக்கு வேண்டும்!"

அன்று மதிய உணவாக அமீனின் வயிற்றுக்குள்



# அற்புதன் எழுதிய இடி அமீன்

## உண்மைத் தொடர்...

### அதிர் இடி (21)

சென்றது.

இடி அமீனுக்கு புகழ்ச்சி என்றால் பிடிக்கும். பெண்கள் என்றால் பிடிக்கும்.

அமீனிடம் காரியம் சாதிக்க விரும்பும் சில அதிகாரிகளும், அமைச்சர்களும் தங்கள் அழகிய மனைவியர் சகிதமே அமீனைச் [சந்]திக்கச் செல்வதுண்டு.

வங்கி ஒன்றில் உயர் பதவி நாடிய அதிகாரி ஒருவர் அமீனிடம் காரியம் சாதிப்பதற்காகவே அழகான இளம் பெண் ஒருத்தியைத் திருமணம்செய்து கொண்டார்.

பிரமாண்டமான சிலை ஒன்று இடி அமீனுக்காக நிறுவப்பட்டது.

"எனக்கு ஏன் சிலை? என்னைவிட பெரிய மேதைகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சிலை வைக்கலாமே!

என்று வீம்புக்காக அமீன் மறுத்தான்.

"இது மக்கள் விருப்பம். நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்!" என்றனர்.

"மக்களின் கட்டளையை மீறவா முடியும். சரி கட்டுங்கள், கட்டப்பட்டது. சிலையைத் திறந்து வைக்கவும் அமீனையே அழைத்தனர்.

திறந்து வைத்த இடி அமீன் பிரமித்து நின்றான். மிகப்பிரமாண்டமாக, கம்பீரமாக அமைக்கப்பட்டிருந்தது உருவச்சிலை.

"யார் இந்த சிலையைச் செய்தது?" என்று அமீன் கேட்டதும், அந்தக் கேள்விக்கு என்ன அர்த்தம் என்று புரியாமல் சிலை செய்தவனும், சிலையை செய்வித்தவர்களும் நடுநடுங்கிப் போனார்கள்.

யார் பதில் சொல்வது என்ற அச்சத்தில் எவருமே வாய் திறக்கவில்லை.

"என்ன தானாகவே முளைத்து விட்டதா?" என்று மீண்டும் இடியென்று கேள்வி ஒலித்தது.

"இ.... இவர்தான்!" என்று சிற்பியைக் காட்டிய அதிகாரியின் கைவிரல்கள் தடதடத்தன.

அடுத்து யாரும் எதிர்பாராத காரியம் ஒன்றைச் செய்தான் அமீன்.

இரண்டு அடி எடுத்து வைத்து சிற்பியை நெருங்கிய அமீன் அவனை வாரியணைத்துக் கொண்டான்.

அதன் பின்னர்தான் சிற்பிக்கு அங்கு நின்றவர்களுக்கும் இதயத் துடிப்பு சீரானது.

சிற்பிக்கு மாளிகை போன்ற பெரிய வீடு ஒன்றைப் பரிசளித்தான்.

தனது தந்திரங்களுக்கு மக்கள் மயங்குவதைக் கண்ட இடி அமீன் தடாலடியான நடவடிக்கைகளைத் தொடர்ந்தான்.

தினசரிகளில் பரபரப்பாக வெளியானது மற்றொரு செய்தி.

"முன்னாள் ஜனாதிபதி கபாகா இலண்டனில் காலமானார். அவரது உடல் உகண்டாவுக்கு எடுத்து வரப்பட்டு சகல அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படும்!" என்பதுதான் அந்தச் செய்தி.

ஒபேடேக்காக ஜனாதிபதி கபாகாவை நாட்டைவிட்டு தப்பியோடவைத்த இடி அமீன், கபாகாவின் இறுதிச் சடங்கில் சோகமே உருவான முகத்துடன் கூறினான்: "ஒபேடே செய்த பெரிய குற்றம் இந்த நல்ல மனிரைப் பதவியில் இருந்து கவிழ்த்ததுதான்!"

இடி அமீன் அவிழ்த்துவிட்ட மற்றொரு பொய்யை அறிந்தபோது தன் சானியாவில் இருந்த ஒபேடே "அடப்பாவி!" என்றார்.

"ஒபேடே ஜனாதிபதி கபாகாவை தீர்த்துக் கட்டுமாறு என்னிடம் கூறினார். நான் அதனை விரும்பவில்லை. சொன்னால் நம்ப மாட்டீர்கள்! கபாகாவை பத்திரமாக இலண்டனுக்கு தப்பிச் செல்ல ஏற்பாடு செய்ததே நான் தான்!" என்று அமீன் சொன்னதை சந்தேகிக்க ஆள் இருக்கவில்லை.





கபாகாவின் மரணச் சடங்குகள் முடிந்து இல்லம் திரும்பிய அமீனுக்கு அந்த இரகசிய தகவல் எட்டியது.

"ஒபேடேயின் நம்பகமான இராணுவ அதிகாரியான மேஜர் இம்மானுவேலை நீங்கள் தேடுகிறீர்கள்தானே" ஒலித்தது பெண் குரல் கொஞ்சம் மயக்கமான குரல்.

"ஆம் நீ யார், என்றான் அமீன் அதிகாரமான தொனியில்.

"அவரது காதலி!" என்றாள். என்றவள் தொடர்ந்து "இம்மானுவேல் இன்றிரவு நாட்டைவிட்டுத் தப்பிச் செல்கிறார். இதுவரை எங்கள் இலத்தில்தான் தலை மறைவாக இருந்தார்!"

"உன்னை எப்படி நம்புவது?"

"என்னை நம்பவேண்டாம். என் தகவலை நம்பலாம்!" என்றவள் கார் இலக்கம், நிறம், தப்பிச் செல்லும் நேரம் அனைத்தும் கூறினாள்.

குறித்துச் கொண்ட அமீன்.

"உனக்கு என்ன வேண்டும்: என்ன எதிர்பார்க்கிறாய்? என்றதுக்கு அவள் சொன்னாள்.

"நீங்கள்!" அமீனுக்கு சியம்பாவின் செயலாளரது முகம் நினைவுக்கு வந்தது. சிரித்தான்.

"வா!" என்று விட்டு ஃபோனை வைத்தவன். மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

தகவல் உண்மை!

கார் ஒன்று பயங்கரவேகத்தில் செல்ல, அதனைத் துரத்திக் கொண்டு இராணுவ வாகனங்கள் விரைந்தன. அன்றிரவு அந்த விபரீதம் நிகழ்ந்தது.

இம்மானுவேலின் காரை அமீனின் இராணுவ உளவுப் பிரிவினர் துரத்திச் சென்றனர்.

தான் துரத்தப்படுவதை இம்மானுவேல் அறிந்ததுமே, காரில் ஓடித் தப்புவது முடியாத காரியம் என்று விளங்கிக்கொண்டார். சட்டென்று காரை நிறுத்தி விட்டு இறங்கி ஓடத்தொடங்கினார்.

அப்பகுதியில்தான் டாக்டர் ஒருவரது வீடு இருந்தது. எப்போதோ இம்மானுவேல் காயமடைந்து இருந்தபோது சிகிச்சை கொடுத்தவர். அதனால் சிறு பரிச்சயம்.

அந்த வீட்டை நோக்கி ஓடினார் மேஜர் இம்மானுவேல். "கட்டிலில் சுகம் தந்தவள் கடைசியில் காட்டிக் கொடுத்து விட்டாள். சொர்க்கம் என்று நினைத்தது நகரகமாகி விட்டது!" என்பதை நினைத்து மேஜர் மனம் வருந்தினார்.

**(தொடரும்)**

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 556

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | | 9 | 10 | 11 | 12 |
| 13 | | 15 | 16 | | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | 30 |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **29.01.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 556
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 554 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப [1] | தி [2] | ப் [3] | ப [4] | க [5] | ம் [6] |
| டா [7] | ப [8] | ன் [9] | | சா [11] | ய [12] |
| டோ [13] | | ப [15] | ஜ [16] | ப் [17] | சி [18] |
| ப [19] | டு [20] | அ [21] | | | னி [24] |
| ம் [25] | த [26] | | கி [28] | சா [29] | க் [30] |
| | சி [32] | ச் [33] | வா [34] | த [35] | ம [36] |

**மேலிருந்து கீழ்**

01. இதயம் நுழைந்து உயிரில் கலந்து வாழ்பவர்கள்.
03. மங்கை; பெண். (குழம்பியுள்ளது)
04. பிழையின்றிப் படித்தலில், சிறப்புத் தராதரம் உள்ள நாடு என்று. UNESCO அறிவித்த நாடு. (குழம்பியுள்ளது)
05. புறம்; பக்கம்; திக்கு.
12. தமிழர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சில சிறந்த தமிழ்த் திரைப்படங்களில் ஒன்று.
20. ஒளி; மின்னல்.
27. அழகுள்ளவள்.

**இடமிருந்து வலம்**

01. முற்காலத்தில் கற்புக்கரசிகளாகப் போற்றப்பட்டவர்களில் ஒருவர். இவர் தன்னை இம்சித்த வனவேடனை சுட்டெரித்தாள்.
9. அசைவு; இருமடங்கு (குழம்பியுள்ளது)
15. தாமதி. (திரும்பியுள்ளது)
19. சமுத்திரம்; திமிங்கலம்.
22. பறவை. (குழம்பியுள்ளது)
25. புத்திமான் (குழம்பியுள்ளது)
33. அயோக்கியன்; கெட்டிக்காரன். (குழம்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 554இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எம்.எம்.நாஹிர், ஸம் ஸம் வீதி, மருதமுனை -03**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.சாலமன், புதுமடம், மானிப்பாய்.
02. க.சண்முகம், தென்னக்கும்புர, கண்டி.
03. ஆர்,ஹேதாரணி, கம்மடுவ, மாத்தளை.
04. ம.சிவதாஸ், இணுவில் மேற்கு, இணுவில்.
05. எம்.தவபாலன், கிரேட் வெஸ்டன், தலவாக்கலை.
06. த.சத்தியா, பிரதான வீதி, சாவகச்சேரி.
07. து.கானுஜன், நாவற்காடு, வரணி.
08. வி.நிரஞ்சனா, அராலி மேற்கு, அராலி.
09. கு.சிவானந்தன், கோவில் வீதி, வவுனியா.



ஜெய்ஹிந்-02



# நிர்வாண நடிகையிடம் சில்மிஷம்

நிர்வாணமாக நடிக்க ஓடத் தயார் என்று கூறிய பூனம் பாண்டேவை குடி மகன்கள் துரத்தியதால் அலறியடித்து அறைக்குள் ஓடினார். இந்தி, கன்னட படங்களில் நடித்துவருகிறார் பூனம் பாண்டே. 2011ம் ஆண்டு நடந்த சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றால் நிர்வாணமாக ஓடத்தயார் என்று அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தியவர். மேலும் இணையத்தளங்களில் தனது கவர்ச்சி படங்களை வெளியிட்டு அவ்வப்போது சர்ச்சையில் சிக்கி வருகிறார். சமீபத்தில் இவர் பெங்களூரில் உள்ள நட்சத்திர ஓட்டலில் கவர்ச்சி ஆட்டம் ஆட சென்றார். அப்போது அவரை சில்மிஷம் செய்யும் எண்ணத்துடன் ரவுடிகள் கூட்டம் துரத்தியது.

இந்த சம்பவம்பற்றி பூனம் பாண்டே கூறும்போது, பெரிய தொகை ஒன்றுக்கு என்னை ஓட்டலில் நடனம் ஆட ஒப்பந்தம் செய்தார்கள். 100 பாதுகாவலர்கள் எனக்கு பாதுகாப்பு அளித்தனர். இந்நிகழ்ச்சியில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர். நான் நடனம் ஆடி முடித்தபோது என்னிடம் சில்மிஷம் செய்யும் எண்ணத்துடன் ஒரு ரவுடி கூட்டம் என்னை துரத்தியது. அவர்கள் குடித்திருந்தனர். அதைக் கண்டதும் அதிர்ச்சியடைந்து நான் என் அறையை நோக்கி தப்பியோடினேன். என் வாழ்நாளில் இப்படி நான் ஓடியதில்லை. ஆனாலும் அவர்கள் விடாமல் துரத்தினார்கள்.

அறைக்குள் நான் சென்றதும் அவர்களும் உள்ளே வர முயன்றார்கள். இதற்கிடையில் பாதுகாவலர்கள் குறுக்கிட்டு அந்த கூட்டத்தை துரத்தினார்கள். இந்த சம்பவம் எனக்கு அதிர்ச்சி அளித்துள்ளது என்றார்.

இதுதொடர்பாக புகார் தரப்பட்டுள்ளதா என்று பொலிசாரிடம் விசாரித்தபோது புகார் எதுவும் தரப்படவில்லை என்றனர்.

# உயிர்மொழி:
## பார்வையற்ற பெண்ணை அடைய துடிக்கும் ஆண்களின் கதை

பெண் தயாரிப்பாளர் ஷண்முகப்பரியா தயாரிக்க ராஜா டைரக்ட் செய்துள்ள படம் உயிர்மொழி. சர்தார்ஜி, சசி, சாம்ஸ், ராஜீவ். பாபு ஆண்டனி இவர்களுடன் நியூபேஸ் கீர்த்தி நடிக்கிறார்.

சந்தோஷ் நாராயணன் மியூசிக். இந்த மாத இறுதியில் படம் ரிலீசாகிறது. படத்தை பற்றி இயக்குனர் ராஜா கூறியதாவது: உலகம் தோன்றிய காலத்திலிருந்து மனிதர்கள் அல்பா, பீட்டா, காமா, டெல்டா, ஒமேகா என ஐந்து வகை குணங்களை கொண்டவர்கள் இருக்கிறார்கள். இந்த 5 வகை குணங்களை கொண்டவர்களும் ஒரு பார்வையற்ற பெண்ணை காதலித்து அவளை அடைய முயற்சி பண்றாங்க. பார்வையில்லாத பெண்ணுக்கு அவர்களது குணங்கள் மட்டும்தான் தெரியும். இந்த நிலையில் அவள் எந்த குணம் கொண்டவனை செலக்ட் பண்ணுகிறார்கள் என்பதுதான் படத்தின் கதை.



# பெண்களின் கனவுநாயகன் மீண்டும் தமிழில்

கட்டுமஸ்தான உடல்வாகுடன் தோன்றவிருக்கும் அரவிந்த்சாமி தளபதி, ரோஜா, மும்பாய் போன்ற படங்களில் தனது வசீகரத் தோற்றத்தால் இளம் பெண்களின் மனதைக் கொள்ளைகொண்ட நடிகர் அரவிந்த்சாமி நீண்ட இடைவெளிக்குப்பிறகு இயக்குநர் மணிரத்னத்தின் கடல் படத்தில் தோன்றினார். இப்போது மீண்டும் நடிக்க உள்ள புதிய படங்களுக்காக தனது தோற்றத்தை கட்டுமஸ்தாக அவர் மாற்றிக்கொண்டிருக்கின்றார். இதுகுறித்து அவரிடம் கேட்டபோது, வரும் செப்டம்பரில் துவங்கவிருக்கும் புதிய திரைப்படத்தில் இப்படியொரு ஆஜானுபாகுவான தோற்றத்தில் வரவிருப்பதாக கூறினார். இன்னும் சில படங்களையும் ஒப்புக்கொண்டுள்ளதால் அவற்றிலும் தன்னுடைய கட்டுமஸ்தான தோற்றத்தைத் தொடர இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

காலையிலும், மாலையிலும் உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுவதாகவும் புரதச்சத்து மிகுந்த உணவுகளை ஆறு வேளையாகப் பிரித்து சாப்பிடுவதாகவும் அரவிந்த்சாமி கூறினார். கடந்த சில மாதங்களாக ஒரு உறுதியுடன் இதனைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன். திமோத்தி என்ற உடற்பயிற்சி நிபுணர் இதில் எனக்கு உதவியாக இருக்கின்றார். இந்த புதிய உடல்வாகினைப் பெறுவதற்காகத் தொடர்ந்து நான்கு மாதங்களாக உடற்பயிற்சி நிலையத்திற்கும் சென்று கொண்டிருக்கின்றேன்.

இந்தப் புதிய தோற்றம் குறித்து எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது என்று குறிப்பிட்ட அரவிந்த்சாமி, மகேஷ் மன்ஜ் ரேகரின் ஹிந்தி, தமிழ் இரு மொழித் திரைப்படத்தின் படப்பிடிப்பினை முதலில் முடிக்க உள்ளதாகவும் அதன் பின்னரே தமிழ்ப்படங்களை ஆரம்பிக்க உள்ளதாகவும் கூறினார்.





# தந்தையை வைத்து படம் தயாரிக்கும் மகள்

பட்டத்து யானை படத்தில் நடித்த அர்ஜுன் மகள் தயாரிப்பாளர் ஆனார். விஷால் ஜோடியாக பட்டத்து யானை படத்தில் நடித்தவர் ஐஸ்வர்யா. இவர் நடிகர் அர்ஜுனின் மகள். மற்றொரு மகள் அஞ்சனா. இவர்கள் இருவரும் சேர்ந்து தந்தை அர்ஜுன் நடிக்கும் ஜெய்ஹிந்த் 2ம் பாகம் தயாரிக்கின்றனர். ஹீரோவாக நடிப்பதுடன் படத்தை இயக்குகிறார் அர்ஜுன்.

சுர்வீன் சாவ்லா ஹீரோயின். புதுமுகமாக மும்பை நடிகை சிம்ரன் கபூர் அறிமுகமாகிறார். தமிழ், கன்னடம் தெலுங்கு என 3 மொழிகளில் இப்படம் உருவாகிறது. இதன் ஷூட்டிங் 80 சதவீதம் முடிந்திருக்கிறது. இந்தியாவில் கல்வியின் நிலை எப்படி உள்ளது. அதற்கு மாற்றம் தேவையா என்ற கருவை மையமாக வைத்து இக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது.






## இசைப்பிரியா வாழ்க்கை படமாகிறது



ஈழத்தில் சிங்கள இராணுவத்தால் கொடூரமாக கொல்லப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இசைப்பிரியாவின் வாழ்க்கை சினிமா படமாகிறது. இந்த படத்துக்கு 'போர்க்களத்தில் ஒரு பூ' என பெயரிட்டுள்ளனர். கணேசன் இயக்குகிறார். இசைப்பிரியா வானொலியில் பணியாற்றியது. ஈழ விடுதலை போராட்டங்களில் பங்கேற்றது. சிங்கள இராணுவ வீரர்களிடம் சிக்கி சித்திரவதைகள் அனுபவித்து உயிர் இழந்தது போன்றவை இந்த படத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது.

இதில் இசைப்பிரியா கேரக்டரில் நடிக்க அனு என்ற புதுமுக நடிகை தேர்வாகியுள்ளார். நிறைய பேரை பரிசீலித்த பிறகு அனுவை ஒப்பந்தம் செய்துள்ளனர். இதில் நடிப்பது குறித்து அனு கூறும்போது, இசைப்பிரியாவின் வாழ்க்கை வரலாறு பற்றி எனக்கு அவ்வளவாக தெரியாது. இயக்குனர் அவரைப்பற்றிய விவரங்களை என்னிடம் சொன்னார்.

வீடியோ படங்களையும் காட்டினார். அவர் வாழ்க்கை கதையை கேட்க கஷ்டமாக இருந்தது.

படப்பிடிப்பில் சில காட்சிகளில் நடித்தபோது அழுதுவிட்டேன் என்றார். இப்படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார்.

## "நாங்க எல்லாம் அப்பவே அப்படி"

காமெடியன்களின் பன்ஞ் டயலாக்கூட படத்தின் டைட்டிலாகிவிடுகிறது. கவுண்டமணியின் அட்றா சக்க, சந்தானத்தின் நண்பேண்டா, வரிசையில் சூரியின், "நாங்க எல்லாம் அப்பவே அப்படி" என்ற டயலாக்கும் டைட்டிலாகிவிட்டது. ஹன்சிகாவும், மோகன்பாபுவின் மகன் விஷ்ணுவும் இணைந்து நடித்த, 'தேனிகா நானா ரெடி' என்ற படத்தை தமிழில் டப் செய்து அதற்குத்தான் "நாங்க எல்லாம் அப்பவே அப்படி" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்தப் படம் டப் ஆனதில் இன்னொரு சிறப்பு இருக்கிறது. சிம்புவை தற்காலிகமாக பிரிந்திருக்கும் ஹன்சிகா இப்போது அதிகம் நெருக்கமாக இருப்பது விஷ்ணுவுடன்தான். இந்தப் படத்தில் நடித்தபோதுதான் இருவருக்கும் காதல் என்று தெலுங்கு மீடியாக்கள் கிசுகிசுத்தன. இப்போது டயம் பார்த்து இந்த படத்தை இங்கு ரிலீஸ் பண்ணுகிறார்கள்.

பிரபு, சுமன், சீதா, கோட்டா சீனிவாசராவ், ராஜேஷ் என தெரிந்த முகங்கள் இருப்பதால் தமிழ் படம் பார்த்த ஃபீல் கண்டிப்பாக வரும். ஏ.கே.ஆர்.ராஜா தமிழ் வசனங்களை எழுதியிருக்கிறார். பிரபுவின் தங்கை சீதா, முஸ்லிம் மதத்தை சேர்ந்த சுமனை காதலித்து திருமணம் செய்துகொள்வார். இதனால் பிரபு சுமனின் காலை வெட்டிவிட இருவருக்கும் ஜென்ம பகை. இந்த தலைமுறையில் சுமனின் மகன் விஷ்ணு பிரபுவின் மகள் ஹன்சிகாவை காதலிப்பார். காதலை வெறுத்த பிரபு மனம் மாறி இந்த தலைமுறை காதலை ஏற்பதுதான் படத்தின் கதை.



## திரைவிமர்சனம்

# வீரம்

மதுரையில் காய்கறி கடை வைத்திருக்கிறார் அஜீத். இவருக்கு நான்கு தம்பிகள். குடும்பத்தின் ஒற்றுமைக்காகவும் தனது தம்பிகளுக்காகவும் திருமணம் செய்துகொள்ளாமலேயே வாழ்ந்துவருகிறார். இவருடைய குடும்ப வக்கீலாக வருகிறார் சந்தானம். அஜீத்தின் வீட்டில் வேலையாளாக வருகிறார் அப்புக்குட்டி.

அதே ஊரில் ரவுடித்தனம் செய்துவரும் வில்லன் பிரதாப் ராவத் மார்கெட்டில் இருக்கும் வியாபாரி களை ரொம்பவும் கொடுமைப்படுத்துகிறார். அவர்களுக்கு நன்மை செய்யும்விதமாக மார்க்கெட்டில் வரும் பெரும்பாலான டெண்டர்களை அஜீத்தே வளைத்துப் போகிறார். இதனால், அஜீத் மீது வில்லனுக்கு பகை உண்டாகிறது. அவரை பழி வாங்க வில்லன் தருணம் பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார். அப்பொழுதுதான் கோப்பெருந்தேவி என்ற பெண் இப்பொழுது வேறு ஒருவனை திருமணம் செய்துகொண்டுவிட்டதாகவும் கூறுகிறார். என்றாலும், அஜீத்துக்கு அந்த பெண்ணின் பெயரான கோப்பெருந்தேவி ரொம்பவே பிடிக்கும். அந்த பெயருடைய பெண்ணை அஜீத்துக்கு அறிமுகம் செய்துவைத்தால் காதல் வரவாய்ப்புள்ளது என யோசனை கூறுகிறார். இதற்காக ஒரு தொல்பொருள் துறையில் வேலை செய்யும் தமன்னாவை ஒரு கோயிலில் சந்தானம் மற்றும் அவனது தம்பிகள் பார்க்கிறார்கள்.

ரமேஷ் கண்ணாவின் உதவியுடன் அவளை இவர்களுடைய ஊருக்கு மாற்றம் செய்கின்றனர். அவளும் அஜீத்தின் வீட்டுக்கு அருகிலேயே தங்குகிறார். அடிக்கடி சந்திக்கும் அஜீத்-தமன்னா இருவருக்குள்ளும் நாளடைவில் காதல்வர ஆரம்பிக்கிறது.

இந்நிலையில் தன்னுடைய அப்பாவிடம் சொல்லி அஜீத்தை திருமணம்செய்து கொள்வதற்காக தமன்னா, அஜீத் மற்றும் அவரது தம்பிகளை அழைத்துக்கொண்டு அவரது ஊருக்கு ரெயிலில் பயணமாகிறார்.

அப்போது, அங்கு வரும் ஒரு ரவுடிக்கும்பல் அஜீத்தை மற்றும் அவரது தம்பிகளை தாக்குகிறது. இறுதியில் அஜீத்தை தாக்கவரும் அடியாள் தவறுதலாக தமன்னாவை தாக்கிவிட, தமன்னா மயக்கமடைகிறார். அவரை ஆஸ்பத்திரியில் கொண்டுசேர்க்கிறார் அஜீத். ஆஸ்பத்திரியில் நினைவு திரும்பும் தமன்னா அஜீத்திடம் சொல்லிக்கொள்ளாமல் தனது ஊருக்கு பயணமாகிறாள். பிரிந்துசென்ற தனது காதலி தமன்னாவுடன் ஒன்று சேர்ந்தாரா? என்பதே மீதிக்கதை.

மொத்தத்தில் வீரம் மாவீரம்.





# தேன் கிண்ணம்

## உனக்காக வாழ்வதனால்...

புரியாமல் தவிக்கின்ற இதயம் - மீண்டும்
புயலாலே சிதைந்ததேனடா
புது ஒளியாகி உனக்கு வழிகாட்டும் நேரம் -எனக்கு
புகை வேலி நீ இட்டதால் தானோடா!

கரைகாணப் படகான வாழ்வில் - இன்று
கருமேகத் திரள் மட்டும் ஏனடா
கடல் நீராகக் கரைகின்ற விழிகளிலும் - உன் விம்பம்
கலையாமல் இருப்பதனால் தானோடா!

உடல் புழுவாகத் துடிக்கின்றபோதும் - மனம்
உனை வெறுக்காத நிலையேனடா
உடல் அழிகின்ற போதும் அழியாத - என்
உயிர் காதல் உனக்கானதால் தானடா!

மா.விக்கினேஸ்வரன், மன்னார்.

## நிம்மதியைத்தேடி நான்...!

என் வாழ்விலிருந்து விலகி
நீண்ட தூரம் போய் விட்ட
நிம்மதியை நான் தேடுகின்றேன்
தேடிக் கொண்டிருக்கின்றேன்
தாயின் வயிற்றில் உருவாகி
தரணியில் தவழும் போது
என் தந்தை காணாமல்போனதால்
தொலைந்தது முதல் நிம்மதி
படித்துப் பட்டம் பெற்று
துடிப்புடன் வாழ எண்ணிய போது
வந்து தடுத்தது வறுமை
நொந்து வெதும்பியது தாயுள்ளம்
பட்டம் பதவி எண்ணம்
விட்டுப் போனது - அப்போது
தொலைந்து விட்டது நிம்மதி
பருவ வயதை எட்டிப் பிடித்து
காதல் வயப்பட்டபோது...
காதலி ஏமாற்றியதால்...
மீண்டும் பறிபோனது என் நிம்மதி
நான் வாழ வேண்டுமென்றெண்ணி
துணை யொன்றை தேடி
கரம் பிடித்தேன் கன்னியொருத்தியை
என் வீட்டு மகாலட்சுமியென்று
பகலிலும் கனவு கண்டேன்
வந்தவள் பத்திர காளியானாள்...
வெடித்தது தினமும் போர் வீட்டில்
வந்தது வக்கீல் நோட்டீஸ்
விவாகரத்துக் கேட்டு
மிச்சம் மீதியாயிருந்த நிம்மதியும்
பறிபோனதால்...!
தொலைந்து போன நிம்மதியை
தேடிக் கொண்டிருக்கிறேன்
கண்டுபிடித்து தருவோருக்கு
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



அளவெட்டி, ப.உதயகுமார்.

## வீதியோரம்தான் வீடா?

நான் அவனைக் காணும்
போதெல்லாம்
அழுக்குத் துணியுடன்
ஐந்தாறு சில்லறையைக்
கையில் வைத்துக்கொண்டே

அம்மா....
தர்மம் செய்யுங்கோ
அக்கா....
உதவி செய்யுங்கோ
அன்போடு கேட்பான்

பல பஸ் ஏறி இறங்கி
பல பேரிடமும் திட்டு வாங்கி
பத்துப் பதினைந்து
சில்லறை சேர்ப்பான்

பக்கத்துக் கடையில்
பாண் வாங்கி சாப்பிட்டு விட்டு
பாதையோரத்தில்
படுத்துறங்குவான்
அயலவர்களிடம் விசாரித்ததில்
அவனுக்கு யாருமில்லையாம்
அவன் ஒரு அநாதையாம்

இரக்கமற்றவர்கள் வாழும்
இவ் வையகத்தில்
இவனுக்கு யார் துணையோ!



ஆஷா, யாழ்ப்பாணம்.

## காதலிக்கோர் கவிதை

என்னுயிர் சகி...
நாம் ஒரே அன்புடையோமாய்
நேரெதிர் சந்திக்க நேர்ந்த
அழகான அந்த முதல் நாளை
எப்போதாவது எண்ணிப் பார்க்கையில்
மக்கிப்போன மனவெளியிலிருந்து
உற்பவித்து எழுகிறது
நான் எழுதும் கவிதைகள்.

உணர்ச்சிப் பிரவாகத்தில்
முக்குளித்த ஓர் நிலாநாளில்
உன்னிமிருந்து பெற்றுக்கொண்ட
இதழொன்றின் ஞாபகச் சிதறல்களை
இன்றைக்கான என் காயங்களிற்கு
ஒத்தடம் ஆக்குகையில்
மாபெரும் தீக்கல்லில்
என்னிதயம் வறுபடும் வாடை
மணநுகர்ச்சிக் கலங்களை
இரக்கமின்றி ஆக்கிரமிக்கிறது.


அன்றைய பொழுதுகளில்
சுட்டெரிக்கும் சூரிய நிமிடங்களை
ஓரவிழிப் பார்வையெனும்
ஒரேயொரு பனித்துளியினால்
உறைநிலைக்கு உட்படுத்தியவளன்றோ நீ.

கலங்காதிரு கண்மணியே...
விருட்சங்கள் தமது வேர்களை
ஆழப்புதைத்து நீர் தேடுவது
ஆயுளின் கணங்களை
நீளப்படுத்தத்தானே?
நம்பிக்கைத் துளிகள் சில
இன்னும் ஈரமாகத்தான்
இருக்கின்றன.

என்னைச் சுற்றிலும்
இறுக்கமான கம்பிக்கூடு
முள்முடி தரிக்காமலேயே
சிரசிலிருந்து உதிரம் சொட்டுகிறது
குண்டாந்தடிகளின் குதறல்களினால்
சீழ் கட்டியஎன் சரீரம்
நெருங்குகிறது தன்னிறுதிநாளை.

மனிதக்குருதி எந்நேரமும்
காய்ந்து கிடக்கும் பாதணிகளும்
மானுட எல்லை கடந்த
குரூரவிழிகளும் கொண்டவர்களாய்
அலைந்துதிரியும் காவலர்கள்.

இந்துமாகடலில் சஞ்சரிக்கும்
இத்தீவின் எங்கோவோர் மூலையில்
என் தாயின் கருப்பையில்
காணத்தவறிய இருளை
நாள் முழுவதும் காணும் பேறுபெற்ற
ஓர் சித்திரவதைச் சிறைக்கூடத்தில்
கிடக்கின்றேன் என்பது மட்டும்
இப்போதைக்கு எனக்குத் தெரிந்த
ஓர் உண்மை.




வந்துவிடுவேன் கட்டறுந்த உன்
கருங்கூந்தலின் கடைசி முடி ஒன்றும்
வெற்றிக் கம்பியாய் மின்னுவதற்குள்
நிச்சயம் வந்துவிடுவேன்.

வேல்.லவன்

# ஈழத்துக் கவிஞர்கள்

## கனகசபை சிவகுருநாதன்



இவர் (டிசம்பர் 20 1920 - ஜனவரி 13 2003) கசின் எனும் பெயரால் நன்கு அறியப்பட்ட பல்துறை எழுத்தாளரும், சமூக சேவையாளருமாவார். "சட்டம் பியார்" என்ற புனை பெயரிலும் இவர் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் புலோப்பளையில் கனகசபை சேதுப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியினை உசன் இராமநாதன் கல்லூரி, அச்சுவேலி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பெற்றார். 1940 ஆம் ஆண்டு திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சிக்காக சேர்ந்தார். 1950ஆம் ஆண்டில் பண்டிதர் பரீட்சை எழுதி அதில் சித்தியடைந்தார்.

இவர் 1946ஆம் ஆண்டில் இலக்கியத்துறையில் காலடியெடுத்து வைத்துள்ளார். இவரின் கன்னியாக்கத்தை ஈழகேசரி பிரசுரித்துள்ளது. 'கசின்' எனும் புனைபெயரில் முன்னைய இலக்கியத் தலைமுறையினருக்கு நன்கு அறிமுகமான சிவகுருநாதன் ஆரம்ப காலங்களில் ஈழத்தில் அனைத்து பத்திரிகைகளிலும் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என நூற்றுக்கணக்கான ஆக்கங்களை எழுதியுள்ளார்.

கசினின் முதலாவது ஆக்க இலக்கியமான "வண்டியில் வளர்ந்த கதை" தொடர் புதினமாக 1947 ஆம் ஆண்டில் ஈழகேசரியில் வெளியானது. அப்புதினத்தில் அவர் கையாண்ட உத்தி காலத்தின் புதுமையானதாக சித்திரிக்கப்பட்டது.

நாவல் இலக்கியத்தைப் போலவே சிறுகதை இலக்கியத்திலும் இவர் புதுமைகளை சாதித்துள்ளார். மணியோசை, நூலும் நூற்கயிறும், இது காதலல்ல, பச்சைக் கிளி, பஞ்சும், நெருப்பும், சிலந்திவளை, தமிழன்தான், வனசஞ்சாரம், குந்துமாணிக்கம் என்பன இவரின் சிறுகதைகளுள் குறிப்பிடத்தக்கவை. ஈழத் தமிழர்களின் பழக்கவழக்கங்கள், பேச்சுமுறை போன்றவற்றை இவரின் சிறுகதைகளில் காண முடியும். இலங்கையின் அனைத்து தேசிய பத்திரிகைகளிலும் போல இவரின் ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன.

இவரது இலக்கியச் சேவையைப் பாராட்டி 1994ஆம் ஆண்டு இலக்கியப் பேரவை யாழ். மண்ணில் விழா எடுத்து இவரைக் கௌரவித்தது.

இவரது தமிழ்ப் புலமையைப் பாராட்டி கொழும்பு தமிழ்ச்சங்கம் 1999ஆம் ஆண்டு நடாத்திய புலவர், வித்துவான்கள் மாநாட்டில் இவருக்கு இயற்றமிழ் வித்தகர் என பட்டமளித்து கௌரவித்தது.

2000ஆம் ஆண்டு இவரது இலக்கியப் பணிக்காக இலங்கை அரச கலாசாரத் திணைக்களம் கலாபூசணம் விருது வழங்கி கௌரவித்தது.

### வெளியிடப்பட்ட நூல்கள்

நிதானபுரி- கசின் எழுதிய நான்கு குறுநாவல்களின் தொகுதி இது.

காதலும் கடிதமும் - இந்நூலில் வண்டியில் வளர்ந்த கதை, கண்டெடுத்த கடிதங்கள் ஆகிய இரண்டு கதைகள் இடம்பெற்றுள்ளன.

கசின் சிறுகதைகள் - இந்நூலில் இவரால் எழுதப்பட்ட 15 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

காதலும் கடிதமும் - இந்நூலில் வண்டியில் வளர்ந்த கதை, கண்டெடுத்த கடிதங்கள் ஆகிய இரண்டு கதைகள் இடம்பெற்றுள்ளன.

கசின் சிறுகதைகள் - இந்நூலில் இவரால் எழுதப்பட்ட 15 சிறுகதைகள் 'இடம்பெற்றுள்ளன.

குமாரி இரஞ்சிதம் - இது ஒரு நாவலாகும்.

சகடயோகம் - இதுவும் ஒரு நாவலாகும்.

## வருகைக்காய்

உயிரினில் ஓடி
மன நிறைவதில் ஆடி
ஊறித்ததும்பிய உள்ளம்
உருக்குலைந்தது நித்தம்!!

சேர்ந்திருப்பு மறைய
சோர்ந்திருப்பு நிறைய
காத்திருப்பு கலைய
தேய்ந்திட்ட பிறையாக!!

தவமாய் யாசித்து
தவியாய் யோசித்து
வருகையதை நேசித்தே
மணமதை ஆற்றுகின்றேன்!!

அப்ரார் ஏ. அஸீஸ்,
யாழ்ப்பாணம்






> பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.
>
> கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர். **Dr. சி.நவநீதன்**



# கர்ப்ப காலத்தில் ஏற்படும் முக்கிய பிரச்சினைகள்

## பிரசவம் எப்படி நடக்கும்?

குழந்தை திரும்பாமலிருக்கும் பட்சத்தில் பெரும்பாலும் சத்திரசிகிச்சை மூலமே குழந்தை பிரசவிக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் வைத்தியர் குழந்தையை கைகளால் திருப்ப முயற்சிக்கக்கூடும். இவ்வாறு கையால் திருப்ப முடிந்தால் சத்திரசிகிச்சை தவிர்க்கப்படல ாம்.

சில சந்தர்ப்பங்களில் குழந்தை காலாலேயே பிறக்கவிடப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அனுபவமுள்ள மகப்பேற்று வைத்தியர் ஒருவர் உடனிருக்கவேண்டும்.

## கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஏனைய பிரச்சினைகள்

| நோய் | குணங்குறிகள், விளக்கம் | தடுப்பு முறை |
|---|---|---|
| நெஞ்சு எரிவு, உணவு சாப்பிடாமை, வாயுக்கோளாறு | குழந்தை இரைப்பையை அமுக்குவதாலும், இரைப்பையால் அமிலக் கசிவு ஏற்படுவதாலும் இது உண்டாகிறது. | உணவை சிறியளவில் உட்கொள்ளல், நன்கு மென்று விழுங்குங்கள். காஸ் நிரப்பிய குளிர்பானங்களைத் தவிருங்கள். கோவா, வெங்காயம் போன்ற வாயு உண்டாக்கும் உணவை தவிருங்கள். கடுமையான நோவிற்கு Antacid எனப்படும் மருந்து தேவைப்படும். |
| கர்ப்பகால சலரோகம் Gestational Diabets | அடிக்கடி சிறுநீர் கழிதல், பெரிய வயிறு, அடிக்கடி சிறுநீரில் கிருமித் தாக்கம். | பரம்பரையில் சலரோகம் இருப்பின் இரத்தச் சோதனை. ஒழுங்கான சிறுநீர் சோதனை, குறைந்தளவு இனிப்பு பாவனை. |
| [illegible]ப்பகால குருதி அமுக்கம் | உயர் குருதியமுக்கம், உடல் வீக்கம். | குறைந்தளவு உப்பு பாவனை. |
| நாரிப்பிடிப்பு | கர்ப்பகாலத்தில் தசை நார்கள் விரிந்துகொடுப்பதாலும் அதிகரித்த உடல்நிறை காரணமாகவும் நாரிப்பிடிப்பு ஏற்படும். | பாரம் தூக்குவதைத் தவிருங்கள். சடுதியாக குனிவதைத் தவிர்க்கவும். ஒழுங்கான சிறுநீர்ப் பரிசோதனை. |
| புடைக்கும் நாளங்கள் Varicose Veins | வீங்கியிருக்கும் நாளங்கள், கால் உளைவு, சிலசமயங்களில் பெண் உறுப்பிலும் ஏற்படும். | படுக்கும்போதும், இருக்கும்போதும் காலை உயர்த்தி வைத்திருங்கள். நீண்டநேரம் நிற்பதைத் தவிருங்கள். காலில் பன்டேஜ் சுற்றிக் கட்டுதல். |
| உடலில் கடி (சொறிவு) | கர்ப்பகாலத்தில் உடலில் பித்தநீர் சேர்வதால் ஏற்படும். | கடிக்கும் இடங்களிற்கு ஒலிவ் எண்ணெய், குழந்தைகளிற்கு பூசும் கிறீம் என்பவற்றை பாவித்தல், கடுமையானால் வைத்திய ஆலோசனை. |








# லேடிஸ் ஸ்பெஷல்

**புகைப்பிடிப்பது** உடல்நலத்திற்கு தீங்கானது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் புகைப்பிடிக்கும்போது புகை யிலையில் உள்ள நச்சுத்தன்மையால் பாதிக்கப்படுவதை

## கர்ப்பிணிகள் புகைப்பிடிப்பவரை விட்டு தள்ளி இருங்கள்



போலவே பொஸிவ் ஸ்மோகிங்கிலும் (நம் அருகில் இருப்பவர்கள் புகைப்பிடித்தல்) நாம் பாதிப்புக்குள்ளாகிறோம்.

கர்ப்பிணி பெண்கள் தொடர்ச்சியாக புகைப்பிடிக்கும் நபர்களு டன் இருக்கும்போது, அது அவர்கள் வயிற்றில் தங்கியிருக்கும் சிசுவின் இயல்பான வளர்ச்சியை பாதிக்கும். கர்ப்பிணி பெண்கள் எந்தளவுக்கு புகைப்பிடிக்கும் நபர்களுடன் இருக்கிறார்களோ அந்தளவு அவர்கள் வயிற்றில் உள்ள சிசு பிறக்கும்போது பாதிக்கப்படும்.

கர்ப்ப காலத்தில் புகைப்பிடிப்பவர்களின் அருகில் அடிக்கடி இருக்கநேரிட்டால் அது சிசுவிற்கு மரபியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். கை,கால்கள், விரைகளில் அல்லது மூளையில் ஊனம் போன்ற பல பிரச் சினைகளுக்கு பொஸிவ் ஸ்மோகிங் கால் சிசுக்கள் பாதிக்கப்படுகிறது.

தொடர்ச்சியாக புகைப்பிடிப்பவர் களின் அருகில் கர்ப்பிணி பெண்கள் இருக்கநேரிடும் போது கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்புகளும் அதிகம் உள்ளது. கர்ப்ப காலத்தில் புகைப் பிடிப்பவர்களின் அருகில் கர்ப்பிணி பெண்கள் இருந்தால் நூற்றில் 23 சதவீத பெண்களுக்கு அவர்கள் வயிற்றிலேயே சிசு அழிந்துவிடுகிறது.

தங்கள் தாயின் வாயிலாக நச்சுத்தன்மை கலந்த புகையை சிசு உள்வாங்கும் போது அதன் இயல்பு வளர்ச்சியில் பாதிப்புகள் ஏற்படுகிறது. புகைப்பிடிப்பவர்களின் அருகில் ஒரு கர்ப்பிணி பெண் இருக்கநேரிட்டால் அவர்களின் தொப்புள் கொடியின் செயற்பாடு குறைந்துவிடும்.

நிக்கோடின் என்ற நச்சு தொப்புள் கொடி வழியாக சென்று சிசுவிற்கு கிடைக்கவேண்டிய இரத்த ஓட்டத்தை குறைத்துவிடும். இது சிசுவின் இதயக் குழலிய அமைப்பு, இரையக குடலிய அமைப்பு மற்றும் மத்திய நரம்பியல் அமைப்பு போன்றவற்றை பாதித்து விடும்.

பொஸிவ் ஸ்மோகிங்கால் ஒரு கர்ப்பிணி பெண் பாதிக்கப்படும்போது அவர்கள் வயிற்றில் உள்ள சிசு விற்கு சுவாசக் கோளாறுகள் ஏற்படும் வாய்ப்புகளும் அதிகம். பிறந்த பின் அவர்கள் மூச்சுவிடுவதில் சிரமப்படு வார்கள். ஆஸ்துமா போன்ற பிரச்சி னைகளை எல்லாம் அவர்கள் எதிர் கொள்ள நேரிடும்.

கர்ப்ப காலத்தில் பொஸிவ் ஸ்மோ-கிங் கால் பாதிப்படைந்திருந்தால் ஏற் படும் பல பிரச்சனைகளில் ஒன்றாக விளங்குகிறது குறைப்பிரசவம். அதனால் குழந்தையின் இயல்பு வளர்ச்சி பாதித்து வருங்காலத்தில் பல மருத்துவ சிக்கல்களை அவர் கள் சந்திக்கநேரிடும்.



# பெண்ணை அடிமை என்று கருதாதே!

**பெண்கள்** இன்று ஓரளவு ஆண்களுக்கு நிகராக இருப்பதற்கு பாரதிக்கு தனித்துவம் உண்டு. ஆண், பெண் சமத்துவத்தைப் பற்றிப் பல்வேறு இடங்களில் மிகவும் வற்புறுத்திக் கூறுகிறார் பாரதி.

"பெண்ணை அடிமை என்று கருதாதே. ஆத்மாவும் சக்தியும் ஒன்று ஆணும் பெண்ணும் சமம்" என்பார். இன்னொரு இடத்தில் "ஆண்களும் பெண்களும் சமானமான ஆத்ம இயல்பும் ஆத்மகுணங்களும் உடை-யோராதலால் பெண்களை எவ்வகையிலும் இழிந்தவராகக் கருதுதல் பிழை" என்று குறிப்பிடுகிறார்.

இதை உணர்ந்து செயற்படாத மக்களை நோக்கி, "ஆணுக்கு ஆண் அடிமைப்பட்டிருக்கும் அநியாயத்தைக்காட்டிலும் ஆணுக்குப் பெண் அடிமைப்பட்டிருக்கும் அநியாயம் மிகப்பெரிது" என்கிறார். இதற்கென்ன காரணம்? பாரதியே விளக்குகிறார்.

பலம் குறைந்த உயிரைப் பலம் மிகுந்த உயிர் துன்பப்படுத்தலாம் என்ற விதி எல்லா உயிர்களிடத்தும் காணப்படுகிறது. மனிதர்கள் அதை எல்லையில்லாமல் செய்கிறார்கள் என்கிறார்.

மேலும் சமத்துவத்தை வேண்டிப் பெண்களைத் தர்மயுத்தம் தொடங்கும்படிக் கூறுகிறார். "அடிமைப்பட்டு வாழமாட்டோம் சமத்துவமாக நடத்தினாலன்றி உங்களுடன் சேர்ந்திருக்க விரும்போம் என்று வெளிப்படையாகத் தெளிவாகச் சொல்லவேண்டும். எல்லா வகையிலும் உனக்கு சமமாக வாழ்வதில் உனக்குச் சம்மதமென்றால் உன்னுடன் வாழ்வேன். இல்லாவிட்டால் இன்று ராத்திரி சமையல் செய்யமாட்டேன். எனக்கு வேண்டியதை பண்ணித் தின்று கொண்டிருப்பேன்" என்று அறப்போராட்டத்தை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறார்.

## ஆண், பெண் சமத்துவத்தை மிகவும் வலியுறுத்த என்ன காரணம்?

**ஆணும் பெண்ணும் நிகரெனக்**
**கொள்வதால் அறிவில்**
**ஓங்கி வையம் தழைக்கும்**

(புதுமைப்பெண், 3)
(நிகர் = சமம், ஓங்கி = விளங்கி)
என்கிறார்.



ஆண், பெண் சமத்துவம் பற்றி மிளகாய்ப்பழச் சாமியார் என்ற ஒரு கற்பனைப்பாத்திரம் (பாரதியாரின் கதையில் வருவது) கூறுவதுபோல பாரதி கூறுவதும் நம் கவனத்தை ஈர்க்கிறது. ரஷ்யாவிலே கொடுங்கோல் சிதறிப்போய் விட்டதாம். ஐரோப்பாவிலே ஏழைகளுக்கும் பெண்களுக்கும் நியாயம் வேண்டுமென்று கத்துகிறார்களாம்.

உலக முழுமைக்கும் நான் சொல்லுகிறேன். ஆண், பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக்கடங்காது. அதை ஏட்டில் எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர் யாருமில்லை. பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வது அதையெல்லாம் விட முக்கியமென்று நான் சொல்கிறேன்.

பூமண்டலத்தில் துக்கம் ஆரம்பமாகிறது. ஆணும் பெண்ணும் சமானம். பெண் சக்தி - பெண்ணுக்கு ஆண் தலைகுனியவேண்டும். பெண்ணை ஆண் அடித்து நசுக்கக் கூடாது. இந்த நியாயத்தை உலகத்தில் நிறுத்துவதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் எவ்விதத்திலும் வேற்றுமை கிடையாது. இருபாலோரும் சமானமாகவே கருதப்படுவார்கள். ரஷ்யச் (நாட்டு) சட்டம் கூறுமிடத்திலே நாம் ஐரோப்பிய நாகரிகத்தின் கருத்தை அனுசரித்தல் மிக மிக அவசரம்.



# பொருத்தமான காதணிகளை தேர்வு செய்வது எப்படி?

சில பெண்கள் அழகான உடை உடுத்தி இருப்பார்கள். அருகில் இருப்பவர்களுக்குத்தான் தெரியும், அவர்களின் காதுகள் சுத்தமில்லாமல் இருப்பது. தினமும் காதுகளை அழுந்த தேய்த்து சுத்தப்படுத்துங்கள். காது அமைப்பில் வித்தியாசம் இருக்கலாம். அதை காதணிகள், மேக்கப்பினால் சரி செய்துகொள்ளலாம்.

நீளக்காது என்றால் ஃபவுண்டேஷன் போட்டு சிறிதாக காட்டலாம். விதவிதமான காதணிகளால் அலங்கரிக்கலாம்.

காதின் கீழ் விளிம்பு அகலமாக இருந்தால் பட்டையாக நிறைய கல் வைத்த பேசரி தோடுகளை போட்டுக்கொள்ளுங்கள்.

சின்னக்காது என்றால் காது மடல்களில் 2, 3 துளை போட்டு சின்னச் சின்ன வளையங்களை மாட்டி, காது விளிம்பில் கல்பதித்த சரம் போன்ற தோடு அல்லது தொங்கட்டான் போடலாம்.

குண்டு முகத்துக்கு தொங்கட்டான் வேண்டாம். காதோடு ஒட்டின டிசைன் தோடு எடுப்பாக இருக்கும். கழுத்தில் மெலிதான செயின் என்றால் காதணியை சற்று பெரிதாக அணிந்துகொள்ளுங்கள்.

காதோரம் குட்டிக் குட்டித் தோடுகள் அழகாக இருக்கும்.

அகலமான முகம் உள்ளவர் கள் நீள தொங்கட்டான்கள், ஒன்றின்கீழ் ஒன்று வரும் குடை ஜிமிக்கிகள், பெரிய வளையங்கள் போடலாம். கழுத்து நீளம் குறை வென்றால் காதணி நீளத்தை குறைக்கவும். காது மடல்களில் அணியும் தோடுகள், குட்டி தொங்கட்டான்கள், வளையங்கள் முக அழகை கூட்டும்.

**250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-403**

**கேள்வி:** பெண்களின் சமத்துவத்துக்காக என்ன செய்ய வேண்டுமெனப் பாரதியார் கூறுகிறார்?

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 28. 01.2014**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 403
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 401 இற்கான விடை :- மாய்ஸ்சரைசர்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- எம்.கவிதா, இணுவில் மேற்கு, இணுவில்.

403

பெயர் : ..............................
முகவரி : ..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
கையொப்பம் : ..............................

## ஜீன்ஸ் வாங்கும்போது...



எல்லா வகையான ஜீன்ஸ்களிலும், உங்களுக்கு பொருத்தமான அளவுகள் கிடைக்கும் என்றுகூற முடியாது. ஒவ்வொரு வகையானதுக்கும், சைஸ் அளவு மாறுபடும். அதனால், ஜீன்ஸ் வாங்கும்போது, அணிந்துபார்த்து, வாங்குவது நல்லது.

ஜீன்ஸ் பின்பகுதியில், பொக்கெட் பெரிதாக இருந் தால் வாங்கவேண்டாம். இதனால், அந்த ஜீன்ஸ் அணிந்தவரின் பின்பகுதி பெரியதாக தெரியும். பொக்கெட் இல்லாத ஜீன்ஸ் மிகவும் வசதி.

## பெண்கள் அறியவேண்டிய உண்மை

பெண்களின் எடுப்பான அழகுக்கு மேலும் மெருகூட்டுவது பிரா. சிறிய மார்பகத்தை எடுப்பாக காண்பிப்பது, தளர்ந்த மார்பகத்தை தாங்கி நிறுத்துவது, முன்னழகை இன்னும் கவர்ச்சிகரமாக காட்டுவது என்று இன்றைய பிராவின் சேவை இளம்பெண்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது.

திருமணம் ஆகாத இன்றைய இளம் பெண் கள், தாங்கள் அணியும் பிரா சரியான சைஸ் கொண்டதுதானா? என்பதை பெற்ற தாயிடம் கேட்கவே வெட்கப்படும் சூழ்நிலைதான் உள்ளது.

மேலும், இன்றைய பெண்களில் பலர் சரி யான சைஸ் பிராவை அணிவதில்லை. ஏதோ குத்துமதிப்பாக வாங்கி அணிந்து கொள்கிறார் கள். உள்ளே அணிவதை யார் பார்க்கப் போகிறார்கள் என்ற அவர்களது எண்ணம்தான் இதற்குக் காரணம். இப்படி, தப்புத்தப்பாக பிராவை அணிந்தால் பாதிப்புகள் ஏற்படும் என்பதை மறந்துவிடுகிறார்கள்.

ரூபாய்களாக இருந்தது. இது சுமார் 25 வருடங்களின்பின் அதாவது 1976ஆம் ஆண்டு 2,40,100 கோடியாக உயர்ந்தது. ஏகாதிபத்திய நாடுகளின் மொத்த மூலதன ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்கோ 52 வீதமாகும். 76இல் இருந்த உலகிலுள்ள மிகப்பெரிய முதலாளித்துவ தொழில் கழகங்கள் 500 இல் 260 அமெரிக்காவின் கைவசம் வந்துவிட்டது.

1977இல் தேசம் கடந்த தொழில் கழகங்கள் ஏற்றுமதி செய்த ரூபாய்களாகும். ஆனால் இவை அந்நிய நாடுகளில் தொழில் வர்த்தகம் மூலம் கட்டுப்படுத்திய வரவு செலவு 11,34,000 கோடி ரூபாய்களாகும். அதாவது 5 மடங்குக்கு மேலாகும். ஏகாதிபத்தியங்களின் மொத்த வர்த்தக ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்கு 76இல் 12.8 வீதமாகும். ரூபாய்களாகும் அந்நிய வர்த்தகத்தில் அமெரிக்கா 35,000 கோடி ரூபாய்களை நிகர உபரியாக்ச் சம்பாதித்தது. தொழில்நுட்பம், சேவைத்துறை போன்றவற்றில் வர்ததக உபரியாக 1,00,725 கோடி ரூபாய்களை அமெரிக்கா 77 களிலேயே சுருட்டிக்கொண்டது.

அமெரிக்க தேசம் கடந்த தொழில் கழகங்கள் தமது நேரடி முதலீடுகளின்மூலம் வெளிநாடுகளில் இருந்து 76இல் கொள்ளையிட்ட தொகையோ 39,200 கோடி ரூபாய்களாகும்.

மறுபுறத்தில் ரஷ்ய ஏகாதிபத்திய தலைமையில் அதன் முன்னாள் சோசலிச நாடுகள் ஒரு போட்டி முகாமை உருவாக்கின. அத்துடன் சீ.எம்.ஈ.ஏ என்ற அமைப்பை உருவாக்கியது உலக நாடுகளின் தேசிய வருவாயில் கால் பங்கையும், உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கையும் அடிப்படை எரிசக்தியில் 30 வீதங்களையும் இந்நாடுகள் பெற்றிருந்தன.

1976ல் அமெரிக்காவின் மொத்த தேசிய உற்பத்தி 28,58,500 கோடி ரூபாய்கள் எனவும், ரஷ்யாவினுடையது 16,27,500 கோடி ரூபாய்கள் எனவும் இருந்தன. 1975இல் அமெரிக்காவை விடவும் ரஷ்யாவின் இராணுவத்தில் ஆட்பலம் இரண்டு மடங்காக மாறியது. 400 யுத்த தந்திர ரீதியிலான அணு ஆயுத வாகனங்களை ரஷ்யா பெற்றிருந்தது. இது அமெரிக்காவைவிட கூடுதலாகும். தாக்குதல் பலம்வாய்ந்த கடற்படையை ரஷ்யா நிறுவிக்கொண்டது. ரஷ்யா தேசிய உற்பத்தியில் 15 வீதத்தை இராணுவத்திற்கு என்ற ஒதுக்கியது.

அதாவது இது 2,22,250 கோடி ரூபாய்களாகும். இது அமெரிக்காவின் ஒதுக்கீட்டை விடவும் 24 வீதம் அதிகமாகும்.

### புதிய வல்லரசுகளின் தோற்றம்

ரஷ்யாவின் தொங்கு தசை நாடுகளில் ஆட்சி மாறியதுடன், ரஷ்யா பலவீனம் அடைந்தது. இதேநேரம் அமெரிக்காவின் இடத்தை ஜப்பான் கைப்பற்றியது. இந்நிலையில் ஜப்பானும், ஜெர்மனியும் முன்னிலைக்கு முன்னேறியது. 1988களில் ஜப்பானின் மொத்த தேசிய உற்பத்தி 35 இலட்சம் கோடி ரூபாய்களை எட்டியது. இது ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டனின் மொத்த தேசிய உற்பத்திகளின் கூட்டத் தொகைக்கு சமமானதாகும். இது அமெரிக்காவின் தேசிய உற்பத்தியையும் விஞ்சி நின்றது. 1987களில் ஜப்பானின் மொத்த வெளிநாடுச் சொத்து மதிப்பு 42 இலட்சம் கோடி ரூபாய்களாக இருந்தது.

அமெரிக்காவின் ஆண்டு வர்த்தகப் பற்றாக் குறை 2,62,500 கோடி ரூபாய்களாக மாறிய போது, ஜப்பானில் 1,75,000 கோடி ரூபாய்கள் உபரியாக அதிகரித்தது. அத்துடன் அமெரிக்காவின் இறக்குமதியில் 49 வீதம் ஜப்பானுடையதாக மாறியது. அமெரிக்காவின் பற்றாக் குறையைச் சரிக்கட்ட அதில் மூன்றில் ஒரு பங்கு மூலதனத்தை ஜப்பான் அமெரிக்காவில் முதலீடு செய்தது. 1987ல் 435 அமெரிக்கத் தொழில் கழகங்கள் ஜப்பானின் கைகளுக்கு மாறியது.

உலகில் மிகப்பெரிய கடன் வழங்கும் நாடாக இருந்த அமெரிக்கா மிகப்பெரும் கடனாளி நாடாக மாறிவிட்டது. மறுபுறத்தில் ஜப்பான் மிகப்பெரும் கடன்கொடுக்கும் நாடாக மாறிவிட்டது. உலகில் மிகப்பெரிய வங்கிகளில் 4 மட்டுமே அமெரிக்காவின் கைகளில் உள்ளது. 1984ல் உலகில் மிகப் பெரிய வங்கியாக இருந்த அமெரிக்காவின் வங்கி 1990ல் 12ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் கொப்பச்சேர்வின் வருகையுடன் ஏகாதிபத்திய விளைநிலமாக மாறியது. 1987களுக்கு முன்பே பெரும் எடுப்பில் துவங்கிய தேசம் கடந்த தொழில் கழகங்கள் 250 கூட்டுத் தொழில்களைத் தொடங்கின. மேலும் 1400 கூட்டுத்தொழில்களுக்கு 1900களுக்கு முன்பே கையொப்பமும் இடப்பட்டன.

உலகிலேயே மிகப் பெரிய சரக்கு பயணி விமானப் போக்குவரத்தான ஏர்ரோ.'.பிளட் உலகில் அதிக பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிய அதேநேரம் அதிகதூரம் பறந்துசெல்லக்கூடியது. 1989 இல், 342 கோடி ரூபாய்தான் இலாபம் கிட்டியது. இந்த ஏகபோக கம்பனியை 5 ஆகப் பிரித்து வெளிநாட்டு நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்துள்ளன.

### பனிப்போரின் முடிவுகள் மேலாதிக்கத்துக்கான முரண்பாடுகளைத் தீர்க்கவில்லை

அமெரிக்கா கிரமமான இராணுவத்தில் 20 இலட்சம் பேரைக்கொண்டு இருந்தபோதும் சேமிப்பு இராணுவத்தில் 10 லட்சம் பேரையே கொண்டுள்ளது. இது 30 லட்சங்களாக மாறி உலகில் மிகப்பெரிய இராணுவமாக உள்ளது. அமெரிக்க இராணுவத் தலைமையான பென்டகன் 10 லட்சம் சிவிலியன் ஊழியர்களைக் கொண்டுள்ளது. அமெரிக்காவின் வெளிநாட்டு இராணுவத்தளங்களை 1500 ஆக ரீகன் உயர்த்தினார். 1985ன் இறுதியில் 3,22,000 துருப்புக்களை ஐரோப்பாவிலும், 1,15,000 துருப்புக்களை பசுபிக் தூர கிழக்கு நாடுகளிலும் நிறுத்தி மொத்தமாக வெளிநாடுகளில் 5,13,000 துருப்புகளை அமெரிக்கா குவித்துவைத்துள்ளது.

1987 டிசம்பரில் ரீகன் -கொப்பச்சேவ் ஒப்பந்தத்தின்படி கொப்பச்சேன் தானாகவே 5 லட்சம் துருப்புகளை கிழக்கு ஐரோப்பாவில் இருந்தது 1988 டிசம்பரில் விலக்குவதாக அறிவித்தார். முதலில் ஐரோப்பாவில் இருந்த அமெரிக்கவைவிட கூடுதலாக 3 லட்சம் துருப்புக்களை ரஷ்யா விலக்கிக்கொள்ள சம்மதித்தது. ஆனால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் பின்னர் இவ் ஒப்பந்தம் செயலிழந்து அமெரிக்கா மேல்நிலையை அடைந்தது.

இரசாயன ஆயுதக் குறைப்பு அமெரிக்காக்கு சாதகமாகவே கைச்சாத்தானது. 24,000 தொன் காயலாங்கடை இரசாயன ஆயுதத்தை அமெரிக்கா அழிக்க, ரஷ்யாவோ 44,000 தொன்களை அழிக்க ஒப்பந்தம் கோரி வழி அமைத்தது. அத்தோடு அமெரிக்கா புதிய ரக இராசயன உற்பத்தியில் ஈடுபட அனுமதியும் அளித்தது. யுத்த தந்திர ஆயுதக் குறைப்பில் அமெரிக்காவைவிட 2,000 அணு ஆயுத முனை ஏவுகணைகளை ரஷ்யா அழித்து விடவேண்டும் இதன் ரஷ்யா அமெரிக்காவை தாக்கும் வலிமையை இழந்துவிடும். இந்த வகையில் கோர்பச்சேவ் அமெரிக்காவுக்கு சாதகமாகவே இயங்கினார். அமெரிக்காவும் ரஷ்யாவும் உலகிலுள்ள அணு ஆயுதங்களில் 97 வீதங்களை ஏகபோகமாக வைத்துள்ளன.

### ஜப்பானிய மேல்நிலை

1965 வரைக்கும் நிரந்தர பற்றாக்குறையைக் கொண்ட ஜப்பான் 1973-75 மற்றும் 1979-80 ஆகிய இரண்டு எண்ணெய் நெருக்கடி ஆண்டுகளைத் தவிர 1965இல் உபரியாக இருந்த 1,900 கோடி ரூபாயை பத்து ஆண்டுகளில் 90 மடங்குகளால் உயர்த்தியுள்ளது.

1954ல் கொழும்பு திட்டத்தில் பங்கேற்ற ஜப்பான் இரண்டாம் உலகப்போருக்கான நஷ்டஈட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. உலகப் போருக்கான நட்டஈடு என்ற முறையில் 190 கோடி ரூபாயை தென்கிழக்கு ஆகிய நாடுகளுக்கு வழங்கியது. இது ஜப்பானின் பொருட்களை ஆசியப் பிராந்தியங்களில் விற்பதற்கு பயன்பட்டது.

1964இல் ஐ.எம்.எ.'.வ் இல் உறுப்பு நாடாக ஜப்பான் இணைந்துகொண்டது. 66இல் தென்கிழக்கு நாடுகளின் அமைச்சர்களைக் கூட்டிய ஜப்பான் ஆசிய வளர்ச்சி வங்கியை உருவாக்கியது. 1973-75இல் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடியை ஜப்பான் சிறப்பாகப் பயன்படுத்தியது. இதைப் பயன்படுத்தி ஜப்பானானது நிதிமூலதனத்தை முடக்கி விட்டது. அயல்நாடுகளுக்கான கடன்- மூலதன ஏற்றுமதியில் 1984இல் பிரான்சையும், 85இல் பிரிட்னையும் விஞ்சிய ஜப்பான் 88இல் அமெரிக்காவையும் விஞ்சியது.

இன்றைய உலகப் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு புதிய பொருளாதார அமைப்பு என்கிற பெயரில் மூன்று தவணைகளின் பெயரில் கடன், முதலீட்டு நிவாரணங்களுக்கான வாக்குறுதியை அளித்தது. இதன்படி இரண்டே ஆண்டுகளில் ஜப்பான் அதிகாரபூர்வ வளர்ச்சி உதவியை இரண்டு மடங்காக்கியது. மூன்று ஆண்டுகளில் 38,000 கோடி ரூபாய் அளவு புதிய கடன் முதலீடு வழங்கியது. மூன்றே ஆண்டுகளில் 950 கோடி ரூபாய் அளவு ஆபிரிக்க நாடுகளுக்கு மானியமாக ஜப்பான் வழங்கியது. இதைத் தவிர 15,200 கோடி ரூபாய் அளவு தொகையை மிகமிக ஏழை நாடுகளின் கடனை தள்ளுபடி செய்தது. "அடகுவைத்த பொருட்களை மீட்டு மறு அடகு வைப்பதற்கு கடன்" என்கிற திட்டத்தைப் போல அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களிடம் ஏழை நாடுகள் பெற் றுள்ள கடன்களுக்கு டொலரில் ஈடுகட்டி விட்டு உள்நாட்டு நாணயத்தில் கடன் பத்திரங்களைப் பெற்று மறுமுதலீடும் செய்கிறது ஜப்பான்.

1947இல் ஜப்பான் இரண்டாம் உலகப் போரில் தோற்றுவிட்டதைத் தொடர்ந்து உருவான அரசியல் நிர்ணயச் சட்டமும் அமுலில் உள்ளது. இதன் 9ஆவது பிரிவின் படி ஜப்பான் யுத்தம் தொடுக்கவோ, யுத்தத்தில் பங்கேற்கவோ, யுத்தத்திற்கான முப்படைகளை வைத்துக்கொள்ளவோ எதுவித உரிமையும் கிடையாது.

ஜப்பான் தற்பாதுகாப்புக்கு வைத்திருக்கும் படை, ஆயுதங்களுக்கு எல்லை வரம்புண்டு. ஜப்பானின் தேசிய வருவாயில் 1சதவீதமே இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும் வெளிநாடுகளுக்குப் படை அனுப்பவோ, அணு ஆயுதங்களை வைத்திருக்கவோ, தயாரிக்கவோ தடையுண்டு. தொலைதூர ஏவுகணைகளை வைத்திருக்கவோ, கமினிச நாடுகளுக்கோ அல்லது ஐ.நா சபை தடை விதித்துள்ள நாடுகளுக்கோ, அன்றேல் போரிடும் நாடுகளுக்கோ ஆயுத ஏற்றுமதி செய்யவும் தடையுண்டு.

ஆனால், இவைகளெல்லாம் கடந்த பத்து வருடங்களில் மாற்றம் பெற்றுவருகின்றது. 1988இல் லட்சம் பேரைக்கொண்ட இராணுவமே இருந்தது. இதில் எந்த நேரமும் இராணுவத்தைப் பெருக்க பெருமளவு இராணுவ அதிகாரிகளைக் கொண்டுள்ளது. 1990 விபரப்படி 3,000 கி.மீ தூரம் தாக்கக்கூடிய ஏவுகணைகள், நீர்மூழ்கி, ரஷ்ய எதிர்ப்புத் தாக்குதல் விமானங்கள், 840 கி.மீ தூரம் சென்று தாக்கக்கூடிய ஏ.'.ரக அமெரிக்க விமானங்கள் பல நூறும், விமானத் தாங்கக் கப்பல்களும், ஆயிரக்கணக்கான பீரங்கிக் கவச வண்டிகளும் ஜப்பானிடம் கைவசம் உள்ளது.

இன்று மின்னணு மற்றும் தொலைத் தகவல் நுட்பங்கள், இராணுவ ஆயுத நவீன கட்டமைப்பில் ஜப்பானானது மிக முக்கிய பங்குவகிக்கின்றது. ரொக்கட் ஏவுகணை உந்துவிசைக் கருவிகள் முதற்கொண்டு லேசர் ஒலிக்கதிர் நுண்கருவிகள் வரைக்கும் ஜப்பானின் தொழிநுட்பங்களையே உலக இராணுவத் தொழில் கழகங்கள் சார்ந்துள்ளன மற்றும் அணு உலை, கப்பற் கட்டுமானம், இரும்பு - எ.'.கு, மோட்டார் வாகனங்கள் உட்பட விண்வெளி நுட்பத்திலும் ஜப்பான் மிகப்பெரியதாய் கொடிகட்டிப் பறக்கிறது.

ஆயுத வெடிமருந்து உற்பத்தியில் ஜப்பான் பெரியளவில் போட்டியிடுகிறது. மிகப் பெரிய் தொழில் கழகமான மிட்சு பிசி கனரக ஆலை தனது மொத்த உற்பத்தி வரவு செலவில் 25 சதவிகிதம் ஆயுத வெடிமருந்தில் சாய்ந்துள்ளது. ஜப்பானின் நிசான் மோட்டார் கம்பனி ஆயுத உற்பத்தியை பத்து சதவிகிதங்கள உயர்த்தியதுடன், தாக்கும் ஏவுகணைக்கு முக்கியத்துவம் அளிக்கப்போவதாகவும் அறிவித்துள்ளது. தேசிய வருவாயில் ஒரு வீதம் என்பதையும் மீறி ஜப்பான் 87களில் 17,000 கோடி ரூபாய்களை இராணுவத்திற்கு என்று ஒதுக்கியது. இது மொத்த தேசிய வருவாயில் 7 சதவிகிதம் ஆகும். இது அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்த இடமாக ஜப்பானை வைத்துள்ளது.

ஜப்பான் தனது கடற்பரப்பின் தற்காப்பு எல்லையை 1000 மைல்கள் என நீட்டியுள்ளது. 1987ல் சர்வதேச அவசர நிவாரண அதிரடிப்படை அனுப்புவது, இராணுவ சட்டத்தைத் திருத்தியதுடன் மருத்துவர்கள் இராணுவத்தைக்கொண்ட அவசர அதிரடிப் படையையும் ஜப்பான் கட்டியுள்ளது.

இரண்டாம் உலகப்போரின் குற்றவாளிகளை அமைச்சர்கள் பாராட்டி, இரண்டாம் உலகமகா யுத்தத்தைப் பற்றிய கருத்துக்களை பாடப்புத்தகங்களில திருத்தி அமைத்து ஜப்பான் நியாயப்படுத்துகின்றது.

1988இல் உலக மொத்த தேசிய உற்பத்தியில் அமெரிக்க, ஐரோப்பிய சமூக நாடுகளின் பங்கு 25 சதவிகிதமாகும். இதில் ஜப்பானின் பங்கு 15 சதவிகிதமாகும். இது 88களின் பின் முதல் மூன்று ஆண்டுகளில் அதிகரித்துச் சென்றது. புதிய சர்வதேச ஒழுங்கை நிறுவ தனது பங்கை ஜப்பான் கோருகின்றது. ஆசியாவில் தனது ஆதிகத்தை நிலைநிறுத்தத் தயாராகி வருகின்றது. அத்துடன் தேவையான ஒரு நிலையில் மிகப்பெரிய இராணுவ வல்லரசாக மாறும்வகையில் தன்னை தகவமைத்துள்ளது ஜப்பான்.

### அழித்தவர்களை அனைத்து வல்லரசாகும் ஜப்பான்

இரண்டாம் உலகப்போரின் உச்சமாய் வரலாற்றில் பதிந்திருக்கும் ஒரு கொடூர சம்பவம் நிகழ்ந்த நாள். இதே நாள் 1945இல் ஜப்பானில் ஹிரோஷிமாவில் அமெரிக்கப் படைகள் அணுகுண்டு வீசிய நாள்.

இரண்டாம் உலகப்போரில் பல நாடுகள் நாடுபிடி சண்டையில் ஈடுபட்ட நேரம் அது. ஜப்பானும், அமெரிக்காவும் எதிரெதிர் அணியில் இருந்தன. இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜப்பான், தானும் ஒரு வல்லரசாக மாறும் முனைப்பில் மிக உக்கிரமாகப் போரில் குதித்திருந்தது. வெற்றி பெற்றுக்கொண்டே வந்த ஜப்பான், பசுபிக் கடல் பிராந்தியத்தின் பேர்ள் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்க படைக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது. அதன்பின்னரே போரின் போக்கு முற்றாகத் திசைதிரும்பியது. பேர்ள் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதால் அதற்கான பதிலடியைக் கொடுக்க ஆயத்தமானது.

உலக நாடுகள் அதுவரை கேள்விப்பட்டிராத அணுகுண்டு என்கிற புது ஆயுதத்தை அமெரிக்கா பயன்படுத்தத் திட்டமிட்டது. 'மான்ஹாட்டன் செயல்திட்டம்' என்பதின் கீழ் உருவாக்கப்பட்ட இரு அணு ஆயுதங்கள் ஜப்பானின்மீது வீசப்பட்டன. 'Little Boy' என்று பெயரிடப்பட்ட அணுகுண்டு ஹிரோஷிமா நகர்மீது 1945, ஓகஸ்ட் 6ஆம் நாளும், 'Fat Man' என்று பெயரிடப்பட்ட அணுகுண்டு நாகசாகி நகர்மீது மூன்று நாட்களுக்குப் பிறகு ஓகஸ்ட் 9ஆம் நாளும் வீசப்பட்டன. நினைத்துப் பார்க்கவும் முடியாத பேரழிவுகளை ஜப்பான் சந்திக்கநேர்ந்தது. அந்த அழிவின் சாட்சியங்கள் இன்றும் அந்த நாட்டில் நிலைத்துள்ளன.

இந்த இரு குண்டுவீச்சுகளின் விளைவு மிகப் பயங்கரமாக இருந்தது. குண்டுகள் வீசப்பட்ட 2-4 மாதங்களுக்குள் ஹிரோஷிமாவில் 90,000-166,000 மக்களும், நாகசாகியில் 60,000-80,000 மக்களும் குண்டுவெடிப்பின் காரணமாக உயிர் இழந்தார்கள். இவ்வாறு உயிர் இழந்தவர்களுள் பாதிப்பேர் இருநகரங்களிலும் குண்டுவீசப்பட்ட முதல் நாளிலேயே கொல்லப்பட்டனர் என் பது குறிப்பிடத்தக்கது.

ஹிரோஷிமா நகரின் நலத்துறை கணிப்புப்படி, குண்டுவீச்சு நிகழ்ந்த நாளில் இறந்தோரில் 60வீதம் பேர் தீக்காயங்களாலும், 30பேர் பேர் இடிமானங்கள் தங்கள்மேல் விழுந்ததாலும், 10வீதம் பிற காரணங்களாலும் கொல்லப்பட்டனர். குண்டுவீச்சைத் தொடர்ந்த மாதங்களில் ஏராளமான மக்கள் தீக்காயங்களின் விளைவாலும், கதிர் வீச்சு நோயாலும், வேறு காயங்களால் நோய் தீவிரமாகியும் இறந்தனர். ஐக்கிய அமெரிக்கா, குண்டுவீச்சைத் தொடர்ந்த சாவுகளுக்கு உடனடியான மற்றும் குறுகிய காலக் காரணங்களைக் கீழ்வருமாறு கணித்தது: 15-20வீதம் பேர் கதிர்வீச்சு நோயால் இறந்தனர். 20 -30வீதம் தீக் காயங்களால் இறந்தனர் 50-60வீதம் பேர் வேறு காயங்களால் நோய் தீவிரமாகி இறந்தனர். ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் கொல்லப்பட்டவர்களுள் மிகப் பெரும்பான்மையோர் போர்வீரர்கள் அல்ல, சாதாரண குடிமக்களே ஆவர். ஹிரோஷிமாவில் மட்டும் இராணுவ முகாம்கள் பல இருந்தன. இந்தக் குண்டுவீச்சினால் ஏற்பட்ட சாவும் சேதமும் இன்றுவரை துல்லியமாக மதிப்பிட முயன்றும் முடியவில்லை. வரலாறு காணாத சேதாரம் என்று மட்டுமே சொல்லமுடியும்.

1945, ஓகஸ்ட் 15ஆம் நாள், அதாவது, நாகசாகியில் அணுகுண்டு வீசப்பட்ட ஆறாம் நாள், ஜப்பான் போரில் தோல்வியை ஏற்று நேசநாடுகளின் முன் சரணடைந்தது. அதே ஆண்டு, செப்டம்பர் மாதம் ஜப்பான் 'சரண் ஆவணத்தில்' (Japanese Instrument of Surrender) கையெழுத்திட்டது. இவ்வாறு இரண்டாம் உலகப் போர் அதிகாரபூர்வமாக முடிவுக்கு வந்தது.

ஆனால் பின்பு மாறிவந்த புதிய உலகச் சூழலில் உடனேயே ஜப்பானும் அமெரிக்காவும் பொருளாதாரரீதியாகவும் இராணுவரீதியாகவும் பலமான நட்பு நாடுகளாகின.

அதன்பின்னர் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் தனது பரமஎதிரி நாடுகளாகத் திகழ்ந்த அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளின் பாரிய பொருளாதார - வர்த்தக உதவிகளைப் பெற்று ஜப்பான் அபிவிருத்தி அடைந்த நாடு ஆகியது. வரலாற்று எதிரிகளை நண்பர்களாக்கிய அரசியல் இராஜதந்திரம், ஜப்பானை உலகின் முன்னணி அபிவிருத்தி அடைந்த நாடாக்கியது. அதே வேளை ஜப்பானின் பாதுகாப்புக்கும் அமெரிக்கா பொறுப்பாகியது.

இப்பொழுது ஆயுத வல்லரசாகும் ஜப்பானின் திட்டத்திற்கு அமெரிக்கா பூரண ஆதரவுகொடுக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். அமெரிக்காவின் மற்றுமொரு பொருளாதார, வர்த்தக கூட்டாளியாக மட்டுமல்லாமல் ஜப்பான் அமெரிக்காவுக்கு ஆயுத வல்லரசுக் கூட்டாளியாகவும் இவ்வுலகில் பரிணமிக்கிறது.

**காணி** விவகாரம் பெரும் பிரச்சினையாகவும், குழப்பமாகவும் சென்று கொண்டிருக்கையில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப் பட்டுள்ள மகாவலித்திட்டத்தினுள் மட்டக்களப்பு மாவட்ட காணிகளை உள்வாங்குவதை தடுக்கவேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டவண்ண மிருக்கிறது.

அந்தவகையில் இவ்வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில், இந்த மகாவலித்திட்டத்தின் முன்னெடுப்புகள் குறித்து ஆராயலாம்.

மகாவலித் திட்டம் 1969ஆம் ஆண்டு காலத்தில் ஆரம்பிக்கப்

ஈரலக்குளம் கிராமசேவையாளர் பிரிவிலுள்ள பெரிமாதவணை, மைலத்தமடு, விளாவடிப் பொத்தானை, நெடியவட்டை ஆகிய பிரதேசங்களில் உள்ள 2800 ஏக்கர் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைக்காணிகளை புதிதாக உள் வாங்குவதற்குரிய முன்முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக அறிய வருகின்றது.

அதேவேளை இப்பகுதில் அத்துமீறி வெளிமாவட்ட பெரும்பான்மை சமூகத்தவர்கள் காணிகளைக் கைப்பற்றி விவசாயம் செய்துவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கேட்டுக்கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு ஒரு வாரங்களுக்கு முன்னர், மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குட்பட்ட செங்கலடி, கிரான் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள மேய்ச்சற்தரை காணிகளை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலர் அத்துமீறி கைப்பற்றி ஆவணங்கள் தயாரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஈரலக்குளம், கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த

காணிகளை அத்துமீறி தமிழ்ப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதன் மூலம் விவசாயம் செய்யும் பெரும் பான்மைச் சமூகத்திற்கு பாதுகாப்பளிக்கும் மூலோபாயமா? என்றவகையிலும் கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.

இப்பிரதேசத்தில் கால்நடைகளுக் கென ஒதுக்கப்பட்ட காணிகள் அனைத்தையும் ஏனைய கிராம சேவையாளர் பிரிவுடன் இணைப்பதுடன், காணிகளையும் மீளப்பெற்று கால் நடைப் பண்ணையாளர்களின் பாவனைக்கு விடுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டும் என்பது கோரிக்கையாக இருந்தாலும் திட்டமிட்டவகையில் நடைபெறும் இவ்வாறான காணி சுவீகரிப்புகள் இனமுறுகலையும் வீணான கருத்து முரண்பாடுகளையும், குழப்பங்களையுமே கொண்டுவரும் என்பது புத்திஜீவிகளது பார்வையாக இருக்கிறது.

பாதுகாப்பு படையினரும் பௌத்த பிக்குகள் சிலரும் வந்து இப்பகுதிக் காணிகள் தங்களுடையது என உரிமை பாராட்டுவதோடு இப்பகுதிக்குள் நீங்கள் வரக்கூடாது எனவும் இக்காணிகளில் கரும்புச் செய்கையைத் தாம் ஆரம்பிக்க வுள்ளதாகவும் கூறியதோடு, அப்பகுதியில் நின்ற பலரை எச்சரித்துச்சென்றுள்ளனர். இப்பகுதியில் பல நூற்றுக்கணக் கான ஏக்கர் மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குட்பட்ட மேய்ச்சற்தரை காணிகள் அவற்றுக்கான குளமும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இந்தப் பிரதேசத்தினை அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கும் வகையில் எடுக்கப்படும் முயற்சிகளை உடனடியாகத்தடுத்து நிறுத்து

# மகாவலியும் நடக்கும் மர்மங்களும்

பட்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன ஆட்சிக் காலத்தின் போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக திருகோணமலை, பொலநறுவை, மலையகம், அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங் களில் மாகாவலித்திட்டமானது பகுதி பகுதியாக நடைமுறைப்படுத் தப்பட்டது.

இத்திட்டங்கள் பொலநறுவை, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளை உள்ளடக்கிய (B) பிரிவானது மாதுறு ஓயா திட்டம் என அழைக்கப்பட்டது.


இத்திட்டத்தின்கீழ் விவசாயம் செய்யக்கூடிய கோறளைபற்று வடக்கு (வாகரை), கோறளைபற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள கிரான் பாலத்திற்கு வடக்கு மற்றும் வடமேற்கு திசையாகவும், ஓட்டமாவடிப் பாலத்திற்கு வடக்கு பக்கமாகவும் பனிச்சங்கேணி, திருகோணமலை பிரதான வீதியில் இருந்து 3 கிலோமீற்றருக்கு மேற்காகவும் உள்ள பகுதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இது வாகரை பிரதேச செயலகப் பிரிவின் கிராமசேவகர் பிரிவுகளான புணாணை கிழக்கு மதுரங்கேணிக் குளம், புச்சாக்கேணி, கட்டுமுறிவுக் குளம், கிரான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வடமுனை, ஊத்துச் சேனை, கல்லிச்சை, புணாணை மேற்கு, பேரில்லாவெளி, குடும்பி மலை, முறுத்தானை, பெண்டுகள் சேனை, வாகனேரி, ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளும் ஏற்கனவே இத்திட்டத்தின் உள்வாங்கப் பட்டுள்ளது. ஆயினும் இச்செயல் பாடானது அக்காலகட்டத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைக் காரணம் காட்டித் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

எனினும், இப்பகுதிகளுக்கான காணி நிர்வாகவிடயங்கள் அனைத்தும் அந்த பிரதேச செயலகப் பிரிவால் நிர்வகிக்கப்பட்டவந்தது. இதே வேளை, இத்தகைய சூழ்நிலையைக் காரணங்காட்டியே மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்கு உட்பட்ட மகோயா, பதியத்தலாவ பகுதிகள் அம்பாறை மாவட்டு நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டு பின்னர் 2010ம் ஆண்டு மகாவலித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது குறிப் பிடத்தக்கதாகும்.

தற்போது மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குட்பட்ட செங்கலடி, கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மேய்ச்சற்தரை காணி களை மகாவலித் திட்டத்தின் கீழ் வெளிமாவட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்த வேண்டுமென கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா துரைரெட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார். மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பிஎஸ்.எம்.சார்ள்ஸ்க்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவரது கடிதத்தில், தற்போது, இத்தகைய தந்திரோபாயத்தை கையாண்டே தற்போது மகாவலித் திட்டத்தின் கீழ் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள




இதேபோல் இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்வாங்கப்பட்ட கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பிமலை (கி.சே.பி) மைலத்தமடு, சிறிய மாதவணை (மலமண்டி) மோழில்வள, வம்மிக்குளவட்டை, பூவட்டை, தகரப்பொத்தானை போன்ற கிராமங்களில் உள்ள 5000 ஏக்கருக்கு மேற்பட்ட கால் நடைகளுக்குரிய மேய்ச்சற்தரைக் காணிகளை சுமார் 250 ற்கு மேற்பட்ட வெளிமாவட்ட பெரும்பான்மை இனத்தவர்கள் இராணுவத்தின் உதவியுடன் அத்துமீறிக் கைப்பற்றி விவசாயம் செய்துவருகின்றனர்.

இவ் அத்துமீறல்களை உறுதி செய்யக்கூடியவாறு 20-12-2013 அன்றும் அதன்பின்பும் புத்தபிக்கு ஒருவர் வருகை தந்து தகரப்பொத்தானையில் உள்ள மேய்ச்சல் தரைப்பகுதியை 50ற்கு மேற்பட்ட வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவருக்கு பகிர்ந்தளித்துள்ளமை சான்றாகும். இது மட்டக்களப்பு மாவட்ட அரச நிர்வாகத்திற்குத் தெரியாமல் நடைபெற்றுக் கொண்டுவரும் அத்துமீறல் செயற்பாடாகும். இந்நடவடிக்கைகள் மூலம் எமது மாவட்ட மக்களின் கால்நடை மேய்ச்சற்தரை காணிகள் கபளீகரம் செய்யப்படுகிறது. இது சமாதானத்தின் பெயரால் எமது மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

எனவே இப்பிரதேசத்தில் அத்துமீறி கைப்பற்றப்பட்ட கால்நடை மேய்ச்சலுக்குரிய காணிகளை மீளப்பெற்று கால் நடைப் பண்ணையாளர்களின் பாவனைக்கு மேய்ச்சற்தரை காணிகளை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு

பெரிய மாதவணை, விளாவடிப் பொத்தானை, நெடியவட்டை கிராமங்களும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குடும்பிமலை (கி.சே.பி) மைலத்தமடு, சிறிய மாதவணை (மலமண்டி) மோழில் வள, வம்மிக் குளவட்டை, பூவட்டை இதகரப், பொத்தானை போன்ற கிராமங்களில் உள்ள 5000 ஏக்கருக்கு மேற்பட்ட கால்நடை

**— கிழக்கான் —**

களுக்குரிய மேய்ச்சல் தரைக் காணிகளை சுமார் 250ற்கு மேற்பட்ட பெரும்பான்மை இனத்தவர்கள் இராணுவத்தின் உதவியுடன் அத்துமீறிக் கைப்பற்றி விவசாயம் செய்துவருகின்றனர். மேற்குறித்த இவ்விடயம் தொடர்பாக பின்வரும் விடயங்களில் எமக்கு ஐயப்பாடு தோன்றியுள்ளது.

இக்காணிகளைத் தமக்கு உரிமை பாராட்டும்வகையில் முறைகேடான முறையில் ஆவணங்கள் தயாரிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படு கின்றதா? அண்மைக்காலத்தில் இக்காணிகளை பொலநறுவை மாவட்டத்தின் அறுகம்பொல கிராம சேவையாளர் பிரிவின்கீழ் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

இப்பிரதேசத்தில் இருக்கும் இராணுவமுகாமின் மூலம் கால்நடைக்கான மேய்ச்சற்தரைக்

அதேநேரம், மட்டக்களப்பு எல்லைக் குட்பட்ட கித்துள் பிரதேசத்தின் ஒரு குறிப்பிட்ட பரப்பளவான காணிகளை அம்பாறையுடன் சேர்ப்பதற்கு எடுக்கும் முயற்சியொன்றும் நடைபெற்று வருவதாகவும் தகவல் கிடைக்கிறது.

> **“இப்பிரதேசத்தில் கால்நடைகளுக்கென ஒதுக்கப்பட்ட காணிகள் அனைத்தையும் ஏனைய கிராம சேவையாளர் பிரிவுடன் இணைப்பதுடன், காணிகளையும் மீளப் பெற்று கால்நடைப் பண்ணையாளர்களின் பாவனைக்கு விடுவதற்கு ஏற்ற நடவழக்கைகளை உறுதிப்படுத்தவேண்டும் என்பது கோரிக்கையாக இருந்தாலும் திட்டமிட்ட வகையில் நடைபெறும் இவ்வாறான காணி சுவீகரிப்புகள் இனமுறுகலையும் வீணான கருத்து முரண்பாடுகளையும், குழப்பங்களையுமே கொண்டு வரும் என்பது புத்திஜீவிகளது பார்வையாக இருக்கிறது.”**

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிக்குட்பட்ட கித்துள் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள புளியடிப்பொத்தானை பகுதியில் நெடியவட்டைக் குளம் அமைந் துள்ளது. இப்பிரதேசம் பாரிய நிலப்பரப்பை உடையதோடு மிக நீண்டகாலமாக கால்நடைகளின் மேய்ச்சல் தரையாகவும் கால்நடை களுக்குரிய குடிநீர்க்குளமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனை கால்நடைகளின் மேய்ச்சல் தரைக்குரிய பராமரிப்பு குடிநீர் தேவைகளுக்காக குளத்தைப் புனரமைப்பு செய்வதற்கு பிரதேச செயலாளரின் அனுமதியுடன் அப்பிரதேச கால்நடைச் சங்கம் ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் பணம் அறவிட்டு ஆரம்ப வேலை களைச் செய்யத் தொடங்கியுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பும், கடந்த ஒரு வாரகாலப் பகுதிக்குள்ளும் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த தம்பிட்டிய பகுதியிலுள்ள பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த

வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது இந்த இடத்தில் கோரிக்கையாக இருக்கிறது. இதே நிலை மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குட்பட்ட வெல்லாவெளிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள செல்வாபுரப் பகுதிக் காணிகளை அம்பாறை மாவட்டத்துடன் சேர்ப்பதற்கும் முயற்சிகள் நடைபெற்றுவருவதனையும் நினைவுபடுத்தியாக வேண்டும்.

2000ஆம் ஆண்டு காலகட்டத்தில் அசாதாரண சூழ்நிலையை காரணங்காட்டி அம்பாறை மாவட்டத்தின் குறிப்பிட்ட சில பிரதேசங்களை மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகத்தினால் கையாள்வதில் பிரச்சினைகள் காணப்படுவதனால் அவற்றை அம்பாறை மாவட்டத்தின் நிர்வாகத்தின்கீழ் இயங்குவதற்கு வகை செய்யப்பட்டிருந்தது.

ஆனாலும் அந்த நிர்வாகத்தினை தொடர்ந்தும் அதே நிர்வாகம் தொடர்வது பொருத்தப்பாடாக இருக்காது. தற்போதுள்ள நிலையில் தமிழ் மக்களுக்கும் அதிகாரிக்கும் இடையில் பரஸ்பர உறவு இல்லாத மனோநிலையைப் பயன்படுத்திக் கொள்ள முனைவது பொருத்த மில்லாத செயற்பாடு என்பது பொதுவான கருத்தாக இருக்கிறது.

அந்தவகையில், வரலாற்று ரீதியான பாரம்பரியபாரிய நிலப்பரப்பை உடைய மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்குள் தேவையற்ற வகையில் அதிகாரம் செலுத்து வதற்கானதும், சுவீகரிக்கின்ற வகையிலாக செயற்படுவதும் பொருத்தமற்ற செயற்பாடாகவே இருக்கும்.

அதே நேரம் மகாவலித்திட்டம் என்றபெயரில் கடந்த வாரம்முதல் முன்னெடுக்கப்பட ஆரம்பித்திருக்கும் செயற்திட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ்பேசும் மக்களுக்கு பலனளிப்பதாக அமையுமெனில் ஒருவகையில் சிந்திக்க முடியுமாக இருந்தாலும், காணிசார்ந்த பிரச்சினைகளும் திட்டமிட்ட குடியேற்றங்களும் கடந்தகாலத்தில் பிரச்சினை களைக் கொண்டுவந்ததுபோன்று மகாவலித்திட்டமும் அமைந்து விடுமா என்ற அச்சம் ஒவ்வொரு சமூகம் சார் சிந்தனையாளர் களிடமும் இருக்கிறது.

அந்தவகையில் மகாவலித் திட்டம் என்ற பெயரில் மட்டக் களப்பு மாவட்டத்தில் நடக்க ஆரம்பித்திருப்பது என்ன என்ற கேள்வியும் இருக்கிறது. இது எதிர்காலத்தில் ஒரு அடக்கு முறையான அதிகாரத்துவத்துக்கு வழிவகுக்காதிருந்தால் போதுமானதாகும்.




**மஹேல** ஜயவர்த்தனவுக்கு பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டி வாய்ப்பாக அமையவில்லை. முப்பத்தாறு வயதான மஹேல முதல் இனிங்சில் ஐந்து ஓட்டங்களுக்கு, இரண்டாவது இனிங்சில் முதல் பந்திலேயே அவுட்டும் ஆகினார்.

இவரது விக்கெட்டுக்களை எடுத்தவர் பாகிஸ்தானின் அறிமுக வேகப் பந்துவீச்சாளர் பிலாவல் பாட்டி.

இதன்காரணமாக, மஹேல அழுத்தங்களுக்கு உள்ளாகி விட்டாரா என்ற கேள்விகள் பலதரப்பாலும் அவரிடம்



# தூரம் அதிகமில்லை

ஏவப்பட்டன. அதற்குப் பதிலளித்த அவர், டெஸ்ட் போட்டியென்றாலே அழுத்தம் என்பது எல்லோருக்கும் பொதுவாகவே இருக்கும். நீங்கள் கேட்பது மேலதிக அழுத்தமேதும் உண்டா என்பது போலத் தெரிகிறது.

அப்படி ஏதும் இல்லை. இரண்டு தடவையும் ஒரு சிறந்த பந்துவீச்சாளரின் அற்புதமான பந்துகளிலேயே ஆட்டமிழந்தேன். அவரை நான் முன்பு எதிர்கொண்டது கிடையாது. ஆனால் ஒருநாள் தொடரில் அவர் அற்புதமாகப் பந்துவீசியதாக அணி வீரர்கள் என்னிடம் கூறியிருந்தார்கள். அவர் சரியான இடங்களில் பந்துவீசினார். அதனால் விக்கெட்டுக்களைப் பெற்றார் என்றார். அழுத்தம் பற்றிய கேள்விகள் அவரைநோக்கி வீசப்பட்டதன் காரணமே மஹேல இனி அவ்வளவுதானா என்ற தொனியில் ஏற்பட்டது போலத் தெரிகிறது.

ஆனால், இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அழுத்தம்கொடுக்க முனைந்தவர்களுக்கே அழுத்தம் கொடுத்துவிட்டார் மஹேல. தனது 32ஆவது சதம் அடித்து 129 ஓட்டங்களுடன்
ஆட்டம் இழந்து இருக்கிறார் அவர். இதில்12 பவுண்டரிகளும் அடக்கம். இன்னொரு விடயம், இன்னும் 81 ஓட்டங்கள் பெற்றால் மஹேல டெஸ்ட் அரங்கில் 11000 ஓட்டங்கள் கடந்த வீரர் என்ற பெருமையையும் பெறுவார். அது அவருக்கு நிச்சயமாக தொலைதூரத்தில் இல்லை.



# நாங்கள் பெரும் புயல்

அவுஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் பீட்டர் சிடில் தென் ஆபிரிக்க வேகப் பந்து வீச்சாளர்களைவிட நாங்களே சிறந்த பந்துவீச்சாளர்கள் என்று மார்தட்டுகிறார். நடந்து முடிந்த ஆஷஸ் தொடரில் 5-0 என்று இங்கிலாந்தைத் துடைத்தெறிந்தது அவுஸ்திரேலியா. இந்தத் தொடரில், ஆட்டத் தொடர் நாயகன் 37 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

அடுத்ததாக றயான் ஹறிஸ் 22 விக்கெட்டுக்களையும், பீட்டர் சிடில் 16 விக்கெட்டுக்களையும், சுழல் பந்துவீச்சாளர் நேதன் லயன் 19 விக்கெட்டுக்களையும் பெற்றனர். நாங்கள் எல்லோரும் ஆட்டத்திறனைத் தொடர்ந்து பேணி வந்தோம். அதனைச் சிறப்பாக வெளிப்படுத்தினோம். மிட்சல் வேகத்தில் மிரட்டினார். நானும், ஹறியும் எங்கள் பங்கைச் செய்தோம். லயன் மிகச் சிறப்பாக சுழலில் சிக்கவைத்தார். இதனால் சிறந்த இணைப்பாட்டம் எதனையும் இங்கிலாந்திற்கு ஏற்படுத்த நாங்கள் வாய்ப்புக் கொடுக்கவில்லை.

இதுவே இங்கிலாந்தின் வீழ்ச்சிக்கும் பெரிதும் காரணமாக இருந்தது. இதனையே தெ.ஆபிரிக்காவிலும் தொடரப்போகின்றோம். தென் ஆபிரிக்க மைதானங்களில் விளையாடுவதென்பது அவ்வளவு இலகுவல்ல. போட்டி கடுமையாகத்தான் இருக்கும். ஆனால் நாங்கள் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. ஏனெனில் இன்று சர்வதேச கிரிக்கெட்டில் அதிசிறந்த பந்துவீச்சாளர்கள் நாங்கள்தான் என்று கூறியிருக்கிறார். தென் ஆபிரிக்க அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி செஞ்சுரியன் மைதானத்தில் பெப்ரவரி 12 ஆம் திகதி தொடங்கவிருக்கிறது.

# எப்படி மீள்வது?

இந்திய -தெ.ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் மிகப்பெரிய இலக்கொன்றைத் துரத்திய தென் ஆபிரிக்க அணி இறுதி நேரத்தில் மூன்று ஓவர்கள் பாக்கி இருக்க பதினாறு ரண்களை எடுக்கமுடியாமல் போட்டி சமனாகிப் போனமையை எல்லோரும் கண்டித்தார்கள். அந்தவகையில் தான் முன்னாள் தெ.ஆபிரிக்க சகலதுறை வீரர் கிளைவ் றைஸ் இவர் சோம்பேறிகள் என்றுதன் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார் மடியில் விழுந்த வெற்றிக் கனியை மண்ணில் போட்டவர்கள் என்று பொரிந்து தள்ளியுள்ளார்.

இதேவேளை அடுத்தமாதம் அவுஸ்திரேலியா இங்கிலாந்துக்கு எதிரான பிரமாண்ட வெற்றியுடன் தெ.ஆபிரிக்கா செல்லவிருக்கிறது. தென்ஆபிரிக்காத் தரப்பில் இது ஒரு நிம்மதி இன்மையை ஏற்படுத்தியுள்ளது. சிறந்த சகலதுறை வீரரான ஜக்கலிஸ் ஓய்வுபெற்றுவிட்டார். முன்னணி வேகப் பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் உபாதைக்குள்ளாகி சத்திரசிகிச்சைக்கு உட்பட இருக்கிறார். மறுபுறம் டீவில்லியர்சும் ஒரு சத்திர சிகிச்சைக்கு உட்பட இருக்கிறார்.

இந்த மூன்றுபேரின் பெறுமதி சொல்லித் தெரியவேண்டியதில்லை. இந்த நிலையில் கலிசுக்குப் பதிலாக றயான் மக்லெரன் உள்வாங்கப்படலாம் எனத் தெரியவருகிறது. மேலும் வில்லியர்ஸ் விளையாட முடியாத பட்சத்தில் இளம் வீரர் டீகொக் விக்கெட் காப்பாளராக உள் வாங்கப்படலாம். ஆனால் டேல் ஸ்ரெயினுக்கு பதிலீடு யாரென்பது இன்னும் தெரியவரவில்லை. எது எவ்வாறாயினும் இம்முறை அவுஸ்திரேலியாவை எதிர்கொள்வது இலகுவாக இருக்கப்போவதில்லை என்று கிறைவ் றைஸ் சந்தேகம் தெரிவிக்கிறார். ஏனெனில் மிட்சல் ஜோன்சனும், றயான் ஹறிசும் இங்கிலாந்தைக் கவிழ்த்ததில் மிக முக்கிய பங்குவகிப்பவர்கள். இது தெ.ஆபிரிக்க அணிக்கு மிகுந்த இக்கட்டைக்கொடுக்கும் என்பது நிச்சயம். எனினும் பெப்ரவரி மாதமளவில் ஸ்ரெய்ன், டீவில்லியர்ஸ் இருவரும் அணிக்கத் திரும்பக்கூடும் என்ற நம்பிக்கை அணியில் இருக்கிறது. அப்படியில்லாத பட்சத்தில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிப் பாதை தொடர் வதைத் தடுக்க முடியாமல் போகும்.



# 2013 இன் சில பதிவுகள்



## ஜனவரி

பிரிஸ்பேன் ரென்னிஸ் கிண்ணத்தை செரினா வென்றார்.

சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்து மைக்ஹஸி ஓய்வுபெற்றார்.

அவுஸ்திரேலிய ஓப்பன் கிண்ணத்தை பெலாரஸ் நாட்டின் விக்ரோரியா அஸரென்கா வென்றார்.

அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டியில் சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் சம்பியன் கிண்ணம் வென்றார்.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் தேர்வுக்குழுத் தலைவராக சனத் ஜெயசூரிய நியமனம் பெற்றார்.

## பெப்ரவரி

100 டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை தாங்கியவர் என்ற பெருமையை தெ.ஆபிரிக்க அணித்தலைவர் கிரேம் ஸ்மித் பெற்றார்.

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது போட்டியில் இது நடைபெற்றது.

அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் உயரிய விருதான அலன்போடர் விருதைப் பெற்றார்.

இலங்கை அணியின் ஒரு நாள் மற்றும் டெஸ்ட் அணித்தலைவராக ஏஞ்சலோ மத்தியூஸ் நியமிக்கப்பட்டார். இவ்விரு அணிகளின் உபதலைவராக தினேஸ் சந்திமால் நியமிக்கப்பட்டார். மேலும் சந்திமால் இருபதுக்கு இருபது அணித்தலைவராகவும், லசித் மலிங்க உபதலைவராகவும் நியமிக்கப்பட்டனர்.

தென்னாபிரிக்க பிளேட் ரண்ணர் ஒஸ்கார் பிரிட்டோரியஸ் தனது காதலியைச் சுட்டுக்கொன்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

பத்தாவது மகளிர் கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலியா வென்றது.

இலங்கை அணியின் வேகப்பந்துப் பயிற்சியாளராக சமிந்தவாஸ் நியமிக்கப்பட்டார்.

## மார்ச்

லண்டன் ஒலிம்பிக் தடகள வீராங்கனை ஜெசிக்கா ஜனுஸ் எலிசபெத் மகாராணியின் உயரிய விருது பெற்றார்.

தொடர்ந்து பதினோரு போட்டிகளில் கோல்கள் போட்ட முதல் வீரராக பார்சலோனாவின் லயனல் மெஸ்ஸி சாதனை படைத்தார்.

புனே வாரியர்ஸ் அணியின் தலைவராக ஏஞ்சலோ மெத்தியூஸ் நியமிக்கப்பட்டார்.

## ஏப்ரல்

இம்மாதத்தில் ஆறாவது ஐ.பி.எல் ஆரம்பமாயிற்று.

லண்டன் மரதன் ஓட்டம் நடைபெறும் காலம்.

எட்டாவது முறையாக பார்சலோனா அணி ஓப்பன் கிண்ணம் வென்றது.



## மே

தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய கிரோண்பிரி போட்டிகளில் ஈட்டி எறிதலில் நதீக்கா லக்மாலி தங்கம் வென்றார்.

இங்கிலாந்தின் உதைபந்தாட்ட ஜாம்பவான் டேவிட் பெக்கம் அனைத்து வகைப் போட்டிகளில் இருந்தும் ஓய்வு.

ஆறாவது ஐ.பி.எல் கிண்ணத்தை மும்பை இந்தியன்ஸ் வெற்றிகொண்டது.

நடப்பு சீசனில் பார்சலோனா அணியின் லயனல் மெஸ்ஸி 30 கோல்கள் அடித்துச் சாதனை.

## ஜூன்

நடப்பு சம்பியன் மரியா ஷரபோவாவை வீழ்த்தி செரினா வில்லியம்ஸ் பிரெஞ்ச் ஓப்பன் கிண்ணம் வென்றார்.

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி இந்தியா வெற்றி.

(தொடரும்...)

A.பாரிஸ், மிகிந்தலை.




# சிதைந்த நிலவுகள்

“ கமலத்தின் கண்ணீரில் அனைத்து சுமைகளையும் சுமந்த வண்ணம் எதிர்நீச்சலை நினைத்து ஓடியது! காலை பதினொரு மணியளவில் துவங்கிய கண்ணீர் கலவரம் மாலை மூன்று மணிவரை விட்டுவிட்டு பொழியும் மழை யானது! மழை ஓய்ந்தபின் ஓயாத சோகத்துடன் தாயும் சேய்களும் இருந்தனர்! ”

மூடு பனிக்குளிர் மேனி தடவ அக்காவும் தங்கையும் புத்தகப்பையை முதுகில் தொங்கவிட்டு நடையும் ஓட்டமாய் அச்சி முகமதுவின் ஹோட்டலுக்குப்போய் இரண்டு தயிர் வடைகளை தங்கைக்கு வாங்கிக்கொண்டு பாடசாலை-யைச் சென்றடைந்தனர்.

அவர்கள் இருவரிடமும் ஒரு அற்புத பழக்கம் என்ன வென்றால், எங்காவது புறப்படு வதாக இருந்தால் ஒரு தடவைக்கு பலமுறை தாயிடம் பயணம்கூறி தாயை வணங்கித்தான் கிளம்பு வார்கள். அன்றும் அப்படித்தான் அவர்களின் செயற்பாடு அமைந்து இருந்தது.

இந்தப் பழக்கம் இன்றைய சமுதாயத்தில் இல்லை என்று தான் கூறவேண்டும். தாய் தந்தையை மதிக்கும் அந்த உயர்பண்பு அனைவருக்கும் வரவேண்டும்.

கணவன் சிவராம் காணாமல் போன பிறகு கீரைக்கஞ்சி காய்த்து, கச்சான் வறுத்து, போன்ற சிறு



கைத்தொழில் மூலம் காலம் கடத்தினாள். அதைத் தவிர வீட்டுத்தோட்டத்தில் கொஞ்சம் தென்னை மரங்களும் இருந்தது. அத்துடன் சிறுசிறு தோட்டப் பயிரும் நடுவாள்.

அன்று பவளத்தின் உடல் நிலை கொஞ்சம் தேறியது. சுமார் காலை ஒன்பது மணி இருக்கும், படுக்கையில் இருந்து எழுந்துகொண்டாள்!

மதியம் பாடசாலைவிட்டு பிள்ளைகள் இரண்டுபேரும் வருவார்கள். அவர்களுக்கு சமைக்கவேண்டும். உடுப்பு துவைக்கவேண்டும். முற்றம் கூட்டவேண்டும். இப்படி ஏகப் பட்ட வேலை அவளுக்கு அடுக்கிக் கிடந்தது!

எத்தனை கோடி வேலைகள் இருந்தாலும் மதியச்சாப்பாட்டை சமைப்பதாய் முடிவெடுத்து அடுப் படிக்குச் சென்றாள் கமலம். கமலம் என்ற இல்லத்தரசி மற்றைய இல்லத்தரசிகளைவிட இல்லத் திற்கு அரசியாகவே இருந்தாள். ஏன் அப்படிக் கூறினேன் என்றால் குழந்தைகளுக்கு தந்தை இல்லாத குறை எதுவும் தெரியாமல் கவனித்துக்கொண்டாள்.

வீட்டுவேலைகளை நினைத்து ஒரு நீண்ட பெருமூச்சைவிட்ட வண்ணம் அரிசியை சுளகில் போட்டுக்கொண்டு மகள் இரண்டு பேரும் வளர்ந்துவிட்டார்கள். மூத்தவள் 13ஆம் ஆண்டிலும் இளையவள் 10 ஆம் ஆண்டிலும் படிக்கிறார்கள். அவர்கள் இரண்டுபேரும் அழகிகள்தான். மென்மேலும் அழகாக வருவதால் ஆபத்து வந்திடுமோ...?

“எட்டிலழகு
பதினெட்டில்
அழகு
எந்தப்
பெண்ணும்
இருபதில்
ரெட்டை
அழகு”

எனும் கவிஞனின் பாடல் வரிகள் பக்கத்து வீட்டு வானொலியில் இருந்து வந்து கமலத்தின் காதால் நுழைந்து மனதை பயப்படுத்திச் சென்றது.

அன்று முதல் கமலம் பிள்ளை கள் மீது அதிக அக்கறையும் அவதானமுமாய் இருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு அடுப்பில் உலையை வைத்துவிட்டு வெளியில் வந்தாள்! “அம்மா... அம்மா.... செத்திட்டாராம்.. செத்திட்டாராம்” என்று கூக்குரலிட்ட வண்ணம், படபடத்த பாதங்களோடு துடிக்க மறுக்கும் இதயத்தோடு ஓடி வந்தார்கள் அக்கவும் தங்கையும்!

“யாரம்மா...? யாரம்மா...?

வார்த்தைகள் விக்கி மதிமயங்கி விடயம் தெரியாமல் மகள் இருவரையும் நோக்கி கேள்வி கணையைத்தொடுத்தாள் கமலம்.

“அம்மா எங்கட பள்ளிக்கூடத் திலே A/L படிக்கிற அண்ணாமார் நான்கு பேரை யாரோ கடத்திக் கொண்டுபோக வந்ததாம். அத தடுக்க எங்கட அதிபர் போனார். தடுக்கப்போன அதிபரை யாரோ சுட்டுப்போட்டு போட்டாங்கள்” என்று சீதாதேவியின் அவலக் குரல் அமைதியாவதற்குள் தேம்பித் தேம்பி அழுது அழுது கீதாஞ்சலி கூறினாள்.

“அம்மா... அவங்க எண்ட வகுப்பு” மூன்றுபேரும் வீட்டில் பெண்கள், ஆகையால் அவர்களின் கண்கள் கண்ணீரைக்கக்கியது! ஆறுதல்கூற அருகில் எவரு மில்லை! அழுகையோ அவர் களுக்கு ஆறுதலாகக் கிடைத்தது. அழுதார்கள், கண்ணில் இருக்கும் கண்ணீர் வற்றும்வரை அழுதார்கள்.

மூன்று பேரின் அழுகையும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருந்தது.

கீதாஞ்சலியின் அழுகை எதிர் காலப் படிப்பையும் அதிபரின் இழப்பையும் திரையிட்டது! சீதா-தேவியின் அழுகையில் சிதறிய அதிபரின் உடலம் மட்டும்தான் மையமிட்டிருந்தது!

கமலத்தின் கண்ணீரில் அனைத்து சுமைகளையும் சுமந்த வண்ணம் எதிர்நீச்சலை நினைத்து ஓடியது! காலை பதினொரு மணியளவில் துவங்கிய கண்ணீர் கலவரம் மாலை மூன்று மணிவரை விட்டுவிட்டு பொழியும் மழை யானது! மழை ஓய்ந்தபின் ஓயாத சோகத்துடன் தாயும் சேய்களும் இருந்தனர்!

“என்னடி தங்கச்சி என்னை ஒரு மாதிரியாய் பார்க்கிறாய் பயந்திட்டியா?” என்றாள் கீதாஞ்சலி.

“பயம் இல்லை அக்கா, வரவர நீ வடிவாய் வாராய் அதுதான்”

“அதற்கு இப்ப என்ன?”

“ஒண்டும் இல்லை அக்கா.... எங்கையோ படிச்சன்! திடீரெண்டு வடிவாய் வந்தால் மரணம் நெருங்குகிறது என்று அர்த்தமாம்”

சீதாதேவி எதையோ கூறி அலம்பிக்கொண்டிருக்கையில் தாய் கமலத்திற்கு கடும் கோபம் வந்தது சீதாதேவி மீது!

(நிலவுகள் வளரும்...)

திருமணமாகிப் பத்து ஆண்டுகளாகின்றன. கண்ணுக்குக் கண்ணாக ஒரு மகன். காதல் திருமணமோ எனப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படும் அளவுக்குப் பாசத்துடன் இருக்கும் கணவன். இதில் எந்தச் சிக்கலுமே இல்லை. ஆனால் என் மனம்தான் சில நாட்களாகக் குற்ற உணர்ச்சியில் மறுகிக்கிடக்கிறது. நாள் முழுவதும் வீட்டிலேயே அடைந்திருக்கிறேனே என்று என் வாசலை விசாலப்படுத்த விரும்பினார் என் கணவர். எனக்கெனத் தனியாக லப்டொப் வாங்கிக்கொடுத்து, பேஸ் புக்கை அறிமுகப்படுத்திவைத்தார். “பேஸ்புக் மூலம் என் பள்ளி, கல்லூரித் தோழிகளை மீண்டும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இளமை திரும்பியதுபோல உற்சாகத்துடன் வலம்வந்தேன்.

இவர்களுக்கு நடுவேதான் என் பள்ளித்தோழன் ஒருவனும் பேஸ்புக்கில் அறிமுகமானான். ஆண், பெண் பால் வேறுபாடுகள் தெரியாத அந்தப் பருவத்தில் என் மனதுக்கினியவன் அவன். என்னை யாராவது, ஏதாவது சொல்லிவிட்டால் தாங்கமாட்டான். அவர்களை என்னிடம் மன்னிப்புக் கேட்கவைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான். அப்பாவின் வேலை காரணமாக நாங்கள் வேறு ஊருக்குச் சென்றுவிட்டதால் அவனுடன் தொடர்பே அற்றுப்போயிற்று. ஆனால் அவனை பேஸ்புக் மீட்டுத்தந்தது.

பத்து வயதில் பார்த்தவனைக் கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் கழித்து பேஸ்புக்கில் பார்த்தபோது பரவசமாக இருந்தது. போன் நம்பர் வாங்கிப்பேசினான். என்னவோ நேற்றுதான் சனி, ஞாயிறு பள்ளி விடுமுறை முடிந்து இன்று பார்த்துக்கொண்டதுபோல அத்தனை உரிமையுடன் இருந்தது அவன் பேச்சு. பரஸ்பர நல விசாரிப்புகள் முடிந்து, பழைய கதைகளைப் பேசித் தீர்த்தோம். தினமும் கணவரும், மகனும் கிளம்பியதும் எங்கள் பேச்சு ஆரம்பித்துவிடும். முதல் நாள் விட்ட இடத்தில் இருந்து பேச்சைத் தொடங்குவோம்.

பேச்சு சலித்துப்போன ஒருநாளில் இருவரும் சந்தித்தால் என்ன என்று தோன்றியது. பள்ளித்தோழனைப் பார்க்கச் செல்கிறேன் என்றால் கணவர் என்ன நினைத்துக்கொள்வாரோ என்று தோழி வீட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு கிளம்பினேன். நகரின் முக்கிய ரெஸ்டாரெண்டில் டேபிள்புக் செய்திருப்பதாகச் சொன்னான். எனக்காக வாசலிலேயே காத்திருந்தவனை, தூரத்தில் இருந்தே பார்த்துவிட்டேன்.

நெற்றியில் படர்ந்த முடியும், கண்களில் சிரிப்புமாக எதிர் கொண்டவனைப் பார்த்து ஒரு நிமிடம் ஆடிப்போனேன். “அடப்பாவி, இவ்ளோ அழகா மாறிட்டியே” என்று என் அதிர்ச்சியை வாய்விட்டே

# தடுமாற்றம்



சொல்லிவிட்டேன். அதைக் கேட்டுச் சிரித்தவன், “நீயும்தான் அன்னைக்குப் பார்த்த மாதிரி அப்படியே இருக்கே. உன் ஓட்டைப் பல்லு எல்லாம் சரியாகிடுச்சு போல இருக்கே. குதிரை வால் கூந்தல் மட்டும் அப்படியே இருக்கு” என்றான். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இத்தனை வருடங்கள் கழித்தும் என்னை அப்படியே நினைவுவைத் திருக்கிறானே என்று பெருமிதமாகவும் இருந்தது. அவன் பேச்சு, அன்றைய உணவுக்கு சுவைகூட்டியது. பிரியும்போது எதேச்சையாகக் கைகுலுக்கினான். அவன் இயல்பாக இருந்தானா என்று தெரியவில்லை. எனக்குக் குறுகுறுப்பாக இருந்தது. அதை மறைத்தபடியே விடைபெற்றேன்.

அடுத்த வாரம் வந்த என் பிறந்தநாள் என் வாழ்வையே திசை மாற்றும் என்று நான் நினைக்கவே இல்லை. முதல் நாள் நள்ளிரவு அவனிடமிருந்து, “செல்லக்குட்டிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள் என்று குறுஞ்செய்தி வந்தது. அதைப் படிக்கும்போது கோபமும், மகிழ்ச்சியும் சேர்ந்தே தோன்றின. வேலைப்பளுவால் என் கணவர் என் பிறந்த நாளையே மறந்துவிட்டிருந்தார். காலை பூங்கொத்து அனுப்பித் தன் வாழ்த்தைப் பதிவுசெய்தான் அவன். நாங்கள் வழக்கமாகச் சந்திக்கும் ரெஸ்டரெண்டுக்கு வரச்சொன்னான். கண்ணை மூடச்சொல்லி, என் விரலில் மோதிரம் அணிவித்தான். மறுக்க முடியாமல் நின்ற என்னைப் பரிசுகளால் திணறடித்தான். கண்களில் ஏக்கத்துடன் விடைகொடுத்த அவனைப் பிரிய மனசே இல்லை. என்மீது பிரியமாக இருக்கும் அவனுக்கு ஏதாவது செய்யவேண்டுமே என்ற உந்துதலில் அவனை முத்தமிட்டேன். மறுப்பேதுமின்றி ஏற்றுக்கொண்டான்.

ஆனால் அந்த ஒரு செயல் என்னை வாட்டி வதைக்கிறது. வீடு திரும்பியதும் அவன் போன் செய்தான். நான் அழைப்பை மறுத்துவிட்டேன். எது என்னை அவன் பக்கம் ஈர்த்தது? கணவனின் அன்பே அபரிமிதமாக இருக்கும்போது எங்கே நான் தோற்றேன்? அவன் நண்பன் தான், ஆனால் அதற்கென்று இருக்கும் எல்லையை மறந்துபோனேனா?

கணவரிடம் மறைத்ததுதான் முதல்படி என்று தோன்றுகிறது. “இந்தாம்மா, உன் ஃப்ரெண்ட் லைன்ல இருக்கார்” என்று என் கணவர் தொலைபேசியை என்னிடம் தந்தபோது, கைகள் நடுங்குவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதுதான் நான் அவனிடம் கடைசியாகப் பேசியது. பேஸ்புக் கணக்கை ரத்து செய்துவிட்டேன். அவன் நம்பரை என் போனில் இருந்தும் அழித்துவிட்டேன். ஆனால் மெல்ல மெல்லக்கொல்லும் அவன் நினைவுகளை என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

(யாவும் கற்பனையல்ல)

## சிரிப்பதற்கு...



### புலவரும் சிங்கமும்

ஒரு அடர்ந்த காட்டின் வழியாக ஒரு புலவர் போய்க் கொண்டிருந்தார். திடீரென, காட்டில் இருந்த சிங்கம் இவரைப் பிடித்துக்கொண்டது.

உடனே புலவர் தான் சிறந்த பேச்சாளன் என்னை ஒன்றும் செய்யாதே தப்பிப்போகவிடு என்று மன்றாட, உன் பேச்சு என்னை மயங்கவைத்தால் நீ தப்பிவிடு என்றது. உடனே புலவர் பேசத் தொடங்கி 3 நிமிடத்தில் சிங்கம் மயங்கி விழ புலவர் தப்பி ஓடினார்.

இந்தச் சம்பவத்தை மறைவில் இருந்துபார்த்த சிங்கம் சொன்னது. புலவரது பேச்சில் விசேஷம் ஒன்றும் இல்லை. நீ ஏன் மயங்கிவிழுந்தாய் என்று கேட்க, மயங்கி விழுந்த சிங்கம் சொன்னது: தான் அப்படி நடக்காவிடில் அவன் பேசியே என்னைக் கொன்றுவிடுவான் என்றதே சிங்கம்!

# ‘ஈழத்தின் வலி’ என்னையும் நோகடித்தது

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

"ஈழத்தின் வலியை" உணர்ந்தவர்களில் நானும் ஒருத்தி. உணர்ந்ததை விட மனதில் அனுபவித்திருக்கின்றேன். உறக்கமில்லாத பல இரவுகளை நான் கழித்திருக்கின்றேன். போர் இடம்பெற்றபோது நிம்மதியில்லாத நாட்களாக என் வாழ்நாளில் பல நாட்களை நான் தொலைத்திருக்கின்றேன். விரக்தியின் விழிம்புக்குக் கூட நான் சென்றதுண்டு. உறவுகளிடம் கூட பகிர்ந்து கொள்ள முடியாத அந்த ஓலங்கள் இன்றும் என் மனத்திரையில் ஊமையாகி விட்டிருக்கின்றன." இவ்வாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாரள்ஸ் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக வைத்திய பீட விரிவுரையாளரும் பொது வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி மகேஸ்வரன் உமாகாந் எழுதிய "ஈழத்தின் வலி" மாவிலாறிலிருந்து நந்திக் கடல் வரை நான்காம் ஈழ யுத்தம் எனும் நூல் வெளியீடு கடந்த ஞாயிறு இரவு மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ். எம். சார்ள்ஸ் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கே தரப்பட்டுள்ளது.



2008 ஆண்டு வன்னி மாவட்டத்தின் இக்கட்டான சூழ்நிலையில் முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் நிருவாகத்திலிருந்து தனிமைப்படுத்தப் பட்டிருந்த நிலையில் அந்த மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளுக் காகவும் தங்களது உயிரைக்காத்துக் கொள்வதற்காகவும் ஓடிக்கொண்டிருந்த வேளையிலே வைத்தியர்களான உமாகாந்தும் சத்தியமூர்த்தியும் இணைந்து அந்த நிர்க்கதியான மக்களுக்காக இரவு பகலாக கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள்.

நான் வவுனியாவில் மேலதிக அரசாங்க அதிபராகவும் அரசாங்க அதிபராகவும் கடமையாற்றிய காலத்தில் அவர்களது மனிதாபிமான சேவையை நன்கு உணர்ந்திருந்திருக்கின்றேன். எந்தவிதமான சத்திர சிகிச்சைக் கூடங்களும் இல்லாமல் எந்தவிதமான விஷேட நிபுணர்களுமில்லாமல் தனித்த இரு மனிதர்களாக முழுமையாக மக்களுக்காகத் தங்களை அர்ப் பணித்துச் சேவையாற்றியிருந்தார்கள்.

மக்கள் இடம் பெயர்ந்து வவுனியாவை நோக்கி சாரி சாரியாக வந்துகொண்டு இருந்தபோது யார் வருகிறார்கள்? எப்படி வருகின்றார்கள் என்று எதுவும் தெரியாத நிலையில் அந்த மக்களை வவுனியா மாவட்டம் உள்வாங்கிக் கொண்டிருந்தது. ஓமந்தைச் சோதனைச் சாவடிக்குச் சென்று அந்த மக்களை நான் பார்த்திருக்கின்றேன். அவர்களது துயரக் கதைகளைக் கேட்டிருக்கின்றேன். கசப்பாக இருந்தாலும் உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டிய தருணத்தில் அதனை வெளிப்படுத்தித்தான் ஆக வேண்டும். அங்குள்ள அரசியல்வாதிகளிடம், ‘‘உங்களுக்கு வாக்களித்த மக்கள் அநாதைகளாக வந்து கொண்டிருக் கின்றார்கள். அவர்களை வந்து பார்க்க மாட்டீர்களா’’ என்று நான் அந்த மக்கள் படும் துயரத்தை விளங்கப்படுத்தி பல முறை வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். புதிலளிக்க முடியாத ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னுடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்ட சந்தர்ப்பங்களுமுண்டு.

இப்படிப்பட்ட அரசியல்வாதிகளுக்கு மத்தியிலே தங்களது அரச பதவிகளையும் உயிரையும் துச்சமாக மதித்து மக்களுக்காகச் சேவை செய்த இந்த இரு உத்தமர்களையும் ஒருபோதும் என்னால் மறக்க முடியாது. இவர்கள் பின்னாட்களில் கைது செய்யப்பட்டு சிறையிலே வாடினார்கள்.

வவுனியா பொது வைத்தியசாலையை மக்கள்மயமானதொரு வைத்தியசாலையாகத் தரமுயர்த்த வேண்டும் என்று பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோது தமிழ் அதிகாரிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்கின்றவர்கள் பார்வை யாளர்களாக இருந்தபோது விடுதலையாகி வந்த இந்த இரு இளம் வைத்தியர்களும் தங்களை மீண்டும் மக்களுக்காக அர்ப்பணித்துச் சேவையாற்றினார்கள்.

மூன்று இலட்சம் மக்கள் வவுனியாவுக்கு வந்து மூன்றரை வருட காலம் அகதி முகாம்களிலே தங்களது வாழ்நாட்களைக் கழித்து இன்று தமது பகுதிகளுக்கு மீண்டும் திரும்பிச் சென்றிருக்கின்றார்கள். ஒரு அத்தியாயம் எழுதப்பட்டு முடிந்து விட்டது. ஆனால் அத்தியாயத்தின் வேதனைகளும் வலிகளும் பலருக்கு மறந்து போயிருக்கின்றது. சில இடங்களில் மறைந்து போயிருக்கின்றது.

அவைகளையெல்லாம் வெளியில் சொல்லி அதனைச் சரித்திரமாக்கிச் சாதித்துக் காட்டியிருக்கின்றார் இந்த வைத்தியக் கலாநிதி உமாகாந் அவர்கள். வைத்தியர்களுக்கு மனங்களையும் மனதிலுள்ள ரணங்களையும் பார்க்கத் தெரிந்திருக்கின்றது என்பதை அவர் நிரூபித்திருக்கின்றார்.

எந்தத் துணிச்சலில் இந்த ஈழத்து வலியை எழுதினார் என்பது முதலில் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. இந்த நூலுக்கு அதிகார பூர்வமாக அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக என்னிடம் கூறியிருந்தார்.

விடுதலைப் போராட்ட மென்பது விவேகத்தையும் ஞானத்தையும் அடிப்படை யாகக் கொண்டதாக இருக்க வேண்டும். மனதில் தூய்மையும் உண்மையும் இருக்க வேண்டும். இத்தனை அழிவுகளுக்குப் பின்னாலும் காலமாற்றத்தையும் சர்வதேசப் போக்குகளையும் சரியாகப் புரிந்து கொள்ளாத தான்தோன்றித் தனமாக மேற்கொண்ட நடவடிக்கைகளே படுதோல்விக்குக் காரணமென்பதை நூலாசிரியர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

உலக மகா யுத்தத்தின் போது ஐரோப்பிய மக்கள் சந்தித்த துயரங்களும் அழிவுகளும் தங்களது எதிர்கால சந்ததியினர் அனுபவிக்கக் கூடாது என்பதனால் அந்த மக்கள் யுத்தத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்த அந்த நிலைமை இன்று எமது சமூகமும் வேதனைகளின் விழிம்பினூடே விழித்தெழ வைத்திருக்கின்றது.

அரசியலிலே யதார்த்தத்தையும் உண்மையையும் நேர்மையையும் கொண்டவர்களாக இந்த சமுதாயத் திற்கு வழி காட்ட வேண்டிய தேவை உணரப்பட்டிருக்கின்றது என்பதை இந்த ஈழத்தின் வலி சுமந்து நிற்கின்றது.

உலகத்திற்கு இந்த வலியை எடுத்தியம்பியிருக்கும் வைத்திய கலாநிதி உமாகாந்தின் இந்த ஈழத்த வலி நூலாக்கத்தைப் பாராட்டுவதோடு எனது ஆதரவையும் தெரிவித்தக் கொள்கின்றேன்.

இந்த நூல் ஆங்கிலத்திலும் வெளி வந்து உலகின் கண்களுக்கும் ஈழத்தின் வலியை உணரவேண்டும் என்பதே எனது அவாவாகும். தோல்வியின் காரணங்களையும் ஒரு புரிதலுக்காக உலகறியச் செய்ய வேண்டும்.

[04 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

## ஆவா கொடுத்த....

விரைந்து செயலில் இறங்கிய பொலிஸ் குழு, ‘ஆவா’க் குழுவின் தலைவராக இயங்கிய இணுவில் பிரதேசத்தைச் சேர்ந்த குமரேசரட்ணம் விணோதனைக் கைது செய்தது. அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து தொடர்ச்சியாக 13 இற்கும் மேற்பட்ட வர்கள் கைது செய்யப்பட்டதுடன், எஞ்சிய 15 இற்கும் மேற்பட்ட சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான முயற்சிகளை பொலிஸ் தரப்பு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 12 வாள்கள். இரண்டு கைக்குண்டுகள், மற்றும் 06 மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

30 பேர் கொண்ட இந்தக் குழுவினர் தமது இறுதிக் காலங்களில் மிகவும் மோசமான முறையில் மக்களைத் துன்புறுத்தி வந்ததாகத் தற்போது தகவல்கள் வெளியாகின்றன. இக்குழுவினர் வீதியால் செல்லும் போது எதிர்ப்படுபவர்கள் மடித்துக் கட்டப்பட்ட சாரத்தை அவிழ்த்து மரியாதை செய்ய வேண்டும் என்றும், தங்களைக் கண்டால் தலைக்கவசங்களைக் கழற்ற வேண்டும். என்றும் பலரிடம் வற்புறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மீது மட்டுமன்றி பொலிஸார் மீதும் இவர்கள் தமது கைவரிசையை ஆனைக்கோட்டைப் பகுதியில் காண்பித் திருக்கின்றார்கள். இவ்வாறு வாள்களோடு காட்டுமிராண்டித் தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த ‘ஆவா’க் குழுவின் ஒரு பிரிவினர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதன் மூலம் யாழ்ப்பாணத்தில்- உருவாகிய பாதாள உலக செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் பெருமைப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால் அதன் பின்னரும் இணுவில், வடமராட்சி பிரதேசங்களில் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இது, ‘ஆவா’வின் எச்சங்கள் இன்னும் மிச்சமாக வெளியில் இருக்கின்றன! அல்லது ‘ஆவா’ போன்ற பல குழுக்கள் செயற்படுகின்றன? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே, சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து அமுல்படுத்த வேண்டிய தரப்புக்கள் கைது செய்யப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதோடு இன்னும் வக்கிரபுத்தியுடனும் காட்டுமிராண்டித் தனங்களுடனும் சமூகத்தில் உலாவிக்கொண்டிருக்கின்ற எச்சங் களை மிச்சம் விடாது அடையாளம் கண்டு அழித்தொழிக்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலங்களின் கருத்தாக இருக்கின்றது.

# இலங்கை பத்திரிகை — முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சர்வதேச மாநாடு

(ஏ.எச்.ஏ. ஹவூஸைன்)

இலங்கை பத்திரிகை முறைப் பாட்டு ஆணைக்குழுவுக்கு 10 வருடங் கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு ‘‘சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை யும் ஒழுக்கநெறி அடிப்படையிலான அறிக்கையிடலும்’’ என்ற தொனிப் பொருளில் யுனெஸ்கோ அமைப் புடன் இணைந்து சர்வதேச மாநா டொன்று நடைந்துள்ளது.

இந்த மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, நோர்வே, சுவீடன், டென்மார்க், இந்தியா, பகிஸ்தான், நேபாலம், இந்தோனேசியா, மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளில் இருந்து பல பிரதிநிதிகள் பங்கு பற்றுவதோடு உள்நாட்டு ஊடக புலமைவாதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இம்மாநாடு 2014 ஜனவரி 13 ஆதம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இலங்கை பத்திரிகை முறைப் பாட்டு ஆணைக்குழுவின் கேட் போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கனடாவின் சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டொபி மென்தெல், அமெரிக்காவின் பிளட்ஸ்பேர்க் பல்கலைக்கழகத்தின் ஊடகத் துறைப் பேராசிரியர் திருமதி சகுந்தலா ராவோ, இந்தியாவின் சர்வதேச நிலையத்தின் பணிப் பாளர் திருமதி நந்தினி, யுனெஸ் கோவின் திருமதி இஸ்க்ரா பனெவ்ஸ்கா சஹாய் உட்பட இன்னும் பல உள்நாட்டு வெளி நாட்டு பேச்சாளர்கள் கலந்து கொண்டதாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முறைப் பாட்டு உத்தியோகத்தர் அமீர் ஹுசைன் தெரிவித்தார்.

## காட்டு யானை தாக்கி மூதாட்டி பலி!

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

காட்டு யானை தாக்கியதில் மூதாட்டி ஒருவர் கொல்லப் பட்டுள்ளார். இச்சம்பவம் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இத்திக் குளம் கிராமத்தில், கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தோப்பூர் பாட்டாளிபுரம் கிராம வாசியான 68 வயதுடைய தெய்வேந்திரம் ராசம்மா என்பவரே கொல்லப்பட்டவராகும்.

மூதாட்டி தோப்பூரிலிருந்து தனது கிராமத்திற்கு வந்து கொண்டிருந்த போது அவரை வழி மறித்த மேற்படி தனியன் யானை தாக்கிக் கொன்று விட்டுச் சென்றுள்ளதாக பாட்டாளிபுரம் கிராம சேவையாளர் ஐ.உமாகரன் தெரிவித்தார்.

தற்போது நிலக்கடலை, சோளம் போன்ற சேனைப் பயிர்களின் அறுவடை ஆரம்பித்துள்ளதால் காட்டு யானைகள் பிற்பகல் 3 மணியிலிருந்தே மக்கள் வாழும் சேனைப்பயிர்ச் செய்கைப் பகுதிகளுக்குள் ஊடுருவ ஆரம்பித்து விடுவதாக கிராம சேவை யாளர் ஐ.உமாகரன் மேலும் தெரிவித்தார்.



# மலரே மலரே



மன்னரின் மகளுக்கு
மணவாளன் தேவை!
சுயம் வரம் நடக்கிறது
மணமகளே நேரடியாக
சோதனை நடத்துவாள்!

முரசடித்து திக்கெட்டும்
செய்தி பரப்பினார்கள்!
இனிப்பான போட்டிதான்
தோற்றால் மட்டும்
உயிர் மிஞ்சாது!

இளவரசிக்கு கொடுக்க
வேண்டும் முத்தம்!
இனவரசியை முகம்
சிவக்க வைப்பவனுக்கு
பிணமாலை!

உயிர் போனால்
போகட்டும் ஒரு
முறையென்றாலும்
அவள் அதரத்தை உரசும்
பாக்கியம்போதும்!

சிரம் போனால் போகட்டும்
ஒரு முறையென்றாலும்
இதழில் சுரம்
மீட்டலாமே!

மன்னர்கள், இளவரசர்கள்
தளபதிகள் கூடினார்கள்!
பூவில் தேன் குடிக்க
வந்து குவிந்தன வண்டுகள்!

கள் குடிக்க கூலியெதற்கு?
ஒழுங்காகக் குடித்தால்
கூலியம் தரும்போது
கசக்கவோ செய்யும்?!

'முதல் ஆள் வரலாம்'
சேவகன் அழைத்தாள்
கட்டிளங்காளையாய்
மீசை முறுக்கோடு பாண்டிய
இளவரசன் கிட்டத்தட்ட
பாய்ந்து போனான்!

மயக்கும் விழிகளும்
மதன மேனியுமாய்
இனிக்கும் இளவரசி
தனியாய் இருந்தாள்!

இப்படி பேரழகியா?
'கண்டதுமே மயக்கம்
வருகிறதே உண்டதும்
என்னாருமோ?'

இளவரசனுக்கு இன்ப
அதிர்ச்சியில் உடல்
தள்ளாடியது! வேகத்தில்
தாவி அவள் முகத்தை
ஏந்தி இட்டான்
ஒரு ஆவேச முத்தம்!

பசித்த புலி
பாய்ந்தது போலிருந்து.
பயமுறுத்தும் முத்தத்தில்
நயமிருப்பதில்லை! முகம்
சுளித்தாள் இளவரசி!

பாய்ந்தனர் சேவகர்
மறுநொடியே சீவப்பட்டது
சிரம்! இரண்டாவதாக
வந்தது ஓர் மன்னன்!
இளம் வயதை எப்போதே
தொலைத்து விட்டவன்!

நெருங்கினான்.
ஏந்தினான் விரல்கள்
நடுங்கின இதழ்களில்
இறங்கினான். தன்னை
மறந்தவன் பற்களால்
கவ்வினான் மெல்லிதழ்
வலித்தது!

முகம் சுளித்தாள்
சினத்தோ! மன்னன்
தலை தேங்காயாக
உருண்டது!

அதன் பின் வந்தவன்
இளைஞனும் அல்ல
முதியவனும் அல்ல
இரண்டும் கெட்டான்.

காணாததைக் கண்ட
வேகம் முன் அனுபவமும்
இல்லை. முரட்டுக்
காளையாக இதழை
மிரட்டினான்!

'இவன் என்ன முத்தமிட
வந்தானா கொத்திப்போக
வந்தானா?' முகம்
சுளித்தாள் முத்தழகி.

இளநீராய் எண்ணி
சீவினர் சிரத்தை!
அடுத்தவனுக்கோ நடுத்தர
வயது. அனுபவம் உண்டு
பிரயோகிக்க
தெரியவில்லை!
எட்டிப் பார்க்கும் இரு சின்ன
முயல்களாய் விம்மித்
தணியும் அழகுகள் அவன்
ஆசையை தட்டிவிட்டன!

இதழை பற்றியவன்
மெய்மறந்து முத்தத்தோடு
சப்தமிட்டான்! இதமில்லாத
முத்தம் சித்தத்தை
கலைக்கும் சத்தம் வேறு!

முகம் சுளித்தாள் இளவரசி!
ஒரே வீச்சில்
உருண்டது தலை!
இளவரசி இப்போது
தரிப்பிடம் மாறினாள்.

தாமரை பூத்த தடாகத்தில்
இறங்கினாள்! ஒன்று மலர்
தாமரை இன்னொன்று
மனித தாமரை!

அடுத்து வந்தவனுக்கு
தான் ஒரு பேரழகன்
என்று நினைப்பு!

நளினமாய் நடக்க முயன்று
தடாகப் படிக்கட்டில்
தடுக்கி விழுந்தான்!
அத்தோடு
திரும்பியிருக்கலாம்
ஆசை சதி செய்தது!

தன் பலத்தை காண்பிக்க
இறுக்கி அணைத்தான்.
இதழை வதைத்தான்!
தள்ளிவிட்டாள்
முகம் சுளித்தாள்!

வாளுக்கு வேலை
தலை காலி!
பின்னரும் பலர் வந்தனர்.
சிரம் தந்தனர்!
முத்தமிடத் தெரியாமல்
உருண்ட தலைகள்
மொத்தம் முப்பது!
முப்பத்தொராவதாக
வந்தவன் குள்ளன்!
அழகும் இல்லை
ஆடம்பரமும் இல்லை!

'முத்தமிட முன்னரே
முகம் சுளித்து விடலாமா"
என்று யோசித்தாள்.
வந்தவன் அவளை
பக்குவதாய் நெருங்கினான்.

தடுமாற்றமில்லை.
அவசரப்படவில்லை.
அவள் கண்களை
நேராக நோக்கினாள்!

இதழ்களை தன்
விரல்களால் வருடினான்
இதழுக்கும் நோகாமல்
தன் விரலுக்கும் நோகாமல்
மெல்லிய வருடல்!

இளவரசி சிலித்தாள்
இதழ்கள் துடித்தன!
கன்னம் இரண்டை
கையிரண்டால் ஏந்தி
மெல்ல குனிந்து.
இதழ் சுவை அறிந்தான்!

முகம் சுளிக்க நினைத்தாள்
அகம் குளிர விழி மூடினாள்

நீண்ட நேரம் இதழ்கள்
மோதின! இரண்டறக்
கலந்தன! 'இவனே என்
மணாளன்!' இளவரசி
அறிவித்தாள்.

மலரைவிட
மென்மையாது காமம்!
அதனையறிந்தாள்
அவளை வென்றான்
பயனையும் அடைந்[illegible]!

**"மலரினும் மெல்லிது**
**காமம் சிலர் – அதன்**
**செவ்வி தலைப்படு**
**வார்"**

அதிகாரம்: 129 – குறள்: 1289




**சிந்தியா! சினிமா பாணியில் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்த 'ஆவா' குழுவினரின் அட்டகாசம் அடங்கிவிட்டதே...?**

**ம.அருள், கிளிநொச்சி.**

பணம் கொடுத்து சண்டியர்களை வளர்த்துவிட நம்மவர்கள் தயாராக இருக்கும்போது ஒரு ஆவா குழு போனால் இன்னொரு கூவாக்குழு உருவாகத்தான் செய்யும்.

**சிந்தியா! தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து விக்கினேஸ்வரன் விடுதலைக்கு உத்தரவாதம் அளித்துள்ளாரே?**

**மி.கமலன், மட்டக்களப்பு.**

புதுவருடத்தின் பிரபலமான நகைச்சுவை அதுதான். நீதிபதியாக அவரே தண்டனை வழங்கி உள்ளே அனுப்புவாராம். முதலமைச்சராகி விடுதலைக்காக உழைப்பேன் என்று உத்தரவாதம் கொடுப்பாராம். "பாவம்டா சாமி இந்தத் தமிழ்ச் சனம் இப்படி தலை எழுத்தை கண்ணாபின்னானு கிறுக்கிக் கொண்டு இருக்குதுகளே" என்று புலம்புவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும். ஒரு வேளை சட்டத்தில் ஏதாவது திருகுதாளம் செய்து அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் திட்டம் எதாவது ஐயா வைத்திருக்கின்றாரோ யாருக்குத் தெரியும். பொறுத்திருந்து பார்ப்போம். ஐயா தனது சட்ட அறிவை இங்காவது பிரயோகிக்கிறாரா என்று.

**சிந்தியா! ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச அழுத்தங்கள் அரசுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்துமென தகவல்கள் கூறுகின்றதே?**

**மு.அரவிந்தன், வவுனியா.**

உங்களுக்கு எந்த தேவாலயத்தில் கூறினார்கள்?

**என்ன சிந்தியா! பால்மா தட்டுப்பாடாக உள்ளதே..?**

**அ.ஷாமினி, யாழ்ப்பாணம்.**

செயற்கையான தட்டுப்பாடு என்றுதான் கூறுகின்றார்கள். விலை அதிகரிப்புக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் வியாபார யுக்தி இதுவாம். இந்த வாய்ப்பை பயன் படுத்தியாவது பசும்பால் பாவனையை மக்கள் பழக்கப்படுத்திக் கொண்டால், அது பால் மா வியாபாரிகளுக்கு ஒரு பாடமாக அமையும். நமக்குத்தான் பல்லுக்கு பல் உடைப்பதில் ஆர்வம் அதிகமாயிற்றே.

**சிந்தியா! அமெரிக்க நீதிமன்றத்துக்கு கட்டுப்பட்டால்தான் மீண்டும் அமெரிக் காவுக்கு இந்தியத் துணைத்தூதர் தேவயானி செல்ல முடியுமாமே..?**

**ஏ.சாந்தன், கொழும்பு – 06.**

அவரது பிள்ளைகள் அமெரிக்காவில் படிக்கின்றார்களாம். ஒரு தாயாக அந்தப் பிரிவு துயரமானதுதான். ஆனால் தவறுகள் திருத்தப்படுவதும், சட்டங்கள் மதிக்கப் படுவதும் அவசியமல்லவா இதில் தேவ்யாணியின் விவகாரம் வெளிப் படையாக விவாதிக்கப்படாமல், பிரிவுத் துயரை மட்டும் வெளிப்படுத்துவது அனுதாபத்துக்காகவா என்ற கேள்வியும் உள்ளது.

**சிந்தியா! பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை பெற்றுக்கொண்ட வெற்றி பற்றி..?**

**கி.லக்ஷன், மன்னார்.**

முன்னர் ஒரு காலத்தில் விளையாட்டு இரசிக்கப்பட்டது. இப்போதோ விளையாட்டு பொழுதுபோக்காக பார்க்கப்படுகின்றது. விளையாட்டு வெற்றி, தோல்வியை கற்றுக்கொடுக்கும் என்பார்கள். இப்போது விளையாட்டு பகைமையை, குரோதத்தை வளர்ப்பதாக மாறி வருகின்றது.

**சிந்தியா! இந்திய நாடாளு மன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்சினையின் தாக்கமும் முன்னிலை வகிக்குமென நினைக்கின்றீர்களா?**

**கி.அப்ஷரா, திருகோணமலை.**

இதுவரையும் அப்படி எதுவும் நடக்கவில்லை. இனியும் நடக்காது.

**நடிகர்கள் அடிக்கடி கிசுகிசுக்களில் மாட்டிக் கொள்கின்றனரே?**

**ந.நளாயினி, அம்பஹாமம்.**

அது தொழில் இரகசியம் அல்லது விளம்பர யுக்தி. அது தானாகவே நடக்கும் தடுக்க முடியாது.

**சிந்தியா! சிரிக்க ஒரு வரி. சிந்திக்க ஒருவரி சொல்லுங்கள்?**

**கி.ஜஸ்மின், மெஹூட்டுவ.**

சிரிக்க முதலமைச்சர், சிந்திக்க நீதிபதி


**சிந்தியா! ஆணின் காதலுக்கும், பெண்ணின் காதலுக்ளகும் உள்ள வித்தியாசம் என்ன?**

**சி.அஜனியா, மானிப்பாய்.**

வித்தியாசம் மனிதர்கள் சார்ந்தது. காதல் என்றும் மாறாதது. பெண்கள் காதலிக்கப்படுபவர்களாகவும், ஆண்கள் காதலிப்பவர்களாகவும் அமைந்தால் நல்லது என்பது காதலை காதலாக சுவைத்தவர்களின் அனுபவம்.




ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

**மலையாள மாந்திரிக சக்தி**

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்புக்களுக்கு...

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13. Tel : 011 2342463/4, 011 2470615
Fax : 011 2344831 E-mail : drpksamy@sltnet.lk

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33. தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை."

நான் சொல்லமாட்டேன். அதை மட்டும் நான் சொல்லமாட்டேன். நாட்டு நடப்பு நல்லா இல்லை நான் சொல்லமாட்டேன். நான் சொல்லமாட்டேன். அதை மட்டும் நான் சொல்லமாட்டேன்.

என்னாங்கோ, நீண்ட நாளைக்குப் பிறகு கந்தசாமி உந்தப் பாட்டைப் படிக்கு தெண்டு யோசிக்காதேங்கோ. உந்தப் பாட்டைப் படிக்கவேணும் எண்டால், ஒவ்வொரு வாரமும் படிக்கலாமுங்கோ. ஏனெண்டால், உந்தப் பாட்டுக்கு ஏற்ற சிற்றுவேசன் தானேங்கோ நாட்டு நடப்பா இருக்குதுங்கோ.

எனக்கொண்டும் ஆட்சேபனை இல்லையுங்கோ. தினமும் இந்தப் பாட்டைப் படிச்சுக் கொண்டும் சிரிச்சுக் கொண்டும் திரியமுடியும். என்ன என்னுடைய பாட்டைச் சகிக்கமுடியாமல், என்னையும் டெரராக்கி தூக்கிப்போட்டு விசாரிப்பாங்கள். ஏனுங்கோ நமக்கு ஊர்வம்பு எண்டுதானுங்கோ "மௌனம் தலை காக்கும்" எண்டு இருக்க முயற்சி செய்யிறதுங்கோ.

நாளாந்தம் நடக்கும் நாட்டு நடப்புக்கள் உருண்டு தொண்டைக் குழிக்கும், உ[illegible]ட்டுக்கும் இடையில உதைச்சுக் [illegible]ண்டுதானுங்கோ இருக்கும். உந்த உதைப்பை அடக்கமுடியாத கட்டத்தில தானுங்கோ உந்தப் பாட்டுப் படிக்க வேண்டியிருக்குதுங்கோ.

இப்ப பாருங்கோ யாழ்ப்பாணத்தில போனவாரம் "ஆவா" படையெண்டு ஒரு பாதாளக் கோஷ்டியை பொலிசார் பிடிச்சிருக்கினம். அவைதான் யாழ்ப்பாணத்தில வாள்வெட்டுக்கள், கண்ணாடி உடைப்புக்களைச் செய்து வந்திருக்கின முங்கோ. அவையளிட்ட இருந்து பயங்கரமான பல வடிவத்திலான வாள்களையும், அடிக்க உபயோகிக்கும் இரும்புக் கம்பிகளை இடித்து உடைக்கும் கையில் அணிந்துகொள்ளும் விஷேட கைப்பிடிகளையும் கைப்பற்றியிருக்கின முங்கோ.

அதுகளை விடுங்கோ. வாளும் பொல்லும் பொடியள்தானே செய்து கொள்ளுவி[illegible]ம் எண்டு சொல்லலாமுங்கோ. அதில [illegible]ரக கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டு இருக்குது எண்டதுதானுங்கோ. பல பேருக்கு புருவம் மேல தூக்குப்பட்டிருக்குதாமுங்கோ.

ஆவா குழுவில பத்து பொடியளும், ரெண்டு பெட்டையளும் பிடிபட்டிருக்கின முங்கோ. அவ்வளவுதானா எண்டால், இல்லையாமுங்கோ. உந்தக் குழுவோட தொடர்புபட்ட இன்னும் சிலபேர் விரைவில கைது செய்யப்படுவினமாமுங்கோ.

நாட்டில பல பாதாள உலகக் குழுக்கள் இருக்குது எண்டது ஒண்டும் ஆச்சரியமான விசயமில்லையுங்கோ. யாழ்ப்பாணத்தில பாதாள உலகக் கோஷ்டி எண்டதும், அதில பெட்டையளும் இருக்கினம் எண்டது தானுங்கோ சிந்திக்க வைக்குதுங்கோ. ஆயுதம் தூக்கிப் போராடின பெட்டையள் எண்டாலும் பரவாயில்லையுங்கோ. உந்த ஆவா குழுவில இருக்கிறவை முன்னாள் புலிகளோ எண்டால், அதுவும் இல்லையாமுங்கோ.

ஊருக்குள்ள சும்மா சுத்தித் திரிஞ்ச பொடியள் சின்னச் சின்னதாக சண்டித்தனம் காட்டி வந்திருக்கினம். பிறகு கூலிக்குக் கொலை செய்யிற அளவுக்கு வளர்ந்து இருக்கினமுங்கோ.

யாழ்ப்பாணத்தில அண்மைக்காலமாக வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருந்ததுங்கோ. இடையில பாதுகாப்புத் தரப்பையும் பொடியள் தாக்கின சம்பவங்கள் ரெண்டு, மூண்டு நடந்திருக்குதுங்கோ. உதுகளைப் பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில ஏதோ வில்லங்கம் விடியப்போகுதெண்டு நினைச்சனானுங்கோ. நினைச்சது போலவே வில்லங்கம் ஆவா வடிவத்தில விடிஞ்சிருக்குதுங்கோ. எனக்கென்னவோ ஒரேயொரு ஆவா படைதான் யாழ்ப்பாணத்தில இருந்த மாதிரித் தெரியவில்லையுங்கோ.

இன்னமும் பல பாதாளக் குழுக்கள் ஆவாப்படை போல இருக்குமெண்டுதான் தோணுதுங்கோ. ஊருக்குள்ள மோட்டார் சைக்கிளில திரியிற பொடியள் சண்டித்தனத் தோட தான் திரியினமுங்கோ.

முன்னம் வாள்வெட்டு நடக்கும்போதும், வீடுகளுக்குக் கல்வீச்சு நடக்கும்போதும், கண்ணாடிகள் உடைக்கப்படும் போதும் எங்கட சனமும், யாழ்ப்பாணத்து ஊடகங்களும் அந்தச் சம்பவங்களைச் செய்தது படைத்தரப்பினர் தான், இல்லாட்டி படைத்தரப்பு பின்புலமாக இருந்து இயங்கும் கூலிப் படைதான் எண்டிச்சினமுங்கோ.

இப்போது கூட ஆவாப் படைக்குப் பின்புலம் படைத்தரப்புத்தான் எண்டு சொல்லினமுங்கோ. எப்பிடிப் பார்த்தாலும், நடக்கிற அசம்பாவிதங்களுக்கும் படையினருக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துவது வடக்கில் இருந்து படையினர் வெளியேற வேண்டுமெண்ட கூட்டமைப்பின்ர நிகழ்ச்சி நிரலின்ர தொடர்ச்சிதான் எண்டும் சிலபேர் சொல்லினமுங்கோ.

இன்னொரு சாரார் என்ன சொல்லிகினம் தெரியுமோ? யாழ்.குடாநாட்டில இன்னும் சட்டவிரோத ஆயுதங்களும், கைக் குண்டுகளும் இருக்கத்தான் செய்யுதுங்கோ. ஒரு காலத்தில அயல் வீட்டுக்காரரோட பிரச்சினை எண்டால் அவரை மாற்று இயக்க சப்போட்டர் எண்டு போட்டுக் குடுத்திடுவினம். பிறகு அவரின்ர வேலியில கிளைமோரைப் பொருத்தி வெடிக்கவைக்கும் அளவுக்கு நிலைமை மாறி இருந்தது.

இப்போது அதுகள் மாறிப் போயிட்டுது எண்டு நினைச்சால், கூலிப் படையை வைச்சுக் கொலை செய்யிற கலாச்சாரம் வளர்ந்து நிக்குதுங்கோ. தங்கட பிரச்சினைக்குப் பரிகாரம் காண ஒரு சண்டியனை வளர்த்து விடுவதற்கு எங்கட சனம் காசு கொடுக்கத் தயாரா இருக்கினமுங்கோ.

இல்லாட்டால் என்னங்கோ, நாளைக்கு ஒரு கோவாப் படை தங்களுக்காக யாரையும் போட்டுத்தள்ள தயாராக இருந்தால் அதையும் ஏவிவிட சனம் தயாராகிடுவினமுங்கோ. பாவம் எங்கட சனம். பிரபாகரன் தொடக்கம் ஆவாப்படை வரைக்கும் சண்டியன்களைத் தேடிக் கொண்டுதானுங்கோ இருக்கினம். அதுகளைத் திங் பண்ணேக்க தானுங்கோ உதட்டையும் உதைச்சுக் கொண்டு உந்தப் பாட்டு வெளியில வருதுங்கோ.

நான் சொல்லமாட்டேன் அதை மட்டும் நான் சொல்லமாட்டேனுங்கோ.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

# விதியால் முடமான மதியாளர்



இவ்வளவு துன்பங்களுக்கும் ஆளானவர் ஆங்கில இலக்கிய வானிலே சுடர்விடும் தலைசிறந்த எழுத்தாளர், நாவலாசிரியர் எச்.ஜி.வெல்ஸ் அவர்கள்தான்!

முதல் ஐந்து வருஷங்கள் ஏதோ ஒரு வெறிகொண்டவர் போல எழுதிக் குவித்தார். தான் படைத்த கதைகள், கட்டுரைகள், நாவல்கள் எல்லாம் சுவையற்று, வளர்ச்சி இல்லாத பெண்ணைப் போல, கத்துக்குட்டி உருவாக்கியவைகளைப் போல இருப்பதை உணர்ந்தார். அதை உணரும் மனத்துணிவும் தெளிவும் அவரிடம் இருந்தன. ஆகவே ஆசையாகத்தான் ஆக்கிய படைப்புகளை எல்லாம் தீயிலிட்டுப் பொசுக்கினார்.

இந்த சீர்கெட்ட உடல்நிலையிலும் மறுபடி ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதுதான் எச்.ஜி.வெல்ஸின் உள்ளத்திலே கலைச் செல்வத்தோடு காதல் செல்வமும் வளர்ந்தது. பயோலஜி வகுப்பில் ஒரு அழகிய பெண் படித்தாள். அவள் பெயர் காதரைன் ராபின்ஸ் என்பது. பயோலஜி வகுப்பை நடத்துவதைவிட காதரைனுடன் பேசிக் கொண்டிருப்பதிலேயே இன்பங்கண்டார் வெல்ஸ். அவள் பலவீனமாக, வியாதிகாரி போல நோஞ்சானாகக் காணப்பட்டாள். இவரும் இதே நிலையில்தானே இருந்தனர். ஆகவே, இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்க்கையின் இன்பங்களை எல்லாம் அனுபவிக்கத் திட்டமிட்டனர். இருவரும் உடனே தம்பதிகளாயினர்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(16.01.2014 தொடக்கம் 22.01.2014 வரை)

## மேடம்

குடும்பத்தில் காரணமற்ற குழப்பங்களும் மனச்சஞ்சலமும் ஏற்பட இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலை விலைக்கு வாங்காதீர்கள். தந்தை- மகன் உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டு விலகும். வங்கிகளால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும் காலமாகும். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்ய எண்ணுவீர்கள். செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர் ஏற்பட இருப்பதால் எதிலும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். பழுதுபட்ட ஆலயப் பணிகளில் பங்குகொண்டு நற்பெயர் புகழ் அடைய வாய்ப்பு உள்ளது.

## துலாம்

கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். சம்பந்தம் இல்லாத நபர்களின் மூலம் பொருள்வரவுகள் உண்டாகும். புதிய வீடு, வாகனங்களை வாங்க வாய்ப்பு உள்ளது. காதலர்களுக்கிடையில் அந்நியோந்நியம் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்துவிளங்குவர். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். இதுநாள் வரையில் தடைப்பட்டுவந்த காரியங்களை மனத்தைரியமுடன் சற்று பிரயாசையுடன் செய்துமுடிப்பீர்கள். வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. மற்றவர்களை நம்பிப் பணம் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது.

## இடபம்

நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக வெகுதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். வராத பணம் மற்றும் பொருட்கள் பெரிய மனிதர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று திரும்ப வாய்ப்பு உள்ளது. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் நினைத்த இடத்திற்கு பணி இடமாற்றமும் ஏற்படலாம். பணத்தேவைகளுக்காக பூர்வீகச் சொத்துக்கள் சிலவற்றை விற்பதன்மூலம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

பொருளாதாரத்தில் இதுவரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி மனநிம்மதியும் சந்தோசமும் அடைவீர்கள். இதுவரையில் நெருக்கடியில் இருந்துவந்த பணத்தட்டுப்பாடுகள் நீங்கிப் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படும். காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் கிடைக்கும். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர்வரவுகளால் பொருள்வரவும் மனமகிழ்ச்சியும் வந்துசேரும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் இன்னும் சற்றுக்கால தாமதமாகவே தீரும். பொதுவாக இது ஒரு மனநிம்மதி தரும் வாரமாகும்.

## மிதுனம்

விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய விவசாயங்களின் மூலம் எதிர்பாராத நல்ல இலாபம் அடைவீர்கள். தந்தை - மகன் உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீரும். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக வெகுதூர உல்லாசப் பயணங்களை மேற்கொண்டு மன மகிழ்ச்சி அடைவீர்கள். உத்தியோகத்துறையினர்களுக்குப் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் செய்து ஏமாற்றம் அடையாதீர்கள். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். பொதுவாக இது ஒரு மனநிம்மதி நிறைந்த வாரமாகும்.

## தனுசு

கணவன், மனவி உறவுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லதாகும். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். விவசாயம் செய்பவர்கள் சற்று கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. வங்கிகளின்மூலமாக எதிர்பார்த்து இருந்து எதிர்பார்த்து இருந்த கடன் உதவித் தொகைகள் கிடைப்பதில் இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம். வெளிநாடுகள் சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி அடைவீர்கள். கடன்கொடுத்து இருந்த நீண்டகாலமாக வராத பணம் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும்.

## கடகம்

பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகளைக் குறைப்பதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். மனைவியின் உடல்நிலையில் சில பாதிப்புகள் ஏற்படுவதன் மூலம் மருத்துவசெலவுகள் உண்டாகலாம். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுத் தொண்டுகளில் கவனமுடன் பணியாற்றுவது சிறந்தது. தீராத நோய்கள் மற்றும் கடன் தொல்லைகள் தீர ஆலயவழிபாடுகளை செய்துவர எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றியைப் பெறுவீர்கள். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப் பழகிவிட்டுக் கொடுத்துப் போகுவதன்மூலம் மனம் நிறைவடைவீர்கள். நீண்டதூரப் பயணங்களைத் பயணங்களைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது.

## மகரம்

வெகுநாட்களாக காணாமல்போன பொருட்கள் காவல் துறையினர்களின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். உடல் நிலையில் கண், காதுகளில் கவனம் தேவை. மஹான்களின் தரிசனங்களால் மனநிம்மதி ஏற்படும். புதிய கடன்களை வாங்கினால் திருப்பி செலுத்த இயலாமற்போக வாய்ப்பு உள்ளதால் கடன்வாங்குவதை தவிர்க்கவும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவது நன்மையைத் தரும். வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். பெண்களிடம் கவனமாகப் பேசிப் பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளை தவிர்க்கலாம். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் வந்துபோகும்.

## சிங்கம்

கொடுக்கல், வாங்கல் தொழில் செய்பவர்கள் புதிய கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. குடும்பத்தில் சகோதர சகோதரி களால் பொருள்வரவும் மனமகிழ்ச்சியும் ஏற்படும். தேவையில்லாத புதிய நண்பர்களின் தொடர்புகளால் [illegible]ரச்சினைகளில் மாட்டிக் கொள்ள[illegible] உத்தியோக விசயமாகப் பணம் மற்றும் பொருட்களை கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லதாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்

மனத்தைரியமுடன் எடுத்த காரியங்களைச் சற்று முயற்சியுடன் செய்துமுடிப்பீர்கள். பொதுக் காரியங்களில் தலையிட்டு நற்பெயர் புகழடைய வாய்ப்பு உள்ள காலமாகும். தீராத நோய்கள் தீரவேண்டி நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்களை நடத்துவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. தாயின் உடல் பாதிப்புக்களால் மனஉளைச்சலும் பொருட்செலவுகளும் உண்டாகலாம். கொடுக்கல், வாங்கல் சம்பந்தம் ஆகிய பிரச்சினைகளில் உறவினர்களின் தலையிடுதலால் ஓரளவு மனநிம்மதி அடைவீர்கள்.

## கன்னி

சகோதர சகோதரிகளால் சிற்சில நன்மைகள் வந்துசேரும். மாணவர்கள் கல்வியில் மிகவும் கவனமுடன் பயின்றுவருதல் நல்லதாகும். கணவன் - மனைவி உறவுகள் நன்றாக இருக்கும். பூமி நிலம் சம்பந்தமான வழக்குகள் மற்றும் பிற வழக்குகளில் இருந்து விடுதலை கிடைக்கும் காலமாகும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவது நல்லது. குழந்தைகளுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்கும் காலமாகும். குடும்பத்தில் காரணமில்லாத மனக்கசப்புகளும் மருத்துவச்செலவுகளும் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுப்பணிகளில் பங்குகொண்டு மனநிம்மதி அடைவீர்கள். பயணங்களின் மிகுந்த கவனமுடன் இருக்கவும். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் தேவையில்லாத மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். கொடுக்கல், வாங்கலில் மிகவும் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. நண்பர்களுடன் பணப் பிரச்சினைகள் சம்பந்தமாக மனக்கசப்புகள் ஏற்படலாம். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் கிடைக்கும். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த உதவித்தொகைகள் கிடைக்க இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம். வடமேற்குத் திசையில் இருந்து நற்செய்திகள் வந்துசேரும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)



# திணறும் அறிவியல் நிபுணர்கள்


சாதாரணமாக ஒரு மின்விளக்குக்கு 500 முதல் 1000 மணிநேரங்கள் வரை எரியும் திறன் உண்டு. ஆனால் 112 ஆண்டுகளாக ஒரு மின்விளக்கு தொடர்ந்து எரிந்துகொண்டே இருக்கிறது. இதை உங்களால் நம்ப முடிகிறதா? அமெரிக்காவின் வடக்கு கலிபோர்னியாவில் உள்ள லிவர்மோர் என்ற தீயணைப்பு நிலையத்தில் தான் இந்த அதிசய மின்விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது. இந்த மின்விளக்கை உருவாக்கியவர் அடோல்ப் சைலெட் என்ற கண்டுபிடிப்பாளர்.

அடோல்ப் சைலெட் 2.5 வருடங்கள் கடுமையாக உழைத்து இந்த விளக்கை கண்டுபிடித்தார். அடோல்ப் சைலேடால் 1901ஆம் ஆண்டு எரிய வைக்கப்பட்ட இந்த மின்விளக்கு கடந்த 112 ஆண்டுகளாக எவ்வித பிரச்சினையும் இல்லாமல் தொடர்ந்து எரிந்துகொண்டே இருக்கிறது.



போலந்தைச் சேர்ந்த சாகசக்கலைஞரான அனஸ்டாஸியா தனது கேசத்தைப் பயன்படுத்தி 4 தொன் நிறையுடைய காரை இழுத்து புதிய சாதனை படைத்துள்ளார். அவர் பிரித்தானிய ஈஸ்ட்போன் கடற்கரையிலேயே மேற்படிக் காரை இழுத்து இந்த சாதனையை நிறைவேற்றியுள்ளார். அவர் ஏற்கனவே இத்தாலிய மிலான் நகரில் 53.4 கிலோகிராம் நிறையுடைய நபரொருவரை தனது கேசத்தை பயன்படுத்தி தூக்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாறிவரும் உலகில் மாற்றம் ஒன்று மட்டுமே மாறாதது என்பதற்கு அமைவாக சாதனைகளும் காலத்திற்கு காலம் கைமாறிக்கொண்டே இருக்கின்றது. அந்தவகையில் இப்போது அனஸ்டாஸியாவின் சாதனையைக் கண்டு வியப்படையும் நாங்கள் இச்சாதனையை முறியடிக்கும் அசகாயசூரனை எதிர்காலத்தில் பார்க்கப்போவது நிச்சயம்.



# சாதனை



# இது சாதனை அல்ல



இந்த படத்தில் நீங்கள் பார்க்கும் மனிதன் ஏதேனும் சாதனைகள் மேற்கொள்ள கிளம்பிவிட்டார் என்று நினைக்கின்றீர்களா? நிச்சயமாக இல்லை. இந்தியாவை சேர்ந்த இம்மனிதர் ஒரு மூட்டை தூக்கி மாத்திரம்.

வாழ்வாதாரத்துக்காக மூட்டைகளை தூக்குகின்றார். இவரை ரயில்வே மற்றும் பஸ் நிலையங்களில் காணமுடியும். ஒரு சுமையை தூக்கி பஸ்ஸின் மேல்தட்டில் வைக்கின்றபோது இவருக்கு 2 அமெரிக்க டொலர் பெறுமதியான பணம் கிடைக்கின்றது. இங்கு 150 கிலோ எடைக்கு குறைவில்லாத மோட்டார் சைக்கிளை தூக்கி பஸ்ஸின் மேல் வைக்கின்றார்.

பிரித்தானிய சப்போல்க் பிராந்தியத்தைச் சேர்ந்த மில்லர் என்ற நாயொன்று, கிறிஸ் மைக்கேல்ஸ் (வயது 68) என்ற கண்தெரியாத தனது எஜமானருக்கு வீதியைக் கடப்பதற்கு போக்குவரத்து சமிக்ஞை விளக்கை செயற்படுத்தும் உபகரணத்தை சரியான முறையில் செயற்படுத்தி எஜமானருக்கு கண்ணாக செயற்பட்டு வருவது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.







# பாதுகாவலன்

# மரதன் தம்பதியர்



அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த Alan Murray (வயது 68) மற்றும் அவரது பாரியாரான Janette Murray-Waklin (வயது 64) ஆகிய இருவரும் வருடம் முழுவதும் மரதன் ஓடி உலக சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

அதாவது இவர்கள் இருவரும் கடந்த 2013ம் ஆண்டில் ஒவ்வொரு நாளும் குறித்த நேரம் ஒதுக்கி மரதன் ஓடியுள்ளனர். இதன்படி தமது 366ஆவது மரதனை அவர்கள் நிறைவுசெய்யும்போது மொத்தமாக 15,000 கிலோமீற்றர்கள் தூரத்திற்கு ஓடியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜனவரி 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | தை 03 வியாழக்கிழமை (16.01.2014) | பக்கங்கள் IV | ஓசை – 107

## பொலிஸ் உத்தியோகத்தர் நெல்லியடி விபத்தில் மரணம்

(திருநெல்வேலி)

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலியிலிருந்து நெல்லியடிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பம் ஒன்றுடன் மோதியதையடுத்து பலத்த காயமடைந்த நிலையில் இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. நேற்று அதிகாலை இவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த சரவணபவன் கஜமாறன் (வயது - 25) என்பவரே மரணமடைந்தவராவார். (பா,137)

## அனலைதீவு, எழுவைதீவிற்கு 24 மணிநேர மின்விநியோகம்

### அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு பலன்



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தீவிர முயற்சியையடுத்து அனலைதீவு மற்றும் எழுவைதீவுப் பகுதிகளுக்கான 24 மணி நேர மின்விநியோகம் நேற்று முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், அப்பகுதிகளில் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

முன்னதாக அனலைதீவுக்கான 24 மணி நேர மின்விநியோகத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா (IV) ஆம் பக்கம் பார்க்க




# மீனவர் பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தை வெற்றி

### இருநாட்டு மீனவர்களை விடுவிக்கவும் இணக்கம்

(புதுடில்லி)

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்திய விவசாய அமைச்சர் சரத் பவார், வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளதாக கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்டு கடற்பகுதியிலும் அத்துமீறும் மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக இந்தியத் தலைநகர் புதுடில்லியில் அந்நாட்டு விவசாய அமைச்சர் சரத் பவாருடன் கலந்துரையாடுவதற்காக நேற்றைய தினம் அமைச்சர் ராஜித சேனாரத்ன அங்கு சென்றிருந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உடனடியாக நடைமுறைப் படுத்தப்படும் வகையில் இரண்டு நாடுகளிலும் தடுத்து வைக்கப் பட்டுள்ள மீனவர்களை பரஸ்பரம் விடுதலை செய்வதற்கு இந்திய மற்றும் இலங்கை அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இரு நாடுகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களுடன் அவர்களின் படகுகளையும் இன்று முதல் விடுவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழகத்தில் மட்டுமல்லாது ஆந்திர பிரதேஷ் மாநிலத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகளை விடுவிப்பது குறித்து முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பிலும் இந்திய அதிகாரிகளால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் மீனவர்களை விடுதலை செய்யும் நடவடிக்கையின்போது சகல மாநிலங்களிலும் ஒரே வழிமுறையைப் பின்பற்றுவது தொடர்பிலான யோசனை குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்டுள்ளது.

மீனவர் பிரச்சினை தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் (IV) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் பீரிஸ் இந்தியாவிற்கு

(கொழும்பு)

இம்மாத இறுதியில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் புதுடில்லிக்கு விஜயம் செய்வார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் மிக முக்கியமான சந்திப்பு ஒன்றை அமைச்சர் பீரிஸ் நடாத்துவார் எனவும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி தலைவர்களின் பதவிகளுக்கு ஆபத்தில்லை

### வருகிறது புதிய சட்டமூலம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் வருடாந்த வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் குறித்த மன்றங்களின் முதல்வர்கள், தவிசாளர்கள் தொடர்ந்தும் பதவியிலிருக்கலாமென்ற சட்டமூல வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டு தடவைகள் தொடர்ச்சியாக வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அதன் தலைவர்கள் பதவி விலகவேண்டுமென கடந்த 2013 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்த திருத்தப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

எனினும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ள சட்டமூல வரைவு நாடாளுமன்றில் அனுமதியளிக்கப்படும்போது அது மீளவும் 2012 ஆம் ஆண்டு இருந்த நிலைக்கு மாற்றமடையுமென அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் கடந்த 2013 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் பதவி விலகவேண்டும் (IV) ஆம் பக்கம் பார்க்க

### சர்வதேச பிடிவிறாந்து

## கிளிநொச்சி இளைஞன் பிரான்ஸில் கைது



(கொழும்பு)

பயங்கரவாத குற்றச்சாட்டில் சர்வதேச பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ள தமிழர் ஒருவர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸின் - பாரிஸில் உள்ள பொலிஸ் நிலையமொன்றுக்கு முறைப்பாடு ஒன்றை பதிவு செய்யச் சென்ற வேளை குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 35 வயதான ஜயநாதன் தர்மலிங்கம் (IV) ஆம் பக்கம் பார்க்க

## அனந்திக்கு புனர்வாழ்வு பாதுகாப்பு அமைச்சு கவனம்

(கொழும்பு)

வடமாகாண உறுப்பினர் அனந்தி சசிதரனுக்கு புனர்வாழ்வு அளிப்பது குறித்து பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக ஐலண்ட் தெரிவித்துள்ளது.

பிரிவினைவாதக் கொள்கைகள், கோட்பாடுகளை பிரசாரம் செய்வதனை தடுக்கும் நோக்கில் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இவ்வாறு புனர்வாழ்வு அளிக்கப்படாத சிலர் (IV) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய இழுவைப்படகுகளால் வருடாந்தம் 750 மில். இழப்பு

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவைப்படகுகள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்து வருவதால் ஒருவருடத்தில் எழுநூற்று ஐம்பது மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை இழக்கும் நிலை இலங்கை மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும் உலக (IV) ஆம் பக்கம் பார்க்க

புத்தாண்டின் மிகப்பெரும் பரிசு

# 618 இலட்சம்

கொவிசெத இந்த
வியாழக்கிழமை சுப்பர் பரிசு

## ரூபாய். 61,827,879.50

விவசாயிகளின் மேம்பாட்டுக்காக விவசாயத்துறையின்
அபிவிருத்தி செயத்திட்டத்திற்கு பங்களிக்கும் - கொவிசெத


உங்களையும் நாட்டையும் வளமாக்கும்

## தேசிய லொத்தர் சபை

C/3307

# வியர்வை சிந்துவதனூடாகவே எதிர்காலத்தை முன்னேற்றமுடியும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் எமது சமூகம் இரத்தம் சிந்தியதைப் போன்று இரத்தம் சிந்தாமல் எதிர்காலங்களில் வியர்வை சிந்தி முன்னேற்றம் காண வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில். நேற்றைய தினம் இடம் பெற்ற யாழ். மாநகர சபையின் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் தற்காலிக பணியாளர்களுக்கான நியமனங்கள் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் எமது மக்களுக்கு சரியான தலைமைத்துவம் இல்லாத காரணத்தினால் எமது மக்கள் இரத்தம் சிந்தியது மட்டுமன்றி விலைமதிப்பற்ற உயிர் களையும், உடமைகளையும் இழக்க வேண்டிய துர்ப்பாக்கியம் நிகழ்ந்தது.

இந்நிலையில் எதிர்காலங்களில் இரத்தம் சிந்தாது வியர்வை சிந்தி எமது சமூகம் முன்னேற்றம் காண வேண்டும். இதனூடாக ஒவ்வொருவருடைய வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுவதுடன் பலப்படுத்தப்படவும் வேண்டும்.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்பதற்கு அமைவாக பணியாளர்கள் ஒவ்வொருவரும் தமது கடமைகளை சிறப்பாகச் செய்ய வேண்டுமென்பது மட்டுமன்றி மேலதிகாரிகளுக்கு மதிப்பளித்து பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.

தவறான வழிநடத்தல்களுக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் இடம்கொடுக்காது சமூகத்தின் தேவையுணர்ந்து பணிசெய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு இரண்டு, மூன்று கிழமைக்குள் நியமனங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இதில், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மாநகர ஆணையாளர் பிரணவநாதன், அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.


## பெயர் மாற்றம்

திருகோணமலை தென்னமரவடியை சேர்ந்த சின்னையா தங்கவேல் (தேசிய அடையாள அட்டை இல. 530303594V) ஆகிய நான் 01.01.2014 இல் இருந்து எனது பெயரை சின்னையா தங்கவேலாயுதம் என மாற்றிக் கொள்கிறேன் என்பதை இத்தால் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறேன். (C/2598)


## அனுதாபம்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊர்காவற்றுறை அமைப்பாளரும், ஊர்காவற்றுறை பிரதேசசபை தவிசாளருமான ஆ.ஜெயகாந்தனின் (காந்தன்) தாயார் திருமதி. மருதனார் பார்வதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் நெடுந்தீவில் இயற்கை மரணம் எய்தினார்.

அவரது உற்றார், உறவினர்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம் என அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# கடற்றொழிலாளர் கூட்டமைப்பு இணையமென பெயர் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்பானது வடமாகாண கடற்றொழிலாளர்களின் இணையம் என்று பெயர் மாற்றம் பெற்று எதிர்காலத்தில் இயங்குமென தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் நேற்று தெரிவித்தார்.

தற்போது பெயர் மாற்றம் பெற்ற வடமாகாண கடற்றொழிலாளர்கள் இணையத்தில் நேற்று மதியம் 2.00 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜேசுதாசன் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்பின் மகாசபைக் கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது. இதன்போது, கூட்டமைப்பு என்ற பெயரை இணையமாக மாற்ற வேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கமைய நேற்று முதல் வடமாகாண கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்பு வடமாகாண கடற்றொழிலாளர்கள் இணையமாக செயற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (25)

# ஔவையார் நினைவுதினம்




தமிழ் சைவப் புலவர் ஔவையாரின் நினைவு தினம் வரலாற்று பதிவுகளாக இல்லாத நிலையில், தை பௌர்ணமி தினமான நேற்றைய தினத்தை நினைவு தினமாக கொண்டு வவுனியாவில் அமைந்துள்ள அவரது சிலைக்கருகில் அனுஷ்டிக்கப்பட்டது.

குமாரசாமி நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஔவையாரின் சிலைக்கு மலர் மாலை மற்றும் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் ஔவையார் பற்றிய உரைகளும் இதன்போது இடம் பெற்றன.

இந்த நிகழ்வில், வவுனியா நகரசபை செயலாளர் எஸ்.சத்தியசீலன், குமாரசாமி நற்பணி மன்றத்தின் தலைவர் தேசமான்ய சு.குமாரசாமி, கால்நடை வளர்ப்போர் சங்க தலைவர் எஸ். கந்தசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.





கிளிநொச்சி மலையாளபுரம் முத்துமாரியம்மன் ஆலயத்தில் பொங்கல் தினத்தன்று 1008 பானைகள் வைத்துப் பொங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் உள்ளிட்டவர்கள் அரிசியிட்டு பொங்கல் நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும், 1008 பானைகள் வைத்து பொங்குவதையும் காணலாம். (29)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 222 | திகதி 2014.01.14 | வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து

07 18 58 64 M

பரிசுத் தொகை ரூபா. 10,740,780/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 12 | 600,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 190 | 190,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 367 | 367,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8513 | 510,780/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4484 | 179,360/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 111079 | 2,221,580/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16143 | 322,860/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 10,740,780/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,391,580/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 10,958,340/-

2014.01.17ம் திகதி வெள்ளிகிழமை
அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது
நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும். நியத்த ஜய

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47 (C/3265) web : www.dlb.lk


# இரணைமடுகுள 94 ஆவது ஆண்டுநிறைவு கனகாம்பிகை ஆலயம் முன் பொங்கல்

## குடிநீர் திட்டத்திற்கும் எதிர்ப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் 94 பானைகளில் பொங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை பத்து மணிக்கு ஆலய முன்றலில் இரணைமடு விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் 94 பானைகள் வைத்து பொங்கல் இடம்பெற்றதோடு இரணைமடு கீழ் உள்ள 21 கமக்கார அமைப்புகளும் இரணைமடு யாழ்ப்பாணம் குடிநீர் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தங்கள் உழவு இயந்திரங்களில் எதிர்ப்பு பதாதைகளையும் கட்டியிருந்தனர்.

இதில் எம்மையும் எம் உறவுகளான யாழ். மக்களையும் நிரந்தரமாக பிரித்துவிடாதீர்கள், உங்கள் கருத்துகள் மூலம் எங்கள் நெஞ்சில் நஞ்சை விதைக்காதீர்கள், யாழ்ப்பாணத்திற்கான ஆற்று நீர்த்திட்டம் என்ற மாற்றுத்திட்டம் இருக்கும் போது அதனை நடைமுறைப்படுத்த முற்படாதது ஏன், சம்மதம் தெரிவிப்பதன் மூலம் எமக்கான புதைகுழியை நாமே தோண்டமாட்டோம், சொப்பிங் பாக்குடன் வந்த எமக்கு அதிகாரிகள் தரும் உதவித் திட்டம் இதுதானா, நீர் வழங்கல் வடிகாலமைப்பு பொறியியலாளர்களா? பொறியிடலாளர்களா? இது யாழ்., கிளி. மக்களின் பொறி, யாழ்ப்பாணத்தின் நீர் மாசடைதல் என்பதற்கு இரணைமடுநீர் எந்த வகையில் தீர்வாக அமையும்?, 36000 ஏக்கர் விளை நிலத்தில் 8000 ஏக்கர் செய்கை பண்ணப்படும் நிலையில் மேலதிக நீர் எனப்படுவது எது? போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

நிகழ்வின் இறுதியில் கிளிநொச்சி கமக்கார அமைப்புகளின் உப தலைவர் சிவபிரகாசம் தலைமையில் இரணைமடு யாழ். குடிநீர் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கூட்டமும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சேனாதிபதி சில்வா, கிளிநொச்சி பொலிஸ் பொறுப்பதிகாரி வீரசிங்க மற்றும் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (29)

# போர்க் குற்றங்களை முஸ்லிம்கள் நடுநிலையுடன் நோக்க வேண்டும்

## என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

யுத்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்களை முஸ்லிம்கள் நடு நிலையாக இருந்து பார்க்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேசம் இலங்கைக்கு கொடுக்கும் அழுத்தத்தினால் நாட்டில் இனங்களுக்கு இடையில் சகிப்புத் தன்மை ஏற்படுவதுக்கு பாரிய தடங்கலாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். கண்டி, மடவளை மதீனா தேசிய பாடசாலையின் அஷ்ரப் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற மீலாதுன் நபி விழாவில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் ஹக்கீம்,

போர் குற்றங்களுக்கான அமெரிக்காவின் தூதுவர் ராப் அண்மையில் இலங்கைக்கு வந்தபோது, நீதி அமைச்சர் என்ற வகையில் என்னையும் சந்தித்தார். அவர் என்னுடன் நடத்திய சந்திப்பின் போது தனது நோக்கத்தை நிறைவேற்றுவதில் அவர் உன்னிப்பாக இருந்தார். இருந்தாலும் நான் கூறிய சில வற்றையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

போர்க் குற்றம் தொடர்பில் சிலர் அது நடந்ததாகவும் மற்றும் சிலர் அப்படி ஒன்று நடக்கவில்லை என்றும் இரு முனைகளில் இருந்து கருத்து தெரிவிக்கின்றனர். ஆனாலும் முஸ்லிம்கள் நடு நிலையில் இருந்து இதனை பார்க்கவேண்டும். முஸ்லிமகளுக்கு எதிராக இன்று நாட்டில் நடக்கும் சம்பவங்களின் பின்னால் பாரிய சதித்திட்டம் உள்ளமை நன்றாக தெரிகின்றது.

ஹலால் சான்றிதழ் வழங்குவதை அகில இலங்கை ஜம்மியதுல் உலமா நிறுத்த வேண்டும் என பொதுபலசேனா கூறியது. குறித்த் செயற்பாட்டினை அகில இலங்கை ஜம்மியதுல் உலமா இன்று நிறுத்திய பின்னர் அந்த சபையை தடை செய்ய வேண்டும் என்று பொதுபலசேன கூறுகிறது.

இதன் மூலம் தெரியவருவது என்னவென்றால் இவர்கள் முஸ்லிம்களை தானாகவே சண்டைக்கு இழுப்பதாகும். இஸ்லாம் எங்களுக்கு நடு நிலைமையை வகிக்கவே கற்றுத்தந்துள்ளது. அவ்வாறான நாங்கள் இவ்வாறான சதித்திட்ங்களில் அகப்படக் கூடாது.

ஊடகவியலாலர்கள் தமக்கென்று ஒரு ஒழுக்கக் கோவையைத் தயாரித்துக் கொள்ள முன்வந்துள்ளனர். அதே போன்று முஸ்லிம்களும் தமக்கென்று ஒரு சுய ஒழுக்கக் கோவையை தயாரித்துக் கொள்ளவேண்டும். முஸ்லிம்களை கண்கானிக்க பொதுபல சேனாவுக்கோ அல்லது வேறொரு சமூகத்திற்கோ உரிமை இல்லை என மேலும் தெரிவித்தார்.

### அனந்திக்கு..

இருப்பதாகவும் அவர்களில் அனந்தி சசிதரனும் அடங்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புனர்வாழ்வு அளிக்கப்பட்டிருந்தால் அனந்தி சசிதரன் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக இவ்வாறான கடுமையான விமர்சனங்களை வெளியிட்டிருக்க மாட்டார் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அனந்தி சசிதரனை கைது செய்து புனர்வாழ்வு அளித்தால் சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அனந்தி சசிதரன் யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க முனைப்புக்களை உதாசீனம் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளதாக ஐலண்ட் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### உள்ளூராட்சி...

என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களின் எதேச்சாதிகார செயலைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே 2013 ஆம் ஆண்டு புதிய சட்டம் கொண்டுவரப்பட்டபோதிலும் சிலர் சுயலாப நோக்கம் கருதி உள்ளூராட்சி தலைவர்களை பதவிவிலக்கும் வகையில் குறித்த மன்றங்களின் வரவு - செலவுத் திட்டங்களை தோற்கடித்து வருவதாகவும் அவர்களின் இந்த செயற்பாட்டை தடுக்கும் வகையிலேயே சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கிளிநொச்சி...

கடந்த வியாழக்கிழமை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத வேலை வாய்ப்பு தொடர்பான விடயத்தில் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்ற சமயத்தில் பொலிஸார் இவரை உடனடியாக அடையாளம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜயநாதன் தர்மலிங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டுவரும் நபர்கள் பட்டியலில் இடம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவராவார்.

### மீனவர்...

பொருட்டு இரண்டு நாடுகளினதும் மூன்று பிரதிநிதிகள் வீதம், ஆறு பேர் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடனும், நேற்று முற்பகல் தாம் உள்ளிட்ட குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தியதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மீனவர்களின் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையில் எட்டப்படும் தீர்மானங்களுக்கு இந்திய அரசின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கும் என சல்மான் குர்ஷித் வாக்குறுதி அளித்ததாக அமைச்சர் கூறினார்.

மேலும் மன்னார்குடாவை சூழலுக்கு அமைவான பிரதேசமாக மாற்றும் செயற்பாடுகளுக்கு தேவையான நிதியுதவியை பெற்றுக் கொடுப்பதற்கும் இந்திய அரசாங்கம் விரும்புவதாக வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் குறிப்பிட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

சென்னையில் இந்த மாதம் 20 ஆம் திகதி இருநாட்டு மீனவர்களிடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் இலங்கை மீனவர்கள் கலந்து கொள்வார்கள் என்பதையும் அவர் பி.பி.சி. தமிழோசையிடம் உறுதிப்படுத்தினார்.

இந்த பயணத்துக்கு வட மாகாண கடற்தொழிலாளர்கள் இணையம் மற்றும் தேசிய மீனவர்கள் ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவை தெரிவித்துள்ள எதிர்ப்பை அவர் நிராகரித்தார்.

### அனலைதீவு....

ஆரம்பித்துவைத்தார். அதன் பின்னர் அங்கு உரையாற்றிய அவர்,

1991 ஆண்டு நானிங்கு வந்திருந்த போது இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டமானதொரு நிலையில் வாழ்ந்திருந்தனர். குறிப்பாக, உண்ண உணவுகூட இல்லாததொரு நிலை இங்கிருந்தது.

இன்று அந்த நிலை படிப்படியாக மாற்றப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த வளர்ச்சி போதுமானதாக இல்லை. இன்னும், இன்னும் முன்னேற்றம் வேண்டும். அந்த முன்னேற்றத்தை உங்களுக்கு உருவாக்கித் தருவதற்கே நாம் அன்றும், இன்றும் உங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டே உழைத்து வருகிறோம்.

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற குறிக்கோளுடன் செயற்பட்டு வருபவர்கள் நாம். எனினும் எமது மக்களின் தவறான தெரிவால் மாகாண சபை நிர்வாகம் எமக்குக் கிட்டவில்லை.

மாகாணசபை எம்வசம் கிடைத்திருப்பின் இப்பகுதிகள் மேலும் மேலும் துரித முன்னேற்றம் கண்டிருக்கும். இருப்பினும் உங்களுக்கான எமது பணிகள் முடங்கிப் போய்விடவில்லை. தற்போது எமக்கிருக்கும் பலத்தைக் கொண்டு முடிந்தளவிற்கு நாம் உழைத்து வருகின்றோம்.

அந்தவகையில் எங்கள் வசம் நிர்வாகப் பொறுப்பிருக்கும் மூன்று பிரதேச சபைகளுக்குமென தலா 100 மில்லியன் ரூபா வீதம் நாம் அரசிடம் பேச்சுவார்த்தை நடாத்தி பெற்றிருக்கிறோம்.

அதில் 20 மில்லியன் ரூபா அனலைதீவிற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பகுதியின் வீதிகளைப் புனரமைப்பதற்கும், கடைத்தொகுதியினை அமைப்பதற்கும், புதிய அம்பியுலன்ஸ் படகு கொள்வனவு செய்வதற்கும் இன்னும் சில அபிவிருத்தித் தேவைகளுக்கும் இந்நிதி பயன்படுத்தப்படும். இதுமட்டுமல்லாது ஜனாதிபதியுடன் மீண்டும் கலந்துரையாடி இவ்வருடமும் நிதியொதுக்கீடுகளைப் பெற்று இப்பகுதியின் ஏனைய அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்கவுள்ளேன்.

இந்தவகையில் இங்குள்ள மத, சமூகப் பெரியார்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடி, இப்பகுதியின் தேவைகளை இனங்கண்டு அவை துரிதகதியில் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து எழுவைதீவுக்கான 24 மணி நேர மின் விநியோகத்தை நேற்று மாலை அமைச்சர் ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், ஊர்காவற்துறை பிரதேச சபை பிரதி தவிசாளர் அல்பேட், யாழ்.மாவட்ட மின் அத்தியட்சகர் ஞானகணேசன், மின் அத்தியட்சகர் அருள்நாதன், மின்பொறியியலாளர் திருமதி கமலலோஜினி, உதவி மின் பொறியியலாளர் பவானந்தராஜா மற்றும் பிரதேச சபை பணியாளர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### இந்திய...

மீனவ சம்மேளனத்தின் சிறப்புப் பிரதிநிதியுமான ஹேமன் குமார நேற்று தெரிவித்தார்.

யாழில் அமைந்துள்ள வட மாகாண கடற்றொழிலாளர்களின் இணைய வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளினால் வடபுலத்து மீனவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் இந்தியாவில் நடைபெறும் பேச்சுவார்த்தை தொடர்பாக ஊடக சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

2002 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சமாதான நடவடிக்கைக்கு பின்னர் வடபுலத்து மீனவர்களுடன் இணைந்து அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக செயற்படுகின்றோம். தொடர்ந்து இன்றும் செயற்பட்டு வருகின்றோம்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாறான கலந்துரையாடலில் பங்குகொண்டு வருகின்றோம். 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாங்கள் இந்தியா சென்று மீனவர் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு முடிவுக்கு வரக்கூடியதாக இருந்தது.

2010 ஆம் ஆண்டு சென்றபோது இராமேஸ்வரம் தொடக்கம் நாகபட்டினம் வரையான கரையோரப் பிரதேசங்களின் மக்களைச் சந்தித்து உண்மையான நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தி ஒரு முடிவுக்கு வந்திருந்தோம்.

எந்தவித காரணத்தைக் கொண்டும் இந்திய இழுவைப் படகுகள் சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பிற்குள் உட்பிரவேசிக்கக் கூடாதென 2011 ஆகஸ்ட் 31 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

பேச்சுவார்த்தைகளின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்த ஆவணங்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் பணிப்பாளர் பத்திரணவிடம் கையளித்தோம்.

ஆனால் இலங்கை அரசாங்கம், எந்தவித காரணத்தையும் கொண்டும் மீனவர்களுடைய கலந்துரையாடலினூடாக எடுக்கப்படுகின்ற முடிவுகளை நாங்கள் கவனத்தில் எடுக்கமாட்டோம். அத்துடன், தாம் (இலங்கை அரசாங்கம்) அதற்கான முடிவுகளை எடுப்போம் என்று தெரிவித்திருந்தது.

நாங்கள் அப்பொழுது எடுத்த முடிவை இந்த அரசாங்கம் தற்போது எடுத்திருக்கின்றது. மீனவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினைக்கான சரியான ஒரு முடிவினை நோக்கிச் செல்ல முடியும்.

மீனவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்குமாறு நாங்கள் அன்றே சொல்லியிருந்த விடயத்தினை செவிமடுத்திருந்தால் தற்போது இந்நிலை ஏற்பட்டிருக்காது.

தற்போதைய கலந்துரையாடல் (புதுடில்லி) தொடர்பில் நாங்கள் மகிழ்வடைகின்ற அதேவேளை கவலையும் அடைகின்றோம். பல வருடங்களாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன் நின்று உழைத்த பல மீனவர் சங்கத்தலைவர்கள் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு பலகால அனுபவங்கள் உள்ளன. இதனால் அவர்களிடம் இருந்து ஆலோசனைகளைப் பெற்றிருக்கலாம்.

அவர்களை ஒருபக்கம் ஒதுக்கிவைத்துவிட்டு புதிய குழுக்களை வைத்து பேச்சுக்களில் ஈடுபடுவது கவலைக்குரிய விடயமாகும். புதிய குழுவை பேச்சுக்களில் ஈடுபடுத்தினாலும் கூட அனுபவமிக்கவர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கலாம். எந்த எந்த விடயங்களைக் கதைக்கவேண்டும் என்று முடிவெடுக்கப்படாமல் செல்வதுதான் தோன்றித்தமானது.

இந்தியாவிலுள்ள தென்னிலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றாலும் இன்று (நேற்று) புதுடில்லியில் நடைபெறுகின்ற மாநாடு அவர்களை விடுதலை செய்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டதாக இருந்தால் அதனை ஏற்க முடியாது.

அத்துடன், வெளிநாட்டுப் படகுகள் குறிப்பாக சீனப்படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்து தொழில்களில் ஈடுபட்டு வருகின்றமை முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது.

அதேநேரம் ஒரு இரவில் 35 ரூபாவால் எண்ணை விலை அதிகரிக்கப்பட்டமை பாரிய பிரச்சினையாகவிருந்தது. இதற்காக மீனவர்கள் போராட்டங்கள் நடைபெற்றன. 2012 ஒக்ரோபர் மாதம் இதற்கு நிவாரணம் வழங்குவதாக அரசாங்கம் அறிவித்தது. இருந்தும் அந்தப் பிரச்சினை இன்றும் வலுவாகவே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.